# ஜீவி

## கவிதைகள்

அகநி
வெளியீடு

வெளியீடு: 180

***ISBN :***

**ஜீவி கவிதைகள்**

@ ஜீவி

முதல் பதிப்பு: மே - 2024
பக்கங்கள்: 320

வடிவமைப்பு: கனிஷ் கிராபிக், மதுரை

அச்சாக்கம்: எம்.வி.ஆப்செட் பிரிண்ட்ஸ்,
சென்னை - 600 005

வெளியீடு: அகநி வெளியீடு,
எண்: 3, பாடசாலை வீதி,
அம்மையப்பட்டு, வந்தவாசி - 604 408.
திருவண்ணாமலை மாவட்டம்.
பேசி: 94443 60421
மின்னஞ்சல்: *akaniveliyeedu@gmail.com*

**GEEVEE KAVITHAIGAL**

@ Geevee

First Edition: May - 2024

Pages: 320

Design: Kanish Graphic, Madurai.

Printing: M.V.Offset prints, Chennai - 600 005

Published By: AKANI VELIYEEDU,
No: 3, Padasaalai Street, Ammaiyapattu,
Vandavasi - 604 408
Thiruvannamalai - Dist.
Cell: 94443 60421
Email: akaniveliyeedu@gmail.com

# சுகத்திற்காக... கவிதைக்காக...

**தை**ப் பொங்கலுக்கு ஒரு மாதம் முந்தியே அம்மா கடகமும் மம்பட்டியுமாய் ஊருணித் திடலுக்குப் போகும். வேர்க்க வேர்க்க மண்ணை வெட்டித் தலையில் சுமந்து வந்து வாசலில் போடும். திடல் மண் மாவாயிருக்கும். குழைத்தால் சந்தனந்தான். வீட்டில் தீத்துக் கல் பத்து எண்ணிக்கைக்கு மேலுண்டு. சுவரில் பாகம் பாகமாய்ப் பூசிக் கல்லால் தீத்தும். படம் வரைகிற நேர்த்தியில் அம்மா சுவர்முன் நிற்கும். தீத்தித் தீத்தி மண் சுவர் பட்டுப் போல் பிரகாசிக்கும். அப்புறம் தரைக்கு மண் பூசும். மண்டியிட்டு ஒரு பூனைக்குட்டியோடு பேசுவது போலிருக்கும் அம்மா தரையில் புது மண் மெழுகுவது. தீத்துக் கல்லால் தீத்திக் கொண்டேயிருக்கும் பகல் பூராவும்.

வீடு பூராவும் தீத்தி முடித்ததும் அம்மாவின் வலது கை விரல் நுனிகள் தேய்ந்து ரத்தம் வருவது போலிருக்கும். பொங்கலுக்கு ஒரு வாரமிருக்க, அம்மா மச்சிலிருந்து ஒரு பித்தளைப் பட்டினஞ் சட்டியை எடுத்துத் துடைக்கும். இந்த வேலை செய்ய அம்மாவுக்குப் பிடித்த நேரம் விடிகாலை. மண்ணைக் குழைத்து சட்டியில் அடைத்துக் கவிழ்க்கும். அப்படி ஆறு கட்டிகள். ஏழு நாட்களுக்கு வெயிலில் காய்ந்து கொண்டிருக்கும் இந்தப் புது மண் கட்டிகளை மூன்று மூன்றாய்ச் சேர்த்தால் இரண்டு அடுப்புகள். ஒன்று சர்க்கரைப் பொங்கலுக்கு; இன்னொன்று வெற்றுப் பொங்கலுக்கு.

பொங்கலுக்கு இரண்டு நாளிருக்கையில் அம்மா அரிவாளோடு தெற்கே போகும். குட்டிப் பனைகளிலிருந்து பச்சை ஓலைகளை வெட்டி, ஒரு கட்டாய்த் தூக்கி வரும். சின்னச் சின்னக் கீற்றுகளாய் வெட்டி முற்றம் பூராவிலும் காயப் போடும்.

சுப்பு வேளாரிடம் சொல்லி வைத்துப் புதுப் பானைகள் வாங்கி வரும். முயலின் காதைப் பிடித்துத் தூக்குவது போல் பானையைத் தூக்கித் தட்டிப் பார்க்கும். பொங்கலுக்கு முதல் நாள் ராவில் கோலத்திற்கு மாவு அரைக்கும். விரலில் சொட்டு விட்டு அழகு பார்க்கும். பொங்கலன்று காலையில் கண் இமைக்காமல் பார்க்க வேண்டும் போலிருக்கும் வாசல் கோலம். கிராமத்தில் பொங்கல் சாயங்காலம் தான். மேகாட்டுக் காற்றுக்கு வாசல் அடுப்பில் பச்சை ஓலை கண கணவென்று மணந்து எரியும். பானையில் பால் பொங்குகையில் அம்மா சங்கீதமாய்க் குலவையிடும்.

இந்த ஒரு மாதத்தில் ரெண்டாயிரம் தடவையாவது அம்மா முந்தானையில் வேர்வை துடைத்திருக்கும்.

இலையில் பொங்கலை வைத்து விட்டுச் சொல்லும், "ராத்திரி பூராவும் இஞ்ச விட்டுக் காலையில் பொங்கல் சாப்பிட்டால்தான் ருசி."

விடியற்காலையில் அறைக் கதவைத் திறக்க, புது மண், புதுப்பானை, மஞ்சள், கரும்பு, பொங்கல், பழம், பூ எல்லாம் கலந்த ஓர் அபூர்வக் கதம்ப வாசம் வரும். அம்மா ஒரு விநாடி அந்த சுகத்தில் சொக்கி, அடுத்த விநாடியில் பொங்கல் பானையைத் திறக்கும்.

**'ஒரு சுகத்திற்காகக் கஷ்டப்படுவதும்**
**ஒரு கவிதைக்காக அவஸ்தைப்படுவதும் அவசியமானவை.'**

இந்தக் கவிதை நூலுக்காக ஜீவி, அப்படியொரு அவஸ்தைப்பட்டிருக்க வேண்டும்.

**'அந்தக் கண்களில்**
**மாட்டிக் கொண்டேன்**
**மனசோடு.**
**இப்போது நான்**
**இரண்டாவது மனிதன்**
**நான்**

இருந்த வீடுதான்
பழகிய வீதிதான்
இப்போது
அரண்மனையாகவும்
ராஜ வீதியாகவும்
ரசவாதமாகியுள்ளது.

அந்த வானவில்
வருகிற நேரமெல்லாம்
எனக்குள் சில
மேகங்கள் முட்டிக் கொள்கின்றன.

இப்போது
நிமிஷத்தின் நீளம்
குறைந்து விட்டதோ
என்று யோசிக்கிறேன்.'

*- என்று அழகாய்ச் சொல்லும்போது அவர் அனுபவங்கள், பட்ட அவஸ்தைகளெல்லாம் தெரிகிறது. இந்தத் தொகுப்பில் என்னை மிகவும் கவர்ந்த கவிதை இது.*

'கையில் காசில்லை
நட்சத்திரங்களைத் தான்
எண்ண வேண்டும்.'

*சோவியத்தில் சோஷலிச அமைப்பு சிதைவுண்டதை எல்லா அரசியல்வாதிகளும் எவ்வளவோ விதங்களில் விமர்சித்தார்கள். வாழ்க்கையை அதன் ஆழ அகலத்திற்குச் சென்று உற்றுக் கவனிக்கும் ஒரு பொறுப்பு மிகுந்த கவிஞனின் மிக உயர்ந்த விமர்சனம் - எளிய வார்த்தைகளில் இது.*

'அம்மா சாவுக்கு
சிரிக்கும் குழந்தையாய்
மாஸ்கோவாசிகள்.'

*அதே ஆழத்தோடு நேராக நின்று சொல்லி அழ வைக்கும் செறிந்த வரிகள் இவை:*

‘ஆளான நாள் முதலா
ஆத்தாளின் பழம் புடவ
தனித் துணியே எடுத்ததில்லை
தங்கச்சிக்கு என் கிழிசல்.’

ஜீவி, தன் கவிதைகளால் தமிழகமெங்கும் அறிமுகமானவர். இப்போது வழக்காடு மன்றம், பட்டி மன்றம் என்று விரித்துச் சென்று கொண்டிருக்கிறார்.

புதுக்கோட்டையிலும் அறந்தாங்கியிலும் தெருக்களில் ஜீவி நடந்து வருகையில் ஒரு மாய ஊதுகுழலில் மயக்கும் இசைஞரைப் போலிருப்பார். பின்னால் ஒரு இளைஞர் பட்டாளம் ராத்திரி பனிரண்டு மணிக்கும் வரும். யாரோடும் நெருங்கி விடுவார். தோள் மேல் கை போட்டுப் பேசும், நடக்கும் அழகுக்கு இணையான அழகு அவரது கவிதைகளே.

அவர் சார்ந்த தொழிற்சங்கம், அறிவொளி இயக்கம், த.மு.எ.ச. என்று எங்கும் அவர் பணிகளும் நண்பர்களும் தோழர்களும். சிற்றிதழ்கள், பேரிதழ்கள், வானொலி என்ற எங்கும் கவிதை சொன்னவர். இப்போதுதான் கவிதைகளை நூலாக்க நேரம் வாய்த்திருக்கிறது.

மனிதன் எவ்வளவுதான் அறிவாளியாக, சமூகப் பொறுப்புள்ளவனாக, சிநேகமாக இருந்த போதிலும் கிண்டலும் கேலியும் தெரியாதவன் வாழ்க்கையைச் சரி வர விமர்சித்து விட முடியாது. எல்லாவற்றிலும் சிறந்த எங்கள் ஜீவி இந்தக் கிண்டலிலும் சமர்த்தர். இதிலுள்ள ‘மரம்’ என்ற கவிதையை நீங்கள் அவசியம் படிக்க வேண்டும்.

‘ஒரு சிறுகதை இருக்கிறது – அதில்
ஒரு விஞ்ஞானம் இருக்கிறது – அதில்
ஒரு அபூர்வக் கிண்டல் இருக்கிறது – அதில்
ஒரு அழகான ஜீவி இருக்கிறார் – அதில்.’
நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும். படிக்க வேண்டும்.

அன்புடன்,

புதுக்கோட்டை

**கந்தர்வன்**

# அரை நூற்றாண்டு தமிழ்க் கவிதை முகம்

இதை நான் எழுத முனைந்த கணத்தில், எதைப் பற்றி முதலில் எழுதுவது என்கிற கேள்வியே என்னுள் எழுந்தது. கவிஞரைப் பற்றி எழுதுவதா? அல்லது அவரது கவிதைகளைப் பற்றி எழுதுவதா? இந்த இரு கேள்விகளுக்குமான ஒரே பதில் எனக்கு உடனே கிடைத்துவிட்டது. ஜீவியைப் பற்றி எழுதினாலும், அவரது கவிதைகளைப் பற்றி எழுதினாலும் இரண்டும் ஒன்றே. ஆம்; ஜீவியும் கவிதையும் வேறுவேறல்லவே!

கவிஞர் ஜீவியுடனான எனது நட்பு ஒரு தலைமுறையைக் கடந்தது. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலான நட்பது. சந்தித்த முதல் நாளில் முகம் பார்த்துப்பூத்த புன்னகையும், பற்றிக்குலுக்கிய கைகளின் இறுக்கமும் சற்றும் குறையாமல் எங்கள் இருவருக்குள்ளான நட்பென்பது இன்னமும் நெருக்கமாகிக் கொண்டேயிருக்கிறது.

ஜீவியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவரது கவிதை வரிகளும், அவரது கவிதைகளைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஜீவியின் முகமும் எனக்குள் எப்போதும் மின்னலென வந்துபோகும். ஜீவியிடமிருந்து கவிதையைப் பிரிக்க முடியாததைப் போலவே, கவிதையிடமிருந்தும் ஜீவியை ஒருபோதும் பிரித்துவிட முடியாது.

80-களின் இறுதியில் தமுஎச மூலமாகத்தான் ஜீவியின் அறிமுகம் எனக்குக் கிட்டியது. 90-களின் தொடக்கத்தில் அறிவொளி இயக்கத்தில் இணைந்து பணியாற்றிய காலங்களில்

தினந்தோறும் ஜீவியைச் சந்தித்துப்பேசும் வாய்ப்பும் அமைந்துபோன வசந்த காலமது. காலை, மாலை, இரவு, நள்ளிரவு என எப்போதும் பேச்சும் பகிர்தலுமாக எங்களது பணிகளைத் தொடர்ந்தோம்.

வாரந்தோறும் ஜீவியோடு திருச்சிக்குச் சென்று, 'தினந்தந்தி' நாளிதழோடு சேர்ந்து, 'அறிவொளிப் பூங்கா' எனும் இரு பக்கங்களை வடிவமைத்து வெளிக்கொண்டு வந்தோம். ஜீவி ஒருநாளும் பயணங்கள் குறித்து அலுத்துக்கொண்டதேயில்லை என்பது இன்றுவரைக்கும் தொடரும் அவரைப் பற்றிய ஆச்சரியங்களுள் ஒன்று.

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்க அலுவலகத்தில் பணிகளை முடித்து நள்ளிரவுக்குப் பின்னர் தான், பேருந்து ஏறி அறந்தாங்கிக்குச் செல்வார். மீண்டும் மறுநாள் காலையில் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் சந்திக்கையில் அதே உற்சாகம்; அதே குதூகலம்; பகிர்ந்து கொள்வதற்கான புதிய கவிதையொன்றோடு வந்துநிற்பார். அதுதான் எங்கள் ஜீவி.

ஜீவியும் நானுமாகப் பயணித்த ஒவ்வொரு பயண அனுபவங்களுமே தனிக் க(வி)தையென நீளும். எத்தனையெத்தனை இலக்கிய நிகழ்வுகளுக்கு, கலை இரவுகளுக்கு இருவருமாகச் சென்று வந்துள்ளோம். புதுக்கோட்டையில் ஜீவி இருந்தால் அவரோடு நானுமிருப்பேன். இருவரையும் சேர்ந்தே தான் பார்க்கலாம். நான் தனியாகச் செல்லுகையில், "எங்க உங்க கவிஞரைக் காணோம்?" என்று கேட்டவர்களே அதிகம்.

அருகிலேயேயிருக்கும் என் அக்காக்களின் ஊர்களுக்குக்கூட மிகுந்த தயக்கத்தோடு தான் செல்வேன். ஆனால், எவ்வித முன்திட்டமிடலுமின்றி திடீரெனப் புறப்பட்டு, அறந்தாங்கியில் ஜீவி தங்கியிருக்கும் அறைக்குப் போய் விடுவேன். எப்போதும் ஆறேழு நண்பர்கள் புடைசூழ பேச்சும் சிரிப்பும் கொண்டாட்டமுமாக இருந்தால் ஜீவி அறையில் இருக்கிறார் என்று அர்த்தம்.

ஜீவி அறையிலிருக்கும் கவிதை நூல்களை யார் வேண்டுமானாலும் எடுத்துச்சென்று படிக்கலாம். எத்தனை நூல்களை எடுத்தாலும் எதுவும் சொல்ல மாட்டார். 'இதையும் படிங்க..' என்று அவரும் ஒரு நூலை எடுத்துக்கொடுப்பார். ஜீவியின் அறையிலிருக்கையில் வேறொரு இடத்தில் இருக்கிறோம் என்கிற

அந்நிய தன்மையில்லாமல் நண்பர்களின் கம்யூனில் இருப்பது போன்ற உணர்வே மேலோங்கும். ஜீவியோடு பழகுவதும், ஜீவியின் கவிதைகளைப் படிப்பதும் என்னைப் புதுப்பித்துக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவே இன்றைக்கும் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

என் பார்வையில் ஜீவி ஓர் அற்புதமான மனிதர்; எல்லோரோடும் பகிர்ந்துகொள்ள முகம் முழுக்கப் புன்னகையோடும், மனம் முழுக்க கவிதைகளோடும் இயங்கிக்கொண்டேயிருக்கும் இலக்கிய அதிசயமாகவே என்றென்றுமாக இருக்கிறார் ஜீவி.

கவியரங்கம், பட்டிமன்றம், உரைவீச்செனத் தமிழகமெங்கும் சுற்றிச் சுழன்று வருபவர் கவிஞர் ஜீவி. தமிழிலக்கிய வெளியில் அனைவரும் நன்கறிந்த பெயர் ஜீவி. ஜி.வெங்கட்ராமன் எனும் இயற்பெயரினைப் பலரைப்போலவே, ஜீவியும் எப்போதோ மறந்துபோயிருப்பார்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் கறம்பக்குடி அருகேயுள்ள நெய்வேலி எனும் கிராமத்தில் கணேசன் - மதுரம் பெற்றோரின் மகனாகப் பிறந்தவர் ஜீவி. ஆரம்பப் பள்ளியில் படிக்கையிலேயே புத்தக வாசிப்பில் உண்டான ஈடுபாடு, கவிதை எழுதுவதற்கும் மேடையில் பேசுவதற்குமான ஆர்வத்தைத் தூண்டியது. எட்டாம் வகுப்புப் படிக்கையில் ஜீவி எழுதிய கவிதையொன்று ‘முயல்’ சிறுவர் இதழில் பிரசுரமானது. பின்னர், 1978-இல் பதினோராம் வகுப்பு படிக்கையில் புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆண்டு மலரிலும் கவிதைகள் வெளியாகின. பள்ளிக் காலத்திலேயே பேச்சுப் போட்டியிலும், கவிதைப் போட்டியிலும் பல முதல் பரிசுகளை வென்று, நட்சத்திர மாணவராகப் பாராட்டப் பெற்ற ஜீவி, பின்னாளில் தமிழகம் கொண்டாடும் படைப்பாளுமையாக வலம் வரப்போகிறார் என்பதை அறிந்தேயிருந்தது காலம்.

ஜீவி எழுதிய பல கவிதைகளை அவரது சுருள் சுருளான கையெழுத்திலேயே படித்த முதல் வாசகன் நான். தனது கவிதைகளை ஜீவி தாளில் மட்டும் எழுதுவதில்லை. மனதிலும் சேர்த்தே எழுதிக்கொள்வார். பிறகு ஒருபோதும் அதை மறக்கவே மாட்டார். ஜீவி எழுதிய கவிதைகளை எந்த மேடையிலும் வரி மாறாமல் அப்படியே சொல்லி, கைத்தட்டல்களைப் பெறுவதை வியந்து பார்த்தவர்களுள் நானுமொருவன்.

ஜீவியின் பல கவிதைகள் எனக்குப் பிடித்தமானவை என்றாலும், ஒருமுறை ஜீவியின் குரலிலேயே கேட்டு, இன்றுவரை

பல கூட்டங்களிலும் எனது கட்டுரைகளிலும் மேற்கோளாகச் சுட்டப்பெற்ற ஜீவியின் புகழ்பெற்ற ஹைக்கூவிது;

**'சுட்ட அப்பளம்**
**சுற்றிலும் பருக்கைகள்**
**பட்டினி ராத்திரி.'**

என்றாவது இரவு வானத்தை நிமிர்ந்து பார்க்கும் வேளையில் என் மனசினோரமாய் வந்துநிற்கும் இந்தக் கவிதை. இனி, இதை வாசித்த உங்களின் மனங்களிலும் இந்த ஹைக்கூ, ஸ்டிக்கரென ஒட்டிக்கொள்வது உறுதி.

1993-ஆம் ஆண்டில் வெளியான 'வானம் தொலைந்து விடவில்லை' எனும் ஜீவியின் முதல் கவிதை நூல் தொடங்கி,

2022-ஆம் ஆண்டில் ஒன்பதாவது கவிதை நூலாக வெளியான 'ஊற்றுக்கண்' வரையிலும் சற்றும் சோர்வோ, தடையோ இல்லாதவாறு ஜீவியிடமிருந்து கவிதையூற்றுச் சுரந்தபடியே தான் இருக்கிறது. ஜீவி எழுதிய கவிதைகளின் ஆகச் சிறந்த அம்சமாக, தளர்ந்து போயிருக்கும் வாசகர் மனங்களில் நம்பிக்கையை விதைப்பதையே பிரதான பணியெனக் கவிஞர் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்.

'ஜீவி கவிதைகள்' எனும் இந்தப் பெருந்தொகுப்பினை முழுமையாகப் படித்து முடிக்கையில், ஜீவி எனும் ஆளுமை தமிழ்க் கவிதையில் விஸ்வரூபமெடுத்து நிற்பதைக் கண்டு ஆனந்தித்தேன்.

எளிய சொற்கள், பாந்தமான கவிதை நடை, கவித்துவச் செறிவு, கவிதைகளில் வெளிப்படும் சமூக அக்கறை.. என கவிதைகளின் சிறப்புகளை ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஜீவி கவிதைகள் காட்டும் வாழ்வியல் சிக்கல்கள், ஜீவி கவிதைகளில் மிளிரும் அழகியல், ஜீவி கவிதைகளில் வெளிப்படும் சமூகச் சிந்தனைகள், ஜீவியின் கவிதைகள் முன்வைக்கும் மகளிருக்கான பிரச்சினைகள், ஜீவி கவிதைகள் காட்டும் நடுத்தர குடும்பத்து உளவியல் நெருக்கடிகள்.. என பல தலைப்புகளின்கீழ் தனித்தனி நூலாக எழுதிடுவதற்கான பல கருப்பொருள்களை உள்ளீடாகச் சுமந்து வெளிவந்துள்ளது 'ஜீவி கவிதைகள்' எனும் இந்தத் தொகுப்பு.

*'வாழ்வே முடிந்துவிட்டது; இனி, அவ்வளவுதான்' என்று விரக்தியின் விளிம்பில் நிற்கும் மனிதரையும் தாங்கிப் பிடித்து, அவருக்கான ஆறுதலை, தேறுதலைச் சொல்லும் ஜீவியைப் போலவே அவரது கவிதைகளும் நம்மை நெஞ்சோடு சேர்த்தணைத்து தோள் கொடுக்கின்றன.*

**'நம்பிக்கைகள் வாழ்க்கையின் நடைவண்டிகள்**
**இரண்டு கைகள் இழந்த பின்னும்**
**மூன்றாவது கையாய் இது முளைக்கிறது.**
**நமக்குள்ளிருந்து நமக்காகவே இது கிளைக்கிறது.'**

*நம்மை எங்கும் அலையவிடாமல், நமக்குள்ளிருக்கும் நம்பிக்கையை நமக்கே அறிமுகம் செய்து வைப்பதில் ஜீவியின் கவிதைகளுக்கு நிகரேதுமில்லை.*

*ஜீவியின் கவிதைகளில் இடம்பெறும் வாழ்வியல் காட்சிகளும், சமூக எதார்த்தமும் நம்மை அப்படியே கவிதைகளுக்குள் ஒன்றிப்போகச் செய்துவிடும் வலிமை பொருந்தியவை.*

*1960-ஆம் ஆண்டு வெளியான 'இரும்புத்திரை' எனும் திரைப்படத்தில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய மாதச் சம்பளக்காரரர்களின் அவஸ்தையைச் சொல்லும், 'கையிலே வாங்கினேன்; பையிலே போடலே. காசு போன இடம் தெரியலே' எனும் பாடல் உண்டாக்கிய மனத் தாக்கத்தை, ஜீவியின் கவிதையொன்றும் எனக்குள் உண்டாக்கியது.*

**'சம்பளத் தேதி வந்தா**
**சங்கடமும் கூட வரும்**
**நொம்பளந்தான் எம்பொழப்பு**
**நோகுறத எங்க சொல்ல?**

**.................................**

**கவரப் பிரிக்கையிலே**
**கைகளில் நடுக்கம் வரும்**
**கடன் பாக்கி நெனச்சாலோ**
**செலவழிக்க தயக்கம் வரும்'**

*இப்படியாக சம்பளத்தின் பற்றாக்குறை அவஸ்தைகளைப் பட்டியலிடும் கவிதையின் முடிப்பில், கவிஞர் சுழற்றியிருக்கும் சாட்டையானது, சரியான திசை நோக்கியே சொடுக்கியுள்ளது.*

**‘அன்றாடம் எம் பொழப்பு**
**திண்டாடிக் கெடக்கயிலே**
**ஆயிரமாய்ச் செலவழிக்கும்**
**அமைச்சர்களோ என்னிடத்தில்**
**சிக்கனத்த கடைப்பிடிக்க**
**வக்கணையா பேசுறாங்க.’**

*முப்பதாண்டு முன் எழுதிய கவிதையிது. இதே கவிதையை ஜீவி இப்போது எழுதியிருந்தால் ‘பல கோடிகளில் செலவழிக்கும்’ என்றெழுதியிருப்பார். காலச் சக்கரம் எப்போதும் முன்னோக்கியே தான் சுழன்றோடுகிறது.*

*‘வாழ்க்கையென்பது பிழைத்தலிலல்ல; வாழ்தலில் இருக்கிறது’ என்பதைக் கவித்துவதோடு சொல்லிச் செல்லும் கவிஞர் ஜீவி, ‘மனிதன் என்பவன் தனித்தீவல்ல, ஒவ்வொரு மனிதனும் ஒரு இயக்கமே’ என்பதையும் மிக அழகாக ஒரு கவிதையில் பதிவு செய்துள்ளார்.*

**‘ஒரு**
**இரயில் எஞ்ஜினாய்**
**எப்போதும் இயங்கு.**

**கூடவே பலரைச்**
**சேர்த்துக்கொண்டு**
**உற்சாகமாகக்**
**கூவிக்கொண்டு..’**

*ஒரு மனிதன் இயக்கமாக இயங்கிட வேண்டுமெனில், எப்படி இருக்க வேண்டுமென்பதை மிகக் குறைவான சொற்களில், தெறிப்புடன் சொல்லியிருக்கும் ஜீவியின் வரிகள், கல்வெட்டில் பொறிக்கத்தக்க பொன் வரிகளென மிளிர்கின்றன.*

*பெருமழைக்குப் பிறகும் மரங்களின் இலைகளில் சொட்டிக் கொண்டேயிருக்கும் நீர்த்துளிகளைப் போல, ஜீவியின் கவிதைகளைப் படித்து முடித்த பின்னரும் அழகியல் ததும்பும் கவிதை வரிகள் நம் நினைவில் நின்றாடும். அடடா.. எத்தனை விதமான பார்வை! எத்தனை விதமான கோணம்!!*

**‘பன்னீர் மரத்தின்**
**பாதங்களில்**
**சிதறிக் கிடக்கும்**

சின்ன நாதஸ்வரங்களை
ஒவ்வொன்றாய் எடுத்து
தேன் குடிக்க வேண்டும்.'

*இந்த ஆசை கவிஞரோடு மட்டுமா நின்றுவிட்டது..? படிக்கும் நமக்கும் தேன் குடிக்கும் ஆசையைக் கிளறிவிட்டுப் போகிறதே.. இக்கவிதை.*

*அன்றாட வாழ்வில் ஒவ்வொரு தனி மனிதனும் சந்திக்கும் அனுபவங்களைத் தான் ஜீவியும் எழுதியுள்ள போதிலும், ஜீவி எழுதும்போது மட்டும் அது கவிதையாக ரசவாதம் அடைந்து விடுவதைக் கண்ணுற முடிகிறது. அப்படியானதொரு கவிதையே 'மீறல்.'*

'அழுத்தி அழுத்திச் சீவினாலும்
படியாமல்
நெற்றியில் விழுகிறது
கற்றை முடி.

....................

....................

கவனமாய்க் கத்தரித்த
செடிச் சிற்பத்திலும்
உயரமாய் வளர்கிறது
ஒரு கிளை.

எப்படித்தான் அலசினாலும்
எங்காவது ஓரிடத்தில்
அதிகமாய்ப் போய்விடுகிறது
சட்டையில் நீலம்.

அறைக்குள் வைத்தே
வளர்த்தாலும்
ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டிச்
சிரிக்கிறது பூ.'

*மண்ணைக்கீறி முளைத்தெழும் விதையினைப் போலவே, காயங்களுக்குள்ளிருந்தும் முட்டிமோதி வெளியேறி வந்து, சக மனிதரின் முகம் பார்த்துப் புன்னகைப்பதே இந்த வாழ்க்கைக்கான*

*அர்த்தமெனக் கவிஞர் ஜீவி சொல்வதிலுள்ள உண்மை நமக்கும் பிடித்துப்போவதில் வியப்பேதுமில்லை.*

*ஜீவியின் கவிதைகளில் உயிரோவியமாய் வந்துபோகும் பெண்கள் அனைவருமே தனித்துவமானவர்கள்; அன்பானவர்கள்; கடினமான உழைப்பாளிகள். பாட்டி, அம்மா, அக்கா, தங்கை, மனைவி, காதலி, குழந்தையெனப் பல ரூபங்களில் ஜீவியின் கவிதைகளில் வரும் பெண்கள் அனைவரும் நமக்கு நெருக்கமான சொந்தங்களாகி விடுகிறார்கள். பெண்களைக் குறித்த கவிதைகளைப் பட்டியலிட்டாலே அது பல பக்கங்கள் நீளும் என்பதால் ஒரேயொரு பதப் பருக்கை;*

**காலந்தோறும் காயங்கள்**

**'இருள் படர்ந்த**
**சிறு அறையில்**
**விறகடுப்பை ஊதி ஊதி**
**அம்மா சமைத்தது**
**அடிமனசில் நிற்கிறது.**

**..................................**

**..................................**

**பவுடர் பூசிய**
**மனைவியின் முகத்தில்**
**காயமேதுமில்லை**
**உற்றுப் பார்த்தால்**
**உள்காயமிருக்கலாம்.'**

*ஜீவியின் நுட்பமான கவிப்பார்வைக்கு இதுவொன்றே போதும். எதையும் மேம்போக்காகக் கடந்துவிடாமல், உற்றுநோக்கி, அந்தச் செயல்பாட்டின் பின்னணியில் பொதிந்திருக்கும் சமூகக் காயங்களுக்கான காரணத்தையும் தேடிக்கண்டடைகிற அக்கறையும் பொறுப்பும் கொண்டவை ஜீவியின் கவிதைகள்.*

*ஹைக்கூவிலும் தனி முத்திரைப் பதித்த சிறப்பு ஜீவிக்கு உண்டு. அவரது முதல் கவிதை நூல் தொடங்கி, எல்லா கவிதை நூல்களிலும் அங்கங்கே மின்னிப்போகும் பல ஹைக்கூ மின்மினிகளைக் காணலாம். 'ஆனா..' (2021) எனும் ஹைக்கூ நூலொன்றையும் எழுதியுள்ள கவிஞரது ஹைக்கூவில் நான் விரும்பி ரசித்த மூன்று முத்துக்கள் இவை;*

**அலையும் கடல்**
**கவிழும் படகு**
**அதோ.. கிளிஞ்சல்கள்.**

**விரலிடுக்கில் வழியும்**
**நிலவொளி**
**கண்களில் மரங்களின் பரதம்.**

**கசியும் இசையில்**
**தனியே தெரிகிறது**
**புல்லாங்குழல் விற்பவனின் நடை.**

*எளிய - இனிய ஓசையழகுடன் கூடிய நல்ல பல இசைப்பாடல்களையும் ஜீவி எழுதியிருக்கிறார். அதிலும், அறிவொளி இயக்கத்திற்காக எழுதிய 'குறிஞ்சி மலைத்தேனே.. கொண்டாடும் சந்தனமே..' பாடல் ரொம்பவும் சிறப்பானது. ஒரு குழந்தையை மடியிலிருத்திக்கொண்டு, மெல்லக் குரலெடுத்துப் பாடுகையில் தான் அந்தப் பாடலின் மொத்த சிறப்பையும் நம்மால் உள்வாங்கிக்கொள்ள முடியும். இந்தப் பாடலைக் கேட்கும் எவருக்குள்ளும், 'இவ்வளவு அழகா பாடல் எழுதுகிற கவிஞர் இன்னுமா சினிமாவுக்குப் பாடல் எழுதாம இருக்காரு?' எனும் கேள்வியெழுவது நிச்சயம். விரைவிலேயே அந்த கேள்விக்கான பதில் கிடைத்துவிடும் என்று உறுதியாகச் சொல்கிறேன்.*

*'காலத்தின் திசை வழியே பயணிப்பவன் கவிஞனல்ல; காலம் செல்லும் திசையைத் தன் கவிதையால் கணிப்பவனே கவிஞன். தேவையெனில், காலத்தின் போக்கையே மாற்றும் மக்கள் சக்தியை, தன் கவிதை வரிகளால் வசப்படுத்தும் சாத்தியத்தையும் கவிஞன் என்பவன் கைக்கொள்ள வேண்டும்.'*

*2016-இல் வெளியான கவிஞர் ஜீவியின் 'அடித்துப் பெய்த மழை' கவிதை நூலுக்கு 2017-இல் 'வண்ணக்கதிரில்' நான் எழுதிய நூல் அறிமுகத்தை இப்படியாகத்தான் தொடங்கியிருந்தேன். இப்போது படிக்கையிலும் கவிஞர் ஜீவி குறித்த எனது மதிப்பீடும், கவிதைகளில் அவரது தொடர்பங்களிப்பும் பன்மடங்காகக் கூடியிருப்பதையறிந்து கூடுதலாய் மகிழ்ச்சி கொள்கிறேன்.*

*ஜீவியின் கவிதை மொழியானது ஒரு குழந்தையின் மனதையொத்தது. நம் மூச்சுக்காற்றுக்கு நெருக்கமாய் அருகில் வந்து, ஒரு கன்னத்தில் செல்லமாய் முத்தமிடும். அடுத்த கணமே*

மறுகன்னத்தில் பளாரென்று அறைந்தும் விடும். அன்பு செய்கையில் நெகிழ்வதும், அநீதி நேர்கையில் பொங்கி வெடிப்பதும் போராளியின் குணம்தானே..! கவிஞர் ஜீவிக்குள் இருக்கும் கவிதைப் போராளியை அடையாளம் கண்டு பாராட்டக் கிடைத்திட்ட நல்வரவாகவே இந்த 'ஜீவி கவிதைகள்' தொகுப்பைக் கொண்டாட்டத்தோடு வரவேற்கிறேன்.

படிமங்கள், குறியீடுகள், இஸங்கள், இருண்மைகள் என எந்த 'கள்'ளும் கலக்காத சுத்த சுயம்பு நிறைந்த சமூகக் கவிதைகள் ஜீவியினுடையவை. நேரான மொழி என்றபோதிலும், அதில் வாசிப்பாளனை உள்ளிழுக்கும் வசீகரம் இருக்கும். சுற்றி வளைக்காமல் 'சுருக்'கெனச் செய்தியைச் சொன்னாலும், அதில் வாழ்வின் உண்மை பொதிந்திருக்கும். சமுதாயத்தில் நிறைந்திருக்கும் மேடுபள்ளங்களைக் கண்டு, எப்படியாயினும் அவற்றை சமன்படுத்திட வேண்டுமென்கிற பேராவலைச் சுமந்துநிற்கும் கவிதைகளாகக் கவிஞர் ஜீவியின் கவிதைகள் நம்மைக் கவனப்படுத்துகின்றன.

இருவேறு முகங்கள், நைலான் ஊஞ்சல், சின்னஞ்சிறகுகள். அஞ்சறைப்பெட்டி, அடித்துப்பெய்த மழை, அசுர சாதகம் உள்ளிட்ட கவிதை நூல்களோடு மட்டுமில்லாமல், கவிதைகள் சார்ந்த இரு கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். கவிதையும் கவிதை சார்ந்தும் (2011), கவிதை குறித்த சொற்கள் (2015) ஆகிய நூல்களுக்கும் சொந்தக்காரரர் கவிஞர் ஜீவி.

தனது கவிதை நூல்களுக்காக நொய்யல் விருது, மதிமுக இலக்கிய அணி விருது, கரூர் தமிழ்ச் சங்கம், தாரகை அறக்கட்டளை, கவிதை உறவு ஆகிய இலக்கிய அமைப்புகள் வழங்கிய பரிசுகளோடு, பாரதி முற்றம் வழங்கிய 'கவிஞர் சிகரம் விருது', திசைகள் வழிகாட்டி அமைப்பின் 'வாழ்நாள் சாதனையாளர் விருது', தமிழக அரசின் 'தமிழ்ச் செம்மல்' விருது உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார். கவிஞரது கவிதைகளை பேராசிரியர் மோகனசுந்தரம் ஆய்வுசெய்து, இள முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். இன்னும் சிலர் ஜீவியின் கவிதைகளை ஆய்வுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எழுதுவதோடு நில்லாமல் களத்திலும் நின்று, சமூக உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துவரும் கவிஞர் ஜீவியின் கவிதைகளை மொத்தமாக ஒரே தொகுப்பாகப் படிக்கும் பாக்கியம்

*இந்த நூலைக் கையிலெடுக்கும் ஒவ்வொருக்கும் வாய்த்த பெரும்பேறு தானே..!*

*'ஜீவி கவிதைகள்' எனும் இந்தத் தொகுப்பின் வழியே, ஜீவி எனும் ஒரு கவிதையாளுமையை மட்டும் நாம் அறிந்துகொள்ளப் போவதில்லை. மாறாக, பல்லாயிரமாண்டுகால நீண்டநெடிய வரலாற்றையுடைய தமிழ்க் கவிதையின் அரை நூற்றாண்டுக்கால கவிதை முகத்தையும் நாம் ஒருசேரக் கண்டுணரப் போகிறோம்.*

*இந்த நூலிலுள்ள பல கவிதைகள், ஜீவியின் பெயரில்லாமலே பல மேடைகளில் பலராலும் உச்சரிக்கப்பட்ட சிறப்புக்குரியவை. இப்போது அந்தக் கவிதையை இந்நூலில் வாசிக்கையில், 'அட.. இதுவும் ஜீவி எழுதிய கவிதை தானா..?' என்று நாம் சொல்லிப் பூரித்துப்போகும் தருணம் இந்த நூலின் வழியே சாத்தியமாகியுள்ளது.*

*தமிழ்க்கவிதையின் தவிர்க்கவே முடியாத, தனித்துவமான கவிக்குரலாக ஒலிக்கும் ஜீவியின் கவிதைகளை எங்கேனும் யாரேனும் எப்போதேனும் வாசித்துக்கொண்டேயிருப்பார்கள்.*

*தன் பெயரைப்போலவே தமிழ்க் கவிதையில் என்றென்றும் ஜீவித்திருப்பார் ஜீவி என்பது மட்டும் காலத்தின் நிதர்சனமான உண்மையாக நிலைத்திருக்கும்.*

*அன்புக்கவிஞர் ஜீவிக்கு என் பேரன்பின் கனிந்த வாழ்த்துகள்.*

**- மு.முருகேஷ்**

முதுநிலை உதவி ஆசிரியர்,
'இந்து தமிழ் திசை' நாளிதழ்,
சென்னை - 600 002.

02.04.2024

# கரகமாய் மட்டுமல்ல...

வானவில்லின் வர்ணம்
ஒட்டுகிறதா எனத் தொட்டுப் பார்.

ஒழுகும் மழையால்
உன் மனசை நிரப்பு.

தென்றல் வீசியும் பன்னீராய் வேர்க்கும்
பூக்களுக்குக் கைக்குட்டை கொடு.

வானமரம் உலுக்கி
நட்சத்திரக்காய் பொறுக்கு.

நிலவொளியை விரலிடுக்கில்
வழியவிட்டு
மரங்களின் பரதம் பார்.

என்றெல்லாம் எழுத
எங்களுக்கும் ஆசைதான்.
ஆனால்
நிஜங்களை நிராகரித்துவிட்டு
நிழல்களோடு கைகுலுக்க முடியுமா?

அதனால்தான்...
வாழ்க்கையின்
அவலங்களுக்கு எதிராய்ப்
போராடு என்று
புதுக்கவிதை செய்கிறோம்.

கவிதையை
கரகமாய் மட்டுமல்ல...
வாளாகவும் சுழற்றி வருகிறோம்.

## என் தோழனுக்கு...

எழுந்திரு இளைஞனே! எழுந்திரு!
சாதிக்க வேண்டுமெனில்
விழுந்து அடிபடு, வேகமாய் செயல்படு

வேரில் வீழ்கிற வேர்வைத் துளிகள் தான்
பூவாய்ச் சிரிக்கும் புரிந்துகொள் இதனை
சும்மா இருந்தால் சுகம் கிடைக்காது

அடைய வேண்டுமெனில்
அவஸ்தை அவசியம்

ஊருக்கும் சேர்த்தே
உன்னாசை இருக்கட்டும்
உனதாசை நிறைவேற
ஓயாமல் போராடு.

திசையைத் தீர்மானம் செய்
தடுமாற்றம் ஆனாலும் தடமாற்றம் ஆகாதே.

நிமிடத்தை நீட்டித்து
நித்தமும் செயல்படு
ஒவ்வொரு செயலும்
உனக்கொரு அனுபவம்.

எழுந்திரு இளைஞனே! எழுந்திரு!
சாதிக்க வேண்டுமெனில்
விழுந்து அடிபடு, வேகமாய் செயல்படு.

# சரிகப் புடவை கட்டி...

எல்லையிலே காளிகோயில்
ஏழு நாள் திருவிழாவாம்.
திருவிழா சிறப்பாக
தேரோட்டம் சாயங்காலம்.

சாயங்கால வேளையிலே
அம்மனை அலங்கரிச்சு
சரிகப்புடவை கட்டி
சரம்சரமாய் நகை போட்டு
ஊர்கோலம் போகுமின்னு
ஊரே மகிழ்ந்திடுது.

தேரோட்டம் பார்ப்பதற்கு
எதைக்கட்டிப் போவதுன்னு
மாடிவீடுகளில்
மாலைவரை யோசனைகள்.

எதைத்தான் கட்டுறது
எல்லாமே கிழிஞ்சிருக்கு.
என் போன்றோர் நிலை இதுதான்
என்னத்தச் சொல்லி அழ.

ஆளான நாள் முதலா
ஆத்தாளின் பழம் புடவ
தனித்துணியே எடுத்ததில்ல
தங்கச்சிக்கு என் கிழிசல்.

சரிகப்புடவ கட்டி
சாயங்காலம் ஊர்வலமாம்
அம்மன் பார்க்கப் போக வேணும்
அண்ணாச்சி வழி சொல்லு.

# மழை

வைரத்துளியாய்
வழியும் மழைத்துளி
மனசு முழுதும் மகிழ்ச்சி பரப்பும்.

மேகமரம் உதிர்க்கும்
பன்னீர்ப் பூக்களாய்
தூறல்கள்.

நட்சத்திரக் கம்பிகள்
தரை இறங்குவது மாதிரி
தாரைகள் பொழிந்திட
தேகம் சிலிர்க்கும்.

தண்ணீர் ஊசிகள்
தரையில் பாய
கொப்புளம் எழும்.

'ஓ'வெனப் பெய்யும்
பெரு மழையோ
பிரிய நண்பனாய்
முதுகில் அறையும்.

நண்பர்களோடு
குற்றாலம் போய்
பொழிந்து நகரும்
மேகங்களை
மகிழ்ந்து பார்ப்பதும்
ஆனந்தம் தான்.

ஆனாலும்-
நள்ளிரவுத் தூக்கத்தில்
அம்மா உசுப்பி
ஒழுகும் இடம் விட்டு...
பாய் நகர்த்தி...

கூரை ஓட்டைகள் வழியே
பாத்திரங்களில் நிரம்பிய
மழைத் தண்ணீர் மட்டுமே
மனசின் மூலையில்
அழியாத சித்திரமாய்...!

## ஹர்ஷத் காலம்...
## பொருட் காலம்...

பங்கு மார்க்கெட் பற்றி
எங்கும் தெரிந்தது
பொருளியல் துறையில்
அவரின் பங்களிப்பு அபாரம்!

# மிடில் கிளாஸ்...

நாங்கள்
முதல் தேதியின் பிள்ளைகள்.
பற்றாக்குறையின்
பெற்றோர்கள்.

மேட்டு வர்க்கத்தின் மிச்சத்தைக்
காட்டுவதற்கு
நட்டப்படும் நடுத்தர வர்க்கங்கள்.
நாங்கள் போட்டிருக்கும்
சட்டையின் கோடுகளை
மற்றவர்கள்
எண்ணிக் கொண்டிருக்கும்போது
நாங்கள் மட்டுமே
அதன் இன்சால்மென்டுகளை
எண்ணிக் கொண்டிருப்போம்.

ஒயிட் அண்ட் ஒயிட்டில்
டூ விலரில்
புருஷனோடு போவதாய்க்
கனவு கண்டு வந்த
எம் மனைவிமார்கள்
எதார்த்தத்தில்
துருப்பிடித்த சைக்கிளைக் கண்டதும்
வெறுப்படித்து இருக்கிறார்கள்.

ஐ.ஏ.எஸ். கனவுகளோடு
ஐந்து மாத பாக்கி சொல்லி
எம் பிள்ளைகள்
டியூசன் போய்க் கொண்டிருக்கின்றன.

எங்களைப் பொறுத்தவரை
அங்கிங்கெனாதபடி
எங்கும் இருப்பது
ஆண்டவன் அல்ல...
அக்கவுண்ட் தான்.

## காலம் காலமாய்...

சேதுவின் கரையில்
ஏகமாய்க் கூட்டம்.
சீதையின் பிரிவில்
சோகமாய் இராமன்.
அண்ணலின் மனைவி
அவனோடு சேர
தம் மனைவிகளின் நினைவு

நெஞ்சிலும்
கொஞ்சம் கற்கள்
தலையிலும் சுமந்த கூட்டம்
சுற்றிலும்... சுற்றிலும்...

யமுனைக் கரையில்
கூட்டமாய் மக்கள்
அதன்
தண்ணீரில் பாதி கண்ணீர்.

மும்தாஜ் இறப்பில்
முடங்கிய ஷாஜஹான்
தாஜின் நினைவை
பளிங்கில் செதுக்க
வீட்டு நினைவை ஒதுக்கி வைத்து
வேலை செய்யும்
சிற்பிகள்... சிற்பிகள்.

சரித்திரம் எப்போதும்
பன்னீரின் கண்ணீரையே
பார்க்கிறதே!
வேர்வையின் விசும்பலை
விசாரிக்காதா?

# இனியேனும் முழிச்சுக்குவோம்...

கந்தல் கட்டி நொந்துபோன
கந்தசாமி பாரு.
காதரோடு மோத வரும்
காரணத்தக் கூறு.

ஆண்டுகளாய்ப் பாடுபட்டும்
சந்தோசமே இல்லை.
அனுபவிச்சோம் வாழ்க்கையிலே
ஆயிரமாய்த் தொல்லை.

குந்த சொந்தக் குடிசை இல்லை
கூனி நிக்கிறோம் பாரு.
கந்து வட்டிக் கடன் நினைச்சு
கண்களிலே ஆறு.

இந்தநெல காதருக்கும்
இருக்குதான்னு பாரு
உனக்கொரு கிழிசல் வேட்டி
காதருக்கு கந்தல் கைலி.

வித்தியாசம் இதிலே தான்...
மத்தபடி ஒண்ணுமில்லை.
மாடிவீட்டு சனங்களுக்கோ
மதபேதம் இல்லே.
கூடிப்பேசி அடிச்சுக்கிறான்
கோடியாகக் கொள்ளை.

அல்லா ராமர் பேராலே
ஒழைக்கும் சனத்த பிரிச்சு - தம்

கல்லாவை நொப்பிக்கிறான்
சந்தோசமா சிரிச்சு.

இன்னும் இந்த நெலமையான்னு
கேட்க நாம மறந்தோம்.

எவனோ
தூண்டிவிட்ட சண்டையாலே
அடிச்சுக்கிட்டு இழந்தோம்.
இனியேனும் முழிச்சுகிட்டு
ஒன்னு சேர்ந்து ஒழைப்போம்.
அல்லா ராமர் கோயில்களை
அப்புறமா அமைப்போம்.

## தீபாவலி

கடன் இல்லை என்ற வெடி
கடைக்காரன் போட

புத்தாடை ஆசைகள்
புஸ்வானம் ஆக

எல்லோர்க்கும் தீபாவளி
ஏழைக்கோ நெஞ்சில் வலி.

# வாய்ப்பு

வேலையில் சேர்ந்த அன்று
அப்பா
படிப்படியாய்
முன்னேறும்படி சொன்னார்.

பஞ்சப்படி
பயணப்படி
சலவைப்படி
மருத்துவப்படி என
படிப்படியாய்ப் பெற்றும்
உருப்படியாய் வீட்டில்
ஒன்றுமில்லை என்கிறார்
இப்போது அப்பா.

# அவஸ்தை

அந்தக் கண்களில்
மாட்டிக் கொண்டேன்
மனசோடு.
இப்போது நான்
இரண்டாவது மனிதன்.

நான்
இருந்த வீடு தான்
பழகிய வீதி தான்.
இப்போது
அரண்மனையாகவும்
ராஜ வீதியாகவும்
ரசவாதமாகியுள்ளது.

அந்த வானவில்
வருகிற நேரமெல்லாம்
எனக்குள்
சில மேகங்கள்
முட்டிக் கொள்கின்றன.

இப்போது
நிமிஷத்தின் நீளம்
குறைந்துவிட்டதோ
என்று யோசிக்கிறேன்.

# மூன்றாம் கை

நம்பிக்கை கொள்வோம் நண்பர்களே!
நம்பிக்கை கொள்வோம்!

நம்பிக்கைகள் வாழ்க்கையின் நடைவண்டிகள்
இரண்டு கைகளை இழந்த பின்னும்
மூன்றாவது கையாய் இது முளைக்கிறது.
நமக்குள்ளிருந்து நமக்காகவே இது கிளைக்கிறது.

நம்பிக்கை கொள்பவனின்
நாளை கூட தீபமாகிறது - அதை
இழந்தவனின் இன்றுகூட இருட்டாகிறது.

நம்பிக்கை கொள்பவனுக்கோ
இன்னல்கள் படிக்கட்டுகள்.
இழந்தவனுக்கோ அதுவே கல்லறைகள்.

இருட்டு நம்மை மருட்டும் போது
நம்பிக்கை தீபமாகிறது.
கவலை நம்மைக் கவிழ்க்கும் போது
நம்பிக்கை துடுப்பாகிறது.

நம்பிக்கை கொள்வோம்... நண்பர்களே!
நம்பிக்கை கொள்வோம்.

# தேதி சொல்லும் சேதி...

மே-1
எல்லாம் விடுமுறை நாட்களைப்போலவும் தான்
இந்தத் தேதியும் - காலண்டரில்
சிவப்புமையால் அச்சடிக்கப்படுகிறது.

ஆனால் இந்த - மை
ஒரு உண்மையைச் சொல்லும்.

இந்த மையிலிருந்து
உரிமைப்பூ பூக்க
சிலர் சொரிந்த
இரத்தத்தின் வாசம்
இன்னமும் வீசும்.

அடிமைச் சகதியில்
அமிழ்ந்த மானுடம்
ஒரு அடி உயர்ந்தது - இந்த
ஒண்ணாம் தேதியில் தான்.

வேர்வைக்கு விளைச்சலாய்
கண்ணீரையே பெற்ற கண்கள் - தம்
பார்வையைப் பரிசீலனை செய்தது
இந்தத் தேதியில் தான்.

இந்தத் தேதித் தாளை
பெற்றிருப்பதாலேயே
ஆண்டுதோறும்
காலண்டர் கர்வத்தால்
கனத்துப் போகிறது.

உழைக்கும் மக்களை
உன்னத வாழ்க்கைக்கு
அழைக்கும் சேதி
இந்தத் தேதியில் தெரியலாம்
தேடிப் பாருங்கள்.

## பூத்தது ஏன் பூவே?

தவமா தவமிருந்து
தலமெல்லாம் போய் நடந்து
மவராசி நீ பொறந்தே
மகிழ்ந்தோமே நாங்க எல்லாம்.

ஊர்த்தேரு அசஞ்சசஞ்சி
ஊர்வலமா வருகுதோன்னு
பார்த்தார் வியக்கும்படி
பைங்கிளியே நீ தவழ்ந்தே...

அல்லிக்கு கால் முளைச்சு
அடியெடுத்து நடந்துருமோ
பள்ளிக்கு நீ நடந்தே
பார்த்து மகிழ்ந்திருந்தோம்.

இன்னைக்கு ஓடிவந்து
இருதயத்தில் வெடிவெடிச்சே
அன்னைக்கு மட்டுமில்லே
அப்பனுக்கும் கொள்ளி வச்சே.

ஆத்துக்குப் போகையிலே
ஆளாகி விட்டேன்னு
அடியே பாதகத்தி
அடிவயித்தப் பத்தவச்சே.

சேத்தேதும் வைக்கவில்லே
சிறுவாடு கூட இல்ல
சுத்தி உள்ளோர் பேசுமுன்னே
சுமை கழிக்க வழியுமில்லே.

அன்றாடம் செலவுக்கே
அல்லாடிக் கிடக்கையிலே
அடியே கடன்காரி
அதுக்குள்ள பூத்துட்டியே...

# சின்னப் பாப்பா!
# சின்னப் பாப்பா!

சின்னப் பாப்பா! சின்னப் பாப்பா!
சிரித்துப்பேசி விளையாடு!
ஒவ்வொரு நொடியும் அடுத்தவரோடு
உறவு கொள்வாய் அன்போடு.

ஒண்ணாயிருந்தா எல்லாம் கிடைக்கும்.
உணர்ந்திடு ஒற்றுமைப் பண்பாடு! - அட
என்ன சாதி என்றால் என்ன?
மனுசங்க தானே உறவாடு.

எல்லா மக்களும் எனக்குச் சொந்தம்
என்றே நீயும் கொண்டாடு
அல்லா ராமர் ஏசுவும் ஒன்றே
அதிலே என்ன முரண்பாடு?

சின்னப் பாப்பா! சின்னப் பாப்பா!
சிரிச்சுப்பேசி விளையாடு
ஒவ்வொரு நொடியும் அடுத்தவரோடு
உறவு கொள்வாய் அன்போடு.

# நீ மின்மினியல்ல...
# நட்சத்திரம்...

கவலைகளில் கரைந்து போகாதே!
எம் இளைஞனே!
நீ மின்மினியல்ல, நட்சத்திரம்.

எந்த வரிகளிலோ
உன் முகம் பார்த்துக்கொண்டு
எந்த சோகத்தையோ
உன் சொந்தமாக்கிக் கொண்டு
கவலைகளில் கரைந்து போகாதே
எம் இளைஞனே!

வாழ்க்கை ஒரு வாலிப யுத்தம்.
போரில் வெற்றி தோல்வி சகஜம்.
நாளைகளின் வெற்றிக்காய்
நகர்ந்து கொண்டிருப்பவனை
இன்றின் தோல்விகள்
இடைஞ்சல் படுத்தாது.
முன்னேறு இளைஞனே!

நிமிடங்கள்
உறவுப் புதுப்பிக்க
கொடுக்கும் அவகாசங்கள்.

பூமியெங்கும் பரந்தது
மனித நேயம்.
கைகள் இருப்பது
குலுக்கிக் கொள்ளத்தான்.

பல்வேறு முகங்களுடன்
முகவரி பேசி
நேச சங்கிலியை வளர்.

மீசைக்காரனின் தோன்றல் நீ!
மனசில் கனலை ஊதிப்போடு.
எதிரே நிகழும்
அக்கிரமங்களை
அனலாய்ப் பொசுக்கு.

இயன்ற போதெல்லாம்
இலட்சியம் வளர்.
முன்னேறு இளைஞனே!
நீ மின்மினியல்ல... நட்சத்திரம்.

## வானவில்

புருவமே
இவ்வளவு அழகெனில்
உருவம்?

## தடுமாற்றம்தான்

ஆப்பசைத்த குரங்காய்
கோர்ப்பசேவ்...
இமைகளை உயர்த்திய
சோவியத் இமயம்
கூழாங்கல்லாய்...
வெள்ளை மாளிகையின்
ஜெராக்ஸாய்
கிரெம்ளின்...

அம்மா சாவுக்குச்
சிரிக்கும் குழந்தையாய்
மாஸ்கோ வாசிகள்...

ரொட்டிக்கு அழும்
பட்டினிப் பொழுதில்
சரித்திரம் மீண்டும்
செம்மண் பாதையில்
திரும்பக் கூடும்.

இது -
தடுமாற்றம்தான்
தடமாற்றம் அல்ல.

## புதுமைகள் புரிவோம்

பழைய பாடல்களையே படித்து... படித்து...
பழைய ராகத்தையே இசைத்து... இசைத்து
எத்தனை நாட்களுக்கு இப்படி?

பாதைகளுக்குக்கூட சலித்து விட்டதே
என் தோழனே! - உன்
பாதங்களுக்கு இல்லையா?

முன்னோர் வரலாறு எழுதியதால் தானே
நாம் வாசித்துக் கொண்டிருக்கிறோம்.
இப்படியே நாம் இருந்தால் - நம்
பேரர்களுக்கு அந்தப் பெருமை கிடைக்குமா?

பழைய சிலையைப் பளபளப்பாக்கினோம்
இதோ
சாப்பாட்டுத் தட்டில் களிம்பேறி விட்டதே!

பழம் பெருமை தேவைதான்.
ஆனால் அது
பட்டுச்சட்டை மாதிரி
விழா நாட்களில் மட்டுமே விரும்பப்படும்.
அன்றாடம் உடுக்கும் ஆசை
நம் செயல்பாடுகள் தான்.

சரித்திரத்திற்காய்
பூமி புரள்வதைப் புரிந்துகொள்வோம்
அந்த மாற்றங்களுக்கு
ஏற்றம் கூட்டுவோம்.
பழைய வரிகளுக்கு
இனி -
செய்கையால் உரையெழுதுவோம்.

## ராசாத்தி...
## ரோசாப்பு...

ரோசாப் பூவுன்னா
ராசாத்திக்குப் பிடிக்கும்.
செடியின் சிரிப்பாய்
மலரும் பூவைப்
பார்க்கப் பார்க்கப்
பரவசம் கூடும்.

பட்டு இதழ்களைத்
தொட்டுப் பார்க்கவும்
தலையில் சூடி
கர்வமாய் நடக்கவும்
ஆசையோ ஆசை.

பள்ளிக்குப் போகையில்
பாதையைக் கடக்கையில்
பூக்கடை மேசையில்
அழைக்கும் பூவை
அள்ளிக்கொள்ள
உள்ளங்கை அரிக்கும்.

ஓட்டமாய் ஓடி
கேட்டுப் பார்த்தாள்
அம்மாடி!
ஐந்து ரூபாயாம்!
வாய்க்கும் கைக்கும்
இழுபடும் வாழ்க்கையில்
அய்யாவுக்கு அது
ஐந்தாண்டுத் திட்டம்

அன்றாடச் செலவுக்கே
திண்டாடிக் கிடக்கும்
அம்மாவைக் கேட்டால்
அடிக்க வருவாள்.

புளியங்கொட்டைகள்
பொறுக்கிச் சேர்த்து
கடையில் போட்டுக்
காசு பார்த்து
வரும் வாரமே
வாங்க வேண்டும்
என்ன கலர் பூ
வெள்ளை - இல்லை

சிவப்பு - இரத்தச்சிவப்பு
ராசாத்தியின் கனவில்
ரோசாத் தோட்டம்.

காலைப் பேப்பரில்
டவுனில் நடந்த
விழாச்செய்தி இருந்தது

ரோசாப் பாதையில்
கார் ஏறி நிற்கும்
படத்தைப் பார்த்ததும்
பதைத்துப் போனாள்.

# நொம்பளந்தான் எம் பொழப்பு

சம்பளத் தேதி வந்தா
சங்கடமும் கூட வரும்
நொம்பளந்தான் எம்பொழப்பு
நோகுறத எங்க சொல்ல?
ஆபிசில் கடனுக்கு
அங்க இங்க குடுத்த பின்னால்

எண்ணூறு ரூபாய்
எங்கிட்ட தருவாக.

கவரப் பிரிக்கையிலே
கைகாலில் நடுக்கம் வரும்
கடன் பாக்கி நெனச்சாலோ
செலவழிக்க தயக்கம் வரும்.

எதைக் கொடுக்க எதை மறுக்க
விடுகதைக்கும் பதில் கெடைக்கும்
இதற்கு விடை கிடைக்காது.

வீட்டு வாடகைக்கு
தவணை சொன்னேன் போன முறை
மறுபடியும் ஒத்தி வச்சா
கழுத்துக்கும் கத்தி வரும்.

வேற வீடு பார்க்கச் சொல்லி
வெவகாரம் ஆகிவிடும்.

பால் வெல உயர்ந்ததில
பாதிப்பால் நிறுத்தியாச்சு
பாக்கி எண்ணி வைக்கலேன்னா
காப்பிக்கும் வெட்டு வரும்.

அரிசி விலை உயர்ந்ததிலே
வருமானம் போதவில்லே
அரிசிக் கடன் நெனச்சாலோ
செரிமானம் ஆவதில்லே.

எண்ணெய் வெல லிட்டருக்கு
என்ன வெல தெரிய வில்லே
மில்லிக் கணக்கில் வாங்குவதால்
சொல்லித்தர யாருமில்லே.

ஏழு கறி கூட்டு சுவை
ஞாபகத்தில் தான் இருக்கு
காய்கறியின் வெல நெனச்சா
கசப்பு மட்டும் நெறஞ்சிருக்கு.

மளிகைப் பொருட்கள் வெல
மடமடன்னு உயர்ந்ததில
ஜவுளிக்கடை பாக்கி
ஜவ்வாக இழுபடுது.

கரண்டு பில்லு கட்டி வர
கை மாத்து கேட்டிடலாம்.
புள்ளைங்க டியூசனுக்கு
போய் எங்க நான் நிக்க?

அன்றாடம் எம் பொழப்பு
திண்டாடிக் கெடக்கயிலே
ஆயிரமாய்ச் செலவழிக்கும்
அமைச்சர்களோ என்னிடத்தில்
சிக்கனத்த கடைப்பிடிக்க
வக்கணையா பேசுறாங்க.

# குறிஞ்சி மலைத்தேனே!

குறிஞ்சி மலைத்தேனே!
கொண்டாடும் சந்தனமே!
சரிஞ்சி படுத்திருக்கும்
செண்பகமே கண்ணுறங்கு.

கண்ணுறங்கும் ராசாவே
கால் மொளச்ச பின்னாலே
ஒண்ணு ரெண்டு கத்துக்கொள்ள
ஓட வேணும் கண்ணுறங்கு.

உச்சத்து நிலாவே நீ
ஒழுங்காப் படிக்க வேணும்
அச்சத்த உட்டுப் புட்டு
ஆளாகி நடக்க வேணும்.

நட்சத்திர பூப்பறிச்சு
நாதஸ்வர மேளம் வச்சு
அட்சரங்கள் கத்துக்கொள்ள
அனுப்பிடுவேன் கண்ணுறங்கு.

ஆத்தா கத்துக்கல
அப்பன் கூட படிக்கவில்லே
பூத்த புது ரோசாவே
பொல்லாங்கத் தீர்த்திடடா.

# நெஞ்சைக்கீறும் பிஞ்சு விரல்கள்

படிக்கப் போகும் வயசிலே
பசங்க பாரு ரோட்டுல
துடிக்குதப்பா மனசிலே - இது
தொடர்ந்து நடந்தா சரியில்லே.

சிலேட்டு தூக்கும் சின்னக்கை
பிளேட்டு கழுவி வைக்குது
பாலீஷ் போடும் விரல் நீண்டு
மனசில் தானே தைக்குது.

பந்து பொறுக்கும் பிஞ்சுக்கை
சாணி பொறுக்கிப் போடுது
சில்லு ஆடும் பிள்ளையோ
ஆடு மேய்ச்சி வாடுது.

லாட்டரி டிக்கட் வாங்கவே
நச்சரிக்கும் பையனும் - ஒரு
லாரி செட்டில் கிளீனராகி
டீ வாங்கும் பையனும்
கண்ணை விட்டுப்போன பின்னும்
கருத்தை விட்டுப்போகலே - இந்த
கஷ்டங்களை மாத்த - நாம
ஒண்ணு சேர்ந்தா தேவல.

# கடிதம்

வணக்கம் வகாப்...
மனசின் நகலாய்
இந்தக் கடிதம்
படித்துப் பார்த்து - நீ
பதில் தர வேணும்.

உள்ளூர் ஏரியில்
வெள்ளம் பெருக
உன் அப்பாவும்
என் அப்பாவும்
ஆட்களைச் சேர்த்து
அடைத்த காட்சி
மனசில் படமாய்
மாட்டிக் கிடக்குதே.

அய்யனார் கோவிலில்
நோன்பு கொல்லையில்
உன் அக்காவும் என் அக்காவும்
ஒரே ஸ்ட்ராவில்
கலர் குடித்தது
கண்ணில் நிற்கிறது.

சிங்கப்பூர் மாமா லீவுக்கு வருகையில்
உன் அம்மாவும் என் அம்மாவும்
என்னமாய்ச் செய்தார்கள்
நெய் பிரியாணி.

நீயும் நானும்
ஆஸ்டலில் சேர
உன் சச்சாவும் என் மச்சானும்
அலைந்து திரிந்தது
அதற்குள் மறக்குமா?

அயோத்தியில் நடந்தது
அக்கிரமம் என்று
ராமசாமி லெட்டர் போட்டதாய்
அத்தாவிடம் நீ அவசியம் சொல்.

அன்புடன்,
என்றும் உன் நண்பன்
ராமசாமி

## நல்ல வியாபாரம்

அவன்
ஐம்பதினாயிரம் போட்டு
மொத்த வியாபாரம் நடத்தினான்.
ஐயாயிரம் மட்டுமே
இருப்பாய் இருந்தது.

அதையே முதலாக்கி
சிறு வியாபாரம் நடத்தினான்.
கடைசியில் அவனுக்கு கடன் வந்தது.

பொய்யையே முதலாக்கி
அரசியல் நடத்தினான்.
இலட்சக் கணக்கில்
இலாபம் வந்தது.

# சுயவரம்

கையில் குதிரையுடன்
ஒரு
பிருதிவிராஜன்.
கண்களில் கனவுகளுடன்
ஜன்னலுக்குள்ளா நீ?

பிறரின் வார்த்தைகளுக்கு
கவலைப்படும் நீ
எப்போதடீ - உன்
வாழ்க்கைக்கு கவலைப்படுவாய்?

சுற்றி வரைந்திருக்கும்
கோடுகள் கடந்து
வாசல் தாண்டி வா!
கொம்பு சீவி விடுகிற எவரும்
காயப்படும் போது
கவலைப்பட மாட்டார்கள்.

அடிவாரங்களில் கேலி பேசும்
இந்தச் சமூகம் தான்
சிகரங்களில் ஏறியதும்
சிம்மாசனம் போடும்

இளமதியே!
உன் வானத்தை
நீயே
வரித்துக்கொள்.

# அவஸ்தை வாழ்க்கை

(சிறிய மெஸ் நடத்தி வாழ்க்கை நடத்தும்
தம்பதியரின் குமுறல்)

ஓட்டல் தொழிலின் நடப்பைக் கேட்டால்
உனக்கும் கூட அழுகை வரும்.

அனலுள் வெந்து மனசுள் நொந்து
அடைகிற அவஸ்தை புரிய வரும்.

வருகிற ஜனங்களைத் திருப்திப்படுத்த
வதைபடும் கதையே எங்கள் நிலை
சாப்பாட்டை ரசிக்கும் ஜனங்களோ - நாங்கள்
படுகிற பாட்டை உணர்வதில்லை.

பெருங்கடை அதிபர்கள் போட்டியை மீறி
வருகிற ஆட்களோ கொஞ்சம் தான்
பொருட்களின் விலையும் அடிக்கடி உயர
பொழைப்பு நடப்பது கஷ்டம் தான்.

முதலில் போட்ட முதலும் கரைய
கடனில் விடியும் எம் பொழுது
நிதமொரு ஆளின் வசவை வாங்கி
நெஞ்சு துடிக்கும் தினம் அழுது.

வாடிக்கை நம்பி வைத்த உணவு
வரவில்லை என்றால் வீணாகும்
புதிதாய்ச் சிலபேர் புகுந்து விட்டாலோ
எங்களின் உணவும் பறிபோகும்.

அடைய நினைக்கும் சந்தோசம்
அடுக்களைப் புகையில் கரைந்து போகும்
நாளை எமக்கு வாழ்க்கை இருக்கு
நம்பிக்கையில் எங்கள் உயிர் வாழும்.

## பார்வை

ஐந்து மணிக்கு
அலாரம் அடிக்க
எழுந்து போனாள்
வாசல் தெளிக்க

கோலம் போட்டு
கூடம் பெருக்கி
அடுக்களை கழுவ
ஆறு ஆனது.

பால் தரும் ஆள்வர
காப்பி போட்டு
எழுப்பிக் கொடுக்க
ஏழு ஆனது.

சட்டினி அரைத்து
இட்டிலி சுட்டு
தட்டில் தருகையில்
சரியாய் எட்டு.

சின்ன மகனுக்குச்
சீருடை மாட்டி
கேட்டுக்கு வந்து
டாட்டா காட்டி
ஸ்கூலுக்கு அனுப்பி
ஹாலுக்குள் நுழைகையில்
மணியோ ஒன்பது.

கணவரின் தேவை
கணக்காய் முடித்து
ஆபிஸ் அனுப்பி
பத்துத் தேய்த்த பின்
பார்த்தால் பத்து.

அழுக்குத் துணிகள்
பொறுக்கிச் சேர்த்து
வழுக்கும் பாத்ரூம்
கழுவிக் குளிக்க
பதினொன்று ஆனது.

பாஸ்கெட் எடுத்து
மார்க்கெட் புகுந்து
பேரம் பேசி
வாங்கி வருகையில்
நேரம் பன்னிரண்டை
நெருங்கியிருந்தது.

காய்ந்த துணிகளுக்கு
இஸ்திரி போட்டு
உண்டு முடிக்க
ஒரு மணி ஆனது.

அலமாரி பீரோ
ஒழுங்கு படுத்தி
அறையைப் பெருக்க
சரியாய் இரண்டு.

வந்தபின் கொடுக்க
காப்பி போட்டு
பிள்ளையை அழைக்கச்
செல்கையில் மூணு.

டியூசன் எடுக்கணும்
டிபன் செய்யணும்
ஓய்வு இல்லாமல்
வேலை பார்த்தால் தான்
பத்து மணிக்காவது
படுக்கப் போகலாம்.

எந்திர கதியில்
வேலை நடக்கையில்
வந்தார் கணவர்
புது நபருடனே.
காப்பி கொடுக்கையில்
கணவர் சொன்னார்.

‘இவ என் மனைவி’
கூப்பிய கையுடன்
வந்தவர் கேட்டார்
‘என்ன செய்யுறாங்க?’

பட்டென்று உடனே
பதில் வந்தது...
‘சும்மாதான் இருக்கா!’

# காலத்தின் சுழற்சியில்...

துளிகள் கலந்து கலந்து
புதுவெள்ளமாய்ப் பெருகும் - அதில்
கடந்த கால அழுக்குகள் எல்லாம்
அடித்துச் செல்லப்படும்.

வார்த்தைகள் கூடிக்கூடி
அதிகார வர்க்கத்தின்
கோஷங்களைக் கொடுக்கும் - அது
காதுகளைக் காயப்படுத்தும்.

வளையங்கள் பின்னிப் பின்னிச்
சங்கிலியாகும் - அதில்
அங்குசங்களுக்குக் கட்டுப்படாத
ஆனைகளும் அகப்படும்.

தீக்குச்சிகள் சேர்ந்து சேர்ந்து
தீப்பந்தமாகும் - அது
யுக இருட்டை விரட்டும்.

கோபங்கள் வளர்ந்து வளர்ந்து
ஆவேசமாக அணிவகுக்கும் - அது
புதிய விடியலை வடிவமைக்கும்.

இந்த நம்பிக்கைகளை உச்சரித்தபடி
தாட்களாகும் நாட்களுக்கு மத்தியில்
உயிர்ப்போடு பிறக்கும் தினமே
இந்த மே தினம்.

## வளைக்கரங்கள்

ஆண்கள் பிறந்தால்
இனிப்பையும்
பெண்கள் பிறந்தால்
சலிப்பையும்
பரிமாறிக் கொள்வதே
பழக்கமாய்ப் போனது.

பெண்ணாய் ஜனித்ததாலேயே
சில கருக்களுக்கு
கருவறையே கல்லறையாகும்.

வளர்ந்து மலர்ந்து
மணம் கொடுக்கும் வரை
அந்த
மொட்டுகள் குட்டுகள் வாங்கியே
நொந்து போகும்

வீதிக்கு வந்து
வேலைக்குப் போனாலும்
பாதிக்கும் பொழுதுகள்
பாதிக்கு மேல்.

அந்த
வானவில்கள்
நாணவில் வளைக்க வேண்டும்.

கண்ணீர் சுரக்கும்
விழிகளில்
கனல் நிரப்ப வேண்டும்.

ஆவேசப் புறப்பாட்டில்
சமூக முரண்பாடு
சரியாக்கப்பட வேண்டும்.

நம்பிக்கையிருக்கிறது...
வளைக்கரங்கள் அந்த
வரலாறு எழுதும்!

## முடியவே... முடியாது

அந்த டவுன் பஸ்சின் படி
உயர்ந்திருப்பதாலே
முன்பெல்லாம்
ஓடும் போதுதான்
ஏற முடியாது.

இப்போதோ
கட்டணம் உயர்ந்துவிட்டதாலே
நிற்கும் போதும்
ஏற முடியாது.

# என்ன செய்வதாய் உத்தேசம்?

சிக்கலில் இருக்குது இத்தேசம்
என்ன செய்வதாய் உத்தேசம்?

இந்தியனே நீ பதில் சொல்லு.
தீர்வின் திசையில் போய் நில்லு.

நாரில் கோர்த்தோம் மலர் மாலை
நாமே அறுக்க உதிருவதோ?

வேரில் வெந்நீர் ஊற்றுவதால்
வெற்றிப் பயிரும் கருகுவதோ?

விடுதலை நாளில் ஒன்றானோம்
சேர்ந்து உழைக்க வென்றோம் நாம்.
கெடுதலை மாற்றி நன்மை பெற
கிளர்ந்தோம் புதிதாய் நாம் மலர்ந்தோம்.

தேசப் புகழைத் திசை யெட்டும்
பேசக் கிடைக்கும் பொன் பொழுதில்
நாசம் விளைக்க நாட்டுக்குள்
நாளும் விரியும் சதிவலைகள்.

உலகம் புகழும் தேசத்தில்
உயிர்ப்பலி கேட்கும் கலவரங்கள்
கலகம் பலவும் மூளுவதற்கு
மதஇன வெறியே காரணங்கள்.

நாட்கள் நகருது சோகத்தில் - நம்
வாழ்க்கை கிடக்குது ஓரத்தில்
ஆட்கள் சேர்ந்து மாற்றாமல்
அழுவதில் என்ன லாபங்கள்?

சிக்கலில் இருக்குது இத்தேசம்
என்ன செய்வதாய் உத்தேசம்?

# சத்தம் போட்டுச் சொல்லுங்கள்
(அமெரிக்க – ஈராக்கின் மீது தாக்குதல் தொடுத்த போது)

யுத்தம் வேண்டாம்! யுத்தம் வேண்டாம்!
சத்தம் போட்டுச் சொல்லுங்கள்.
யுத்தவெறிக்கு எதிராய் உங்கள்
கைகளைக் கோர்த்துக் கொள்ளுங்கள்.

எத்தனை இன்பம் இத்தரை மீதில்
இருக்குது எண்ணிப் பாருங்கள் - அவை
அத்தனையும் சில குண்டுகளால்
அழிவது முறையா? கேளுங்கள்.

வெள்ளை மாளிகை தன்வலு காட்ட
யுத்த நெருப்பை மூட்டுவதா?
பிள்ளைகள் பெண்கள் முதியவர் அழித்து
படையின் பலத்தைக் காட்டுவதா?

எழுத்துக் கூட்டும் பிஞ்சுக் கைகள்
கவசம் மாட்டப் பழகுவதோ?
இழுத்துப் பிடித்த மூச்சுக் காற்றில்
ஒவ்வொரு நொடியும் அழுகுவதோ?

எண்ணெய் விளைந்த வயல்களில் எல்லாம்
இரத்தத் துளிகள் ஊறி வரும்.
இன்னும் இந்தநிலை தொடர்ந்தாலோ
பூமியே காடாய் மாறி விடும்.

ஏவுகணைகள் போகும் வீதியில்
புறாக்கள் பறக்க வழி செய்வோம்.
பூவும் மிஞ்சா நிலை வருமானால்
சரித்திரத்தில் நாம் பழி கொள்வோம்.

யுத்தம் வேண்டாம்! யுத்தம் வேண்டாம்!
சத்தம் போட்டுச் சொல்லுங்கள்.
யுத்த வெறிக்கு எதிராய் - உங்கள்
கைகளைக் கோர்த்துக் கொள்ளுங்கள்.

# மரம்

கை நீட்டி நிற்கும்
பயில்வான் மாதிரி
கம்பீரமாய் நிற்கும்
அந்த ஆலமரம்.

ஊருக்குள் நுழையும்
யாருக்கும்
அதன் நிழலில்
நிற்கப் பிடிக்கும்.

சந்தைக்குப் போய் வரும்
ஜனங்கள்
அதன் மடியில் அமர்ந்து
வெற்றிலை போட்டால்
அதிகம் சிவப்பதாய்
ஆனந்தப் படுவார்கள்.

விழுது ஊஞ்சலாடி
விழுந்து எழுவது தான்
சின்னஞ் சிறுசுகளின்
விடுமுறை விருப்பம்.

மழை நாட்களில்
மேய்ப்பவர்கள்
அந்தக் குடையின் கீழ்
கிடை போடுவார்கள்.

அந்தப் பந்தலின் கீழ் நடக்கும்
பவுர்ணமிப் பஞ்சாயத்துகள்
ஊரின் தீராத
சிக்கல்களுக்குச் சிக்கெடுக்கும்.

அனைவரையும் கவர்ந்த
அந்த ஆலமரத்தை
விடியலில் யாரோ
வெட்டி விட்டார்கள்.

விசாரித்தேன்
மரக்கடை மருது
பிரமுகர்கள் துணையோடு
அதை
பட்டமரத்தின் பட்டியலில்
சேர்த்து விட்டாராம்.

வெட்டுக் கூலியாய் எட்டு
அதிகம் பெற்ற
அப்பாவி ஜனங்கள்
அப்போது சொன்னார்களாம்.

"மருது மாதிரி
ஆளுகளாலத் தான்
ஊருக்குள்ள இன்னும்
மழையே பெய்யுது."

# க... வி... தை

கவிதை
வார்த்தைகளின் சேர்ப்பு அல்ல
வாழ்க்கையின் வார்ப்பு.

வார்த்தைச் செதுக்கி
வடிவ நேர்த்தி
புதிய உத்தி
எல்லாம் சரிதான்.
புரியும் கவிதையே
வினை புரியும்.

மனங்களின்
போராட்டத்தை விடவும்
ஜனங்களின்
போராட்டம்
நல்ல பாடுபொருள் தான்.

அழுது கொண்டும்
தொழுது கொண்டும்
இருப்பவர்
எழுவதற்காக
எழுதப்படட்டும்...
இன்னும் கவிதைகள்.

## பதிவு

'எதைப்பதிவு செய்ய'
அலைபாயும் கவிதையே! போ.

தூரத்தில்
சாரத்தில்
நின்றபடி வேலை செய்யும்
கொத்தனார்களை உற்றுப்பார்.

அவர்கள் குழைத்த
சிமெண்டில்
வேர்வையும் கலந்திருப்பதை விசாரி.

கரண்டி நகரும்
வேகத்திற்கேற்ப
சந்தம் சொல்லு.

சித்தாள்களாய் இருக்கும் சிறுமிகள்
தட்டு மாற்றுகையில்
கனவுகளும் சேர்ந்து
கைமாறுவதைக் கவனி
மணலை, நீரை, சிமெண்டை,
எப்படிக் கலந்தால்
சரிப்படும்
என்று தெரிந்த இவர்களுக்கு
வாழ்க்கையேன் வசப்படவில்லை
என்பதை யோசி.

அடுக்குக் கட்டிடம் எழுப்பும்
இவர்களின் படுக்கை
மணல்மேட்டில்தான் என்பதை
மறக்காமல் குறிப்பிடு.

## வாழ்க்கை

படையெடுத்தாற்போல்
பறக்கும் பறவைகள்
எங்கே இறங்கும்?
கண்டு கொள்ளவேண்டும்.

பன்னீர் மரத்தின்
பாதங்களில்
சிதறிக் கிடைக்கும்
சின்ன நாதஸ்வரங்களை
ஒவ்வொன்றாய் எடுத்து
தேன் குடிக்க வேண்டும்.

கோப்பைக் காப்பியை
சொட்டாய் உறிஞ்சி
பத்திரிகைப் பத்திகளை
வரி கூட விடாமல்
வாசிக்க வேண்டும்.

வானொலி வழங்கும்
திரைப்பாடலோடு
சேர்ந்திசைத்துச்
சிரித்திட வேண்டும்.

நுரைக்க நுரைக்க
சோப்புப் போட்டு
ஆனந்தக் குளியலுக்கு
அரைமணி வேண்டும்.

மனசின் மனுக்களைக்
கிழித்துப் போட்டு
ஐந்து மணிக்கு
அலாரம் அடக்கினேன்.

அரக்கப் பரக்கக்
கிளம்பிட வேண்டும்
ஐந்தரை மணிக்கு
ஆலையில் வேலை.

## பேறு

உன் பெயர் தெரிந்தது
பேசக் கற்றதன்
பயன் பெற்றேன்.

அடிக்கடி உச்சரித்தேன்
பெயரின் எழுத்துகள்
தேய்ந்திருக்குமே?
எழுத்துகள் நன்றி கூற
மொழி வழிமொழிகிறது.

தன்னுள் ஒளிந்திருந்த
பொக்கிசத்தை
அடையாளம் காட்டியதற்காய்.

# வளர்சிதை மாற்றம்

காம்பஸில்
வட்டம் போட
பட்ட சிரமங்கள்
அடைதோசை சுடுகையில்
அடி மனசில் வரும்.

பள்ளி நாட்களில்
மலர்ந்த கவிதைகள்
சலவை -
மளிகை லிஸ்டுகளாக
உருமாறிப் போவதாய்
ஓர் உணர்வு.

பிறந்த நாள் பரிசாய்
பெரிய மாமா
வாட்டர் கலர் பாக்ஸ்
வாங்கித் தருகையில்
ஓவியராக
அளித்த ஆசிகள்
மார்கழி விடியலில்
மனசில் ஒலிக்கும்.

ஸ்போர்ட்ஸ் சைக்கிள் கேட்டு
அப்பாவிடம் அழுத அழுகை
கணவரின் நச்சரிப்பில்
ஸ்கூட்டர் கேட்டு
கடிதம் எழுதுகையில்
நினைவுக்கு வருகிறது.

குடும்பச் சண்டைகளில்
பலகீனமாகும்
என் குரல்
பேச்சுப் போட்டிகளில்
பெற்ற கோப்பைகளில்
மோதி மோதிச்
சிதைந்து போகும்.

## அதற்கு மட்டும்...

பிறப்புப் பதிவேட்டில்
அப்பா பதிந்தாராம்.

எம்ப்ளாய்மெண்ட்
எக்சேஞ்சுக்கு
நானே போனேன்.

வாக்காளர் பட்டியலுக்கு மட்டும்
அரசாங்கமே அனுப்பியது.

## நம்மைச்சுற்றி...

பொய்யோடு
பழகிப் பழகி
உண்மையின் தன்மை
ஒருவருக்கும் தெரியவில்லை.

வாய் திறக்கும் போதெல்லாம்
ஐஸ் வைத்து, ஐஸ் வைத்து
சிலர்
நடமாடும் பிரிட்ஜாய்
மாறிப் போனார்கள்.

அழுக்குகள்
வாசனை சோப்புகளாய்
வலம் வருகின்றன.

திறமையின் கழுத்து
திருகப்பட்டு
சிபாரிசுகளுக்கெல்லாம்
சிம்மாசனம் தரப்படுகிறது.
வன்முறை
ஒரு
பொழுதுபோக்காய்ப் போயிற்று.

மூச்சுக் காற்றுகளைத்
திருடிக்கொண்டு
விசிறி கொடுக்கிறார்கள்.

அநீதிகளை அங்கீகரிப்பது
பொது நீதியாகி விட்டது.

ஆனாலும் நண்பா?

வாழ்க்கை
பிழைத்தலில் அல்ல
வாழ்தலில் இருக்கிறது.

## பொழுதிருக்கிறது தோழா!

பொழுதிருக்கிறது தோழா! புலம்பாதே!
அழுவதற்காக அல்ல
உன் அகல விழிகள்.

உதிரிகளாய் நாம் இருக்கும் வரை
எதிரிகள் ஏளனம் தான் செய்வார்கள்.
ஒன்றாகச் சேர்ந்து உழைப்பதாலேயே
வென்றாக முடியும் வெற்றியை...

பொழுதிருக்கிறது தோழா! புலம்பாதே.

## காது குத்து

அக்காள் போட்ட
கடிதம் கிடைத்தது.

ஒரே மகளுக்குக்
காது குத்தாம்.

மாமன் சீர்தான்
மரியாதை தருமாம்.

பட்டுச்சட்டை
பலகாரத் தட்டு
மாலை சந்தனம்
காதுக்குத் தொங்கல்...

பட்டியல் நீண்டு
பயங்காட்டியது.

சீட்டு எடுத்தும்
வட்டிக்கு வாங்கியும்
தொங்கட்டான் வாங்கத்
துண்டு விழுந்தது.
எல்லாம் முடிந்து
தெருக் கோடியில்
பஸ்சுக்காக காத்திருக்கையில்...

ஊர் முழுக்க
சீர்தான் பேச்சு.

எவருக்குமே இதுபோல்
செய்ததில்லை.
மச்சான் வீட்டிலும் சந்தோசந்தான்.

பேசிக்கொண்டே வந்த அக்காள்
அப்போதுதான் கவனித்து
மனைவியிடம் கேட்டாள்

“என்னடி இது கவரிங் வளையம்?
என்ன ஆச்சு உன் கல்தோடு?”

## பயணம்

நடந்து நடந்து
நம்முன்னோர் போட்டது
நாமின்று போகும்
பாதைகள் அறிவோம்.

இருக்கும் பாதையில்
நடப்பவர் ஒருவகை.

புதிதாய்ப் பாதைகள்
அமைப்பவர் ஒருவகை.

எந்தப் பாதையில்
இனி நம் பயணம்?
என்பதில் இருக்கணும்
எப்போதும் கவனம்.

# காப்பி

ஒரு காலத்தில் உற்சாக பானம்.
இப்போது நடுத்தர வர்க்கத்தின்
பட்ஜெட்டில் விடப்படும் பாணம்
புதிய பொருளாதாரக்
கொள்கை யென்றார்கள்.

பொருட்களின் விலையோ
கொள்ளையாய் உயர்ந்தது.

எல்லா பொருட்களும்
எவரெஸ்டில் ஏற
வீட்டு பட்ஜெட்டில்
விவகாரம் ஆனது.
இனி
காப்பி அடிப்பது மாதிரி
காப்பி குடிப்பதையும்
ரகசியமாகத்தான் செய்ய வேண்டும்.

காரணம் கேட்டால்
'காட்'டால் என்கிறார்கள்'
ஆலைத் தொழிலாளர்கள்
அதை எதிர்க்கையில்
கூலித் தொழிலாளர்கள்
கோசம் கொடுக்கையில்

பொதுத்துறை அலுவலர்கள்
பொங்கி எழுகையில்
வேடிக்கை பார்த்த வீட்டுக்குள்ளும்

‘காட்’ தன் கை வரிசை காட்டுகிறது.
காப்பி பார் என்று
கடைக்காரன் எழுதியது சரிதான்.

விற்கும் விலையில்
காப்பி குடிக்க முடியாது
பார்க்கத்தான் முடியும்.

## தகிப்பு

விறகு எரிந்தால் கரியாகும்.
கரி எரிந்தால் சாம்பலாகும்.
உன் நினைவுகள் மட்டும்
எதுவுமே மிஞ்சாமல்
எரிக்கிறதே... எப்படி?

## கேள்விகள்

கேள்விகள் கேள்
எப்போதும்
எதைப் பற்றியும்.

வினாக்கள்
விடியலுக்கான கனாக்கள்.

கேள்விக்குறி
வளர்ச்சிக்கு அறிகுறி

அந்த
கொக்கியில் சிக்கிக் கொள்ளும்
பிரச்சினைகள்

எப்போதும்
பிசுபிசுத்துப் போகும்.

கேள்விக் குறிகள்
தொடர்ந்து
இணைந்ததால்தான்
காலத்தேர்
இந்த நிலையில் நிற்கிறது.
கேள்விக்குறிகள்
சரித்திரத்தைத் தூக்கி
அந்தப்புறம் வைக்கும்.
மூளையில் முளைத்த
கேள்விகள்
கண்டுபிடிப்புகளுக்குக்
காரணமாகும்.

தோல்வியில் பிறக்கும்
கேள்விகள்
வெற்றிக்கான
வழி சொல்லிக் கொடுக்கும்.

ஆமாம் சாமிகள்
அதிகரித்து விட்டார்கள்.

கேள்வி கேட்பது
கெட்ட செயல் ஆகிவிட்டது.
இது நல்லதல்ல.

வந்தனை கலாச்சாரம்
சிந்தனையை மழுங்கடிக்கும்
மூளையின் வேலை
மூலையில் கிடப்பதன்று.

சிந்திப்பது
செயல்படுத்துவது
கண்காணிப்பது

அதற்குக் கேள்விகள் முக்கியம்.

கேள்விகள் கேள்
எப்போதும்
எதைப் பற்றியும்.

# இளைய தோழனே!

இளைய தோழனே!
உன் கவலையின்
ஆழ அகலங்களை நான்
அறிவேன்.

எதிர்காலத்தைப் பற்றி
சட்டை செய்யாத நீ
நல்ல சட்டைகள் இல்லையே
என்று சங்கடப்படுவாய்.

விளையாட்டாய் காதலித்து
தோற்றுப் போனதும்
தாடி வளர்த்து
சோகம் சொல்லுவாய்.

புதியதாய் வந்த
படங்களைப்
பார்க்க முடியவில்லையே என்று
கவலை சுமப்பாய்.

பொறு.

இவ்வளவு குறுகியதல்ல
உன் இலட்சியம்
அது வானமளவிற்கு வளர்ந்தது.

சமூகச் சிக்கல்களுக்கு
சிக்கெடுக்க வேண்டிய நீ
சின்னப் பிரச்சினைக்குள்
சிக்குண்டு போகாதே.

ஏனெனில்
எவரெஸ்டைத் தொட நினைக்கிற
டென்சிங்குகள்
எல்ஜசியின் உயரத்திலேயே
மயங்கிவிட மாட்டார்கள்.

## பாரத தேசம் என்று...

பாலாறும் தேனாறும் பாயும்
என்று
பேசிப் பேசியே...
கோளாறாய்ப் போன தேசமிது!

# விட்டு விடுதலையாகி...

சிட்டுக் குருவிக்கு
சிரமம் இல்லை.
காஸ் கனெக்ஷன்
காய்கறி பேரம்.
மளிகைக்காரனிடம்
பல்லிளிப்பு.
சிட்டுக்குருவிக்கு
சிரமம் இல்லை.

அதிகப்பட்சம் போனால்
ஐந்தாறு அரிசிதான்.
கடனுக்கு அலைச்சல்
காண்டிராக்டர் மோசடி.
சிமெண்ட் விலை உயர்வால்
தூக்கம் தொலைப்பு.

சிட்டுக்குருவிக்குச்
சிரமம் இல்லை.
தேவையெல்லாம்
கொஞ்சம் தேங்காய் நார்தான்.
அவதூறு பேச்சு.
அதிகாரப் போட்டி.
பழகிய ஆளுக்கே
பள்ளம் தோண்டுதல்.

சிட்டுக்குருவிக்குச்
சிரமம் இல்லை.
எப்போதும் -
நேசப் பார்வையும்
சந்தோசப்பாட்டும் தான்.

## இழப்புகள்

காத்திருந்து
கோணம் சொல்லி
ஆசை ஆசையாய்
எடுத்துக் கொண்டு
கழுவிப் பார்த்த பின்
கருப்படித்த புகைப்படம்.

டிசைனில் லயித்து
கடை விசாரித்து
சம்பள நாளுக்காய்
கொஞ்ச நாள் பொறுத்து
காசு வந்ததும்
வாங்கப் போனால்
விற்றுப் போயிருந்த சட்டைத்துணி.

எதிர்ப் பேருந்தின்
புதிர் விடுவித்து
அந்தநாள் முகத்தை
அடையாளம் கண்டு
அழைக்கப் போகையில்
வண்டி நகர்ந்ததால்
நழுவிய நட்பு.

மின்னலாய் உதித்து
அப்புறம் மறந்து
எத்தனை முறை
யோசித்துப் பார்த்தாலும்
பிடிபடாத கவிதை வரி.

## விளையாட்டாய்...

வீரடிப்பட்டி வேலுச்சாமிக்கு
விளையாட்டுன்னா
உசிருதான்.

பைக்கட்டை வீசி
மைதானம் போனால்
அம்மா வந்துதான்
இழுத்துப் போவாள்.

பச்சைக் குதிரையில்
அவனை ஜெயிக்க
பள்ளிக் கூடத்தில்
ஆள் கிடையாது.

உயரம் தாண்டணும்
உலகமே புகழணும்
போட்டிகள் ஜெயித்து
கோப்பைகள் வாங்கணும்.

கால்சட்டைப் பைகளில்
கனவுகள் நிரப்பி
ஸ்போர்ட்ஸ் ஸ்கூலுக்கு
விண்ணப்பம் போட்டான்.

காத்துக் காத்து
சலித்துப் போனபின்
தள்ளுபடி ஆனதாய்
தபால் வந்தது.

மாவட்டத்துக்கே ஒரு
சீட்டு தானாம்.

மந்திரியின் சிபாரிசில்
தந்து விட்டார்களாம்.

விசாரித்த போது
விவரம் தெரிந்தது.

பள்ளி விழாவுக்கு
மந்திரி வந்தார்.

கிராமப்புற இளைஞர்களின்
திறமையை வளர்க்க
உதவி செய்யவே பதவி
என்றார்.

கைத்தட்டல் ஓசை
காதைக் கிழித்தது.

## பார்த்தவை

நண்பரின் மகளுக்குத்
திருமணம் நடந்தது.

நண்பகல் உணவுக்குப்பின்
நாங்கள் கிளம்பினோம்.

வீட்டுக்கு வந்தபின்
கல்யாணப் பேச்சு.

பட்டுப் புடவையின்
பார்டர் பார்த்தாயா?

எவ்வளவு ஜரிகை
என்றாள் அம்மா.

அத்தனை பேரிடமும்
அன்பாய்ப் பேசி
மாப்பிள்ளை பழகும்
தன்மை பார்த்தீர்களா!
என்றாள் மனைவி.

கல்யாண மேடையில்
கட்டியிருந்த
பலூன்கள் பார்த்தாயா?
எத்தனை பெரிசு?
என்றான் பையன்.

போன முறை
என் நண்பரைச்
சிரிப்போடு பார்த்ததாய்
எனக்கு நினைவு.

# இனி நம் நிமிடங்கள்...

மே 1.
வியர்வையின் விழா.

உழைக்கும் வர்க்கத்தின்
உரிமைத் திருவிழா.

பூமிப்பந்தின் மேடுபள்ளங்களை
வியர்வையால் நிரப்பும் தோழர்கள்
தொழிற் சங்கத்திற்குத்
தொட்டில் கட்டிய நாள்.

அடிமைச் சங்கிலியை
அகற்றும் சுத்தியல்
போராட்டம்தான் என போதித்த நாள்.

இந்த சாதனை நாளில்
நாம் சபதமேற்போம்.

வரிக்க மூலங்களைக் கண்டு
வருங்காலக் கணக்கு செய்வோம்.

விடைகளை மட்டுமல்ல
தடைகளையும் கண்டு கொள்வோம்.

இனி...
நம் நிமிடங்கள் - அந்த
சரித்திரத்திற்காக சம்பவமாகட்டும்.

## கவலை

கொட்டையோடு
விழுங்கிய இலந்தை
மரமாய் முளைக்குமோ?

கிளைவிட்டு வளர்ந்து
வயிறு கிழிக்குமோ?

கூட்டத்தில் தப்பிய
குட்டி மேகம்
ஓடிச் சேருமோ?

தனியாய்க் கிடந்து
தவித்துப் போகுமோ?

நோட்டுக்குள்ளே
வைத்த என் மயில்
ஊருக்குப் போகிற நாளாய்ப் பார்த்து
குட்டி போட்டால்
என்ன ஆகும்?

தீனி யார் கொடுப்பார்?

பள்ளி நாட்களில்
பால்ய வயதில்
தினம் ஒரு கவலை
மனதில் எழும்பும்
வேலை கிடைக்குமா?
கிடைத்தது நிலைக்குமா?
வருமானம் போதுமா?
வாழ்க்கை சிறக்குமா?

வளர்ந்தபிறகு
வளர்கிற கவலையில்
மாட்டிக் கொள்கிற
மனசு நினைக்கும்;

மீண்டும் வராதா?
பால்ய நாட்கள்.

## ஜன நாயகம்

பூச்சொரியத்தான்
ஆட்சிக்கு அனுப்பினோம்.
அவர்களோ
காதுகளில்
அதைச் சுற்றுகிறார்கள்.

## காலம் சிவந்திருக்கு

‘மாலை வேளையிலே
மனங்கவரும் சேலையிலே
அம்மன் சிலை போல
ஆத்தோரம் போற புள்ள
நித்தம் நித்தம்
ஒன் நெனப்பு
நெஞ்சத்தக் கொல்லுதடி...’

‘அய்யா உயர்ந்த இனம்
ஆதிக்கம் உங்க குணம்
கண் பார்க்க நெனைச்சாலே
கட்டி வச்சு அடிப்பாக
அய்யோ வேணாங்க
அழிஞ்சுடுமே எங்க சனம்...’

‘சாதி மதங்களுன்னு
சனங்கள பிரிச்சு வைக்கும்
ஆதியில உள்ள நெல
அடிபுள்ள இப்ப இல்ல...

நாத்தும் வளர்ந்துடுது
காத்த கலந்துடுது
மாத்த ஒரு ஆளு இல்ல
மனுசருக்கா தடைகள் சொல்ல?
விரும்புகிற அரும்பு எல்லாம்
விருப்பம் போல் கட்டிக்கிட
சட்டம் கூட வந்தாச்சு
சம்மதத்த சொல்லு புள்ள...’

‘ஆசை எனக்கிருக்கு
அடிமனசில் பயமிருக்கு.

நேசம் வளர்த்தவரே
நெஞ்சத்தில் துணிவிருக்கா?'
'உள்ளத்தில் வலுவிருக்கு
உதவ நல்ல ஆளிருக்கு.
கள்ளி ஒன் பொட்டுபோல
காலமும் சிவந்திருக்கு.
எதுவரினும் எதிர்த்து நிற்போம்
எதிர்காலம் நம்மளுக்கே!'

## வெள்ளம்

வெக்கையில்
மனம் வெதும்பிச்
சொட்டு மழைக்கு
ஏங்கினேன்

வெள்ளமாய்ப் பிரவகித்து
துரும்பாய் அடித்துச் சென்றாய்
என்னை நீ.

# கோபக்காரன்

பஸ்சில் கிளம்பி
வேலைக்குப் போகையில்
முன்சீட்டுப் பெண் மீது
தன் காலை உரசும்
முரட்டு ஆளை
அதட்டிக் கேட்க
ஆசை வந்தும்
வம்புக்குப் பயந்து
வாய்மூடிக் கொள்வேன்.

ஊழல் விவகாரத்தில்
உதவ மறுத்ததால்
எடுத்ததற்கெல்லாம்
குற்றம் சொல்லும்
அதிகாரி முன்னால்
கோபத்தை மறைத்து
குழைந்து நிற்பேன்.

கேன்டினில் நின்று
பேப்பர் படிக்கையில்
தன் பை நிரப்ப
கமிஷன் வாங்கி

பொருள் விலை உயர்வை
நியாயப்படுத்தும்
அமைச்சரைத் திட்ட
ஆத்திரம் வந்தும்
கரைவேட்டி பார்த்து
குறை சொல்லாதிருப்பேன்.

வேலை முடிந்து
வீட்டுக்கு வந்ததும்

மனைவி எனக்கு
காப்பி கொடுக்கையில்
'சூடு ரொம்பக் குறைவு' என்று
டம்ளரைத் தூக்கி
முகத்தில் அடிப்பேன்.

## கண்டுபிடி

அடித்துப் பெய்தது கனத்த மழை
எத்துளி முதல் துளி அறிவாயோ?
தெருவெங்கும் சுடரும் தீபங்கள்
முதலில் ஏற்றியது எந்த அகல்?
விரும்பிப் படித்தாய் நீள் கவிதை
எவ்வரி முதலில் எழுதியது?
நட்பாய்ப் பல நாள் பழகி வந்தோம்.
நாம் காதலில் வீழ்ந்தது எந்த நொடி?

# ஒன்... டூ... த்ரீ...

எழு
ஏதாவது செய்.
இங்கு
எதற்கும் வேண்டும் இயக்கம்.

இயக்கம்
உயிர்ப்பின் அடையாளம்.

ஒவ்வொரு நொடியும் ஓடு
வில்லின் நாணாய்
விளங்கு.

வெட்டுப்பட்டாலும்
கட்டுப்படாமல்
பல்லியின் வால்கூட
துள்ளி விழுமே.

எப்படி இருக்கிறாய்?
இப்படி.
அணுக்களின் இயக்கத்தால்
அண்டம் வந்ததாம்
நீ
நுணுக்கமாய் இயங்கினால்
தண்டம் வருமா?
சும்மா இருப்பதே
சுகம் என்பவர்
இருப்பதை விட
இறப்பது நல்லது.

உறக்கம் கலை
ஜன்னலின் வழியே
சாலையைப் பார்.

கார்... பஸ்... ஸ்கூட்டர் என
ஓட்டம் பார்ப்பதே
சோர்வை ஓட்டும்.

ஒரு
இரயில் எஞ்ஜினாய்
எப்போதும் இயங்கு.

கூடவே பலரைச்
சேர்த்துக் கொண்டு
உற்சாகமாகக்
கூவிக்கொண்டு...

## தூர்தல்

உடைப்பெடுத்த ஏரியை
அடைக்கக் கூடுவார்கள்
அப்போது.

ஏரிகளைத் தூற்றுப்
பிளாட்டாக்கி
குழி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்
இப்போது.

# வேடிக்கை

அவள்
பறந்து திரியும் பட்டாம்பூச்சி,
அஞ்சு படிக்கும் பிஞ்சு.
அந்த
ஏழைக்கிளியிடம் இருப்பது
ஒரே உடைதான்.

ஒவ்வொரு நாளும்
பள்ளி விட்டபின்
பாவாடை தோய்க்க
அந்தப் பூ ஓடும்.
அப்போது
அம்மாவின் பழந்துணி ஆடையாகும்.

மழை நாட்களில்
தோய்த்த துணியுடன்
வீட்டுக்குள் ஓடி ஓடியே
முட்டி வலிக்கும்.

அவ்வப்போது வரும்
கிழிசல்களைப்
பார்த்துப் பார்த்து
அம்மா தைப்பாள்.

பொக்கிசம் போல் இருந்த
ஆடையில்

ஒரு பக்கம் பெரிதாய்க்
கிழிந்து போனது.
அம்மா தந்த
ஐந்து ரூபாயுடன்
தையற்கடைக்குத் தாவி ஓடினாள்.

‘புதுத்துணி தைக்கவே
பொழுதில்லை எனக்கு - உன்
கிழிசலைத் தைக்க எனக்கேது நேரம்?’

டைலரின் குரல்
நாயாய் துரத்த
அழுதுகொண்டே அவள் வருகையில்
ரெடிமேட் கடையின்
வாசல் பொம்மையின்
ஆடை பார்த்து
அதிசயப்படுவாள்.

## விளக்கம்

பித்தளைச் சட்டிகளுக்குப்
புளிச்சக்கை.
சில்வர் தட்டுகளுக்கு
விம் பவுடர்.
வெள்ளிப் பாத்திரங்களுக்கு
விபூதி மட்டும்.
பளபளவென விளக்கி வைக்கும்
அம்மாவால்
கடைசிவரை
விளக்கவே முடியவில்லை
அப்பாவிடம்
தன் மனசை.

# பெயர்

ஊரைக் கூட்டி
காப்பரிசி கொடுத்து
பெயர் சூட்டும் விழா
பிரமாதமாய் நடக்கும்.

'வெல்லக் கட்டி'
'செல்லக் குட்டி'
என
அம்மா அழைப்பாள்
ஆயிரம் பேர்களில்
'சனியன்' தொடங்கி
'மூதேவி' வரை
வசவுகள்
சில நேரம்
பெயராய் மாறும்.

வேலை கிடைக்கா
வெப்ப நாட்களில்
அப்பா அழைப்பார்
'தண்டச் சோறு.'

எலெக்சன் பூத்தில்
'ஓட்டு வருது'
டிரைவர் சொல்வார்
'டிக்கெட் நிற்குது'
டாக்டர் கேட்பார்
'பேஷண்ட் வந்தாச்சா?'

உறவுகள் பெயராய்
உட்கார்ந்து கொள்ளும்.
வேலையே பெயராய்
விளங்கவும் செய்யும்.

எண்களே பெயராய்
இருப்பதும் உண்டு.
ஊர்ப் பெயர்
பெயராய்
நிலைப்பதும் உண்டு.

இன்ஷியல் சொல்வதும்
பட்டங்கள் கொள்வதும்
வளர்ந்த பிறகு
வரும் பெயர்கள்.

ஜாதியின் பெயரால்
பல பேர் அழைப்பார்.
ஜாலியாய் பெயர் வைக்க
நண்பர்கள் இருப்பார்.
பெயர் இங்கு
பேருக்குத்தானா?

## ஜீவிதம்

சாப்பிட்டு
படுக்கப் போய் -
மீண்டும் சாப்பிட்டு
மொத்த நாட்களும்
செத்த நாட்களாய்
இருப்பதில் என்ன இருக்கிறது?

பயந்து பயந்து
கழிக்கும் பொழுதுகளால்
பயன் என்ன?
நாளொன்று கழிந்தது
என்பதன்றி.

மின்மினி கூட
ஒளிர்ந்து விட்டுத்தான்
செத்துப் போகிறது.

வெள்ளம் வடிந்தபின்
சுவடுகள் கிடக்குமே
அப்படி
சாவுக்குப்பின்
ஒரு சரிதம் வேண்டும்.
அப்படியே ஏற்று
அமைதியாவது.

அதிசயம் நிகழக்
காத்திருப்பது.

இவற்றை விடவும்
முயன்று பார்த்தல்
முற்றிலும் நல்லது.

முதல் முயற்சியில்
தோல்வியும் கிடைக்கலாம்.

முதலில்
முயன்றதே வெற்றிதானே.

## மனசில்...

அடைமழை நாளில்
இடைவெளி கிடைக்க
வீதிக்கு வந்து
விளையாடினான் மகன்.

திடீரென மேகம்
தீர்த்தம் தெளிக்க
மனைவி பதைத்து
மகனைத் தூக்கினாள்.

துண்டை எடுத்தவள்
துவட்டும் வேளையில்
முச்சந்தியிலிருந்து
பிச்சை கேட்கும்
சக்கர வண்டிச் சிறுமி
என்ன ஆனாளோ
என்ற எண்ணம் வந்தது.

## ஊர்கோலம்

விடியல் எழுந்து
வீதி திருத்தி
வாசல் கோலம்
வரையும் சகோதரீ!

விடியல் கிடைக்க
விதியைத் திருத்த
முடிவு எடுத்தால்
முடியாதா என்ன!

புள்ளிகள் இட்டு
இணைக்கிற உனக்கு
வாழ்க்கையை வரைவது
வசப்படாதா?

எண்ணம் போல
வண்ணம் கொடுக்கிறாய்
வடிவம் கொடுக்க
இன்னுமேன் தயக்கம்!

அழகாய் கோலம்
அமையும் வரை
அழித்துப் போட்டால்
தவறில்லை.

சீறிப்பாயும்
பாம்புக் கோலம்
சித்திரத்தில் மட்டும் தானா?
அவலம் மாற்ற
அணிவகுத்து ஓர்
ஊர்கோலம் எப்போது?

## ஞானம்

பூவரச இலையில்
நாயனம் செய்து
எச்சில் ஒழுக
கச்சேரி செய்யும்
தலித் சிறுவன்
நாளை ஒரு நாமகிரி ஆகலாம்.

உச்சி மாங்காயை
கச்சிதமாய் அடிக்கும்
குட்டிப் பையனின்
கை வீச்சில்
கபில்தேவின் லாவகம் தெரிகிறது.

'நீராருங் கடலுடுத்த'
கோரஸ் பாட்டுக்குள்
எத்தனை ஜேசுதாஸ்கள்
மறைந்து கிடக்கிறார்களோ?

சாம்பலுக்குள் கிடக்கும்
தணலை
அம்மா ஊதி ஊதி
பெரிதாய் வளர்ப்பாள்.
அம்மாவின் வேலையை
யாராவது செய்தால் தேவலை.

## இருவேறு முகங்கள்

டீக்கடைப் பெஞ்சில்
அரசியல் பேசி
வீட்டுக்கு வந்ததும்
மறந்து போவாய்.

விலைவாசி குறைக்க
ஊர்வலம் போகையில்
கேலியாய்ச் சிரித்து
ஒதுங்கிப் போவாய்.

மாமூல் பற்றி
மனம் குமுறுவாய்.
காரியம் நடக்க
கவரை நீட்டுவாய்.
நீதி நியாயம்
நிறையப் பேசுவாய்.

அநீதி நடக்கையில்
கண்களை மூடுவாய்.
வார்த்தையில் ஒன்று
வாழ்க்கையில் ஒன்று
எப்போதும் உனக்கு
இரண்டு முகங்கள்.

இப்படியே நீ
இருக்கும் வரையிலும்
மாற்றம் வராது
மனதில் கொள்வாய்.

## என்ன ஆச்சு?

காலையிலே எழுந்திருச்சு
காளை ரெண்டு ஓட்டிக்கிட்டு
வேலைக்கு நான் போகயிலே
வேம்பக்கா மவளே!
வெளைஞ்ச பருத்தி போல சிரிப்ப
வேம்பக்கா மவளே!

சந்தைக்கு நான் வண்டி பூட்டி
சாமான் வாங்க போகயில
முந்தி வந்து நின்னுகிட்டு
வேம்பக்கா மவளே!

மொளைப்பயறு போல சிரிப்பே
வேம்பக்கா மவளே!

ஆத்துக்குள்ள மூழ்கி நானும்
அலை கெளம்ப குளிக்கயிலே
ஆத்தோரம் நின்னுகிட்டு
வேம்பக்கா மவளே!

சேத்த வீசி சிரிச்சு நிப்பே
வேம்பக்கா மவளே!

எட்டி எட்டி நின்னுகிட்டு
என்னென்னவோ செய்யுறியே
கிட்ட நானு வந்தா மட்டும்
வேம்பக்கா மவளே! - நீ
கிறுக்கியாட்டம் ஓடுவதேன்
வேம்பக்கா மவளே!

## தெளிவு

பக்கத்து வீட்டில்
ஒரு இளைஞன் இருக்கிறான்.
கூட்டத்தில் போவதும்
கோஷம் வைப்பதும்
வீட்டில் இருக்கையில்
புத்தகம் படிப்பதும்...
வழக்கமான வாலிபர்கள்போல
அவன் இருப்பதேயில்லை...

நாலைந்து இளைஞர்களின்
நடமாட்டம் தெரிந்தால்
அவன் வீட்டில் இருப்பதாய்
விளங்கிக் கொள்ளலாம்.
தோளில் முளைத்த
மூன்றாவது கையாய்
ஒரு ஜோல்னாப் பை
அதற்குள்ளிருந்து
ஏதாவது நோட்டீஸை
விபூதி போல் எடுத்து
விநியோகம் செய்வான்.

தாசில்தாரோடு
தகராறு என்றும்
போலீசை எதிர்த்து
பேசினான் என்றும்
காற்றுவாக்கில்
சில செய்திகள் வந்தபின்
அத்தனை வீட்டு அப்பாக்களுக்கும்
தம் பிள்ளைகள் பற்றிய
பயம் கவ்வியது.

உங்களுக்கு மட்டும்
உள்ளதைச் சொல்கிறேன்.

எனக்கும் கூட அந்த
எண்ணம் உண்டு.

புதிய முதலாளி
பொறுப்பு ஏற்றதும்
எங்கள் கம்பெனிக்கு ஒரு
கம்ப்யூட்டர் வந்தது.
என்னோடு சேர்த்து
ஏழு பேருக்கு
வேலை நீக்க ஓலை வந்தது.

இடிந்து போய் நாங்கள்
இறுகிக் கிடக்கையில்
உறுதியாய் சில பேர்
உதவ வந்தனர்.

ஆர்ப்பாட்டம் போராட்டம்
ஆதரவாய் தினம் கூட்டம்
பக்கத்து வீட்டு இளைஞன்
அந்தக் கூட்டத்தில் ஒருவனாய்
ஓடிஓடி உழைப்பதைப் பார்க்கையில்
மனசுக்குள் எனக்கு ஞானம் பிறந்தது.

விடுமுறைக்கு வரும்
மூத்த பையனை
முறையாய் இவனுக்கு
அறிமுகப்படுத்தணும்.

## வாசம்

வெள்ளிக் கிழமை
தலை குளித்தபின்
அம்மா போடும்
சாம்பிராணி வாசம்
ஆளைத் தூக்கும்.

வாசம் வந்தால்தான்
நறுக்கணும் என்று
அப்பா வைத்த பலாப்பழத்தில்
ஒவ்வொரு நாளும்
வாசம் பிடிப்பேன்.

'அய்யா மகனே
நல்லா இருக்கீயா?'
ஊருக்குப் போகையில்
உச்சி முகரும்
நாச்சி கிழவியின்
முத்தத்தில்
புகையிலை வாசம்.

சிங்கப்பூரிலிருந்து
அத்தா அனுப்பியது
சேட்டு எனக்கு
சென்ட் கொடுக்கையில்
வாசத்தோடு பாசமும்
மணக்கும்.

தலையாரி ரங்கன்
பனை மீது ஏறி...
குலையை வெட்ட
வேர்வையில் குளித்து

தண்ணீர் நுங்காய்
சீவித் தருகையில்
அவர்
கருத்த மேனியில்
கலவை வாசம்

வருசம் பலவும்
வந்து போனாலும்
பிடித்த வாசங்கள்
பிடிக்கும் எனக்கு.

## பலர் சிலர்

மதவாதம் பேசப்
பலர்
இருக்கிறார்கள்

சாதியவாதம் பேசப்
பலர்
இருக்கிறார்கள்

மனிதவாதம் பேசச்
சிலர் இருக்கிறார்களா?

எல்லோரும் வாருங்கள்
மனிதவாதம் பேசுவோம்.

# எனக்குப் பிடித்த கவிதை

எத்தனை கவிதை படித்திருக்கிறேன்...
எனக்குப் பிடித்த கவிதை
நீதான் அம்மா.

எத்தனை பேரிடம் பழகியிருக்கிறேன்...
பாசத்தின் வேர்
உன்னிடம் தான் அம்மா,

சனி, நீராட்டி சாம்பிராணி போடுவாய்
சங்கீதமாய் தாலாட்டுப் பாடுவாய்
தாமதமானால் தவித்துத் தேடுவாய்.

உன் உயிரின் முடிச்சு
நானா அம்மா?
நான் விருந்து சாப்பிட
நீ பட்டினி கிடப்பாய்.

நான் மருந்து சாப்பிட
நீ பத்தியம் கிடப்பாய்.
என் வெற்றிகளை எண்ணத்தான்
உனக்கு விரல்களா அம்மா?

சுற்றம் என்னைக்
குற்றம் சொல்கையில்
என் வக்கீல் நீ.
கவலைக் காய்ச்சலில்
வாடிப்போகையில்
என் டாக்டர் நீ.

தவறுகள் திருத்தி வார்த்தெடுக்கையில்
என் ஆசான் நீ.

சும்மா சொல்லவில்லை
அம்மா!
எனக்கு எல்லாம் நீ.

அம்மா!
அன்று என் மரப்பாச்சிக்கு
மாலை கட்டிக் கொடுத்தாய்.
இன்று நான்
கரம் பிடித்தவளுக்குச்
சரம் தொடுக்கிறாய்.

இடையில் -
வருசம் மாறியிருக்கிறது...
வாசம் மாறியிருக்கிறது...

உன் பாசம் மட்டும்
மாறவே இல்லை.

## ஏவல்

அவர்களுடன் கூடி
இரகசியமாய்ச் சதி செய்து
வீழ்த்திவிட்டதாய்
மகிழ்ந்து போகிறாய்.

உனக்குத் தெரியாது
நீ கற்றுக் கொடுத்ததை
நாளை உன் மீதே
ஏவுவார்கள்.

## மீசை

பையனாய் இருக்கையில்
ஐயனார் மீசை மீது
ஆசையாய் இருக்கும்.

பாரதி வரிகளைப்
படித்த காலத்தில்
கரியால் மீசை வரைந்து
முறுக்கி விடுவேன்.

'எடுக்க எடுக்கத்தான்
காடாய் வளருது'
அப்பாவின் சலிப்பில்
பொறி தட்ட
ரகசியமாக ரேசர் எடுப்பேன்.

பூனை முடியாய்
அரும்பிய நாளில்
சிகரத்தைத் தொட்டதாய்
சிலிர்த்துப் போனேன்.

படித்து முடித்து
அதிகாரி ஆனதும்
தினசரி ஷேவிங்
திருத்திய மீசை.

நறுக்கிச் செதுக்கிய
கருப்புச் சிற்பத்தை
தடவியபடியே
விசாரணை

யோசனை
கண்களை மூடிக்
கனவில் மிதப்பேன்.

வேலைக்கு அலைந்து
வெறுமையாய் உணர்ந்து
முகத்து முட்கள்
பிறரை உறுத்த
எப்போதாவது
இப்போது வைக்கையில்
கண்ணாடியில் நான் கரப்பான் பூச்சி.

## தக திமி தா

நில வொளி குளி
விண் மீன் எண்
மழைத் துளி ருசி
மல ருடன் சிரி
மரம் கரம் சேர்
புள் ளுடன் பற
குழல் குரல் கேள்
பறை இசை ரசி
பயணங்கள் தொடர்.

# புளி இருந்த பானை

எனக்கு நன்றாய்
நினைவிருக்கிறது.
அந்த வீட்டுக்குப்
போகும் போதெல்லாம்
ஆச்சர்யத்தோடு பார்ப்பேன்.

வரிசையாய் இருக்கும்
பெரிசாய் பானைகள்.
பழம்புளிக்கு இரண்டு
இனிப்புக்கு ஒன்று.

உருட்டி உருட்டி,
புளி எடுத்து
ஊரே மணக்க
அந்த அம்மாள்
புளிக் குழம்பு வைத்தால்
அதற்காகவே
ஒரு தட்டுச் சோறு
அதிகம் சாப்பிடலாம்.

ரசம்
இனிப்பாய் இருந்தால்தான்
இளையவனுக்கு பிடிக்குமென்று
தனியாய்ச் செய்வாள்.
மகள்
மறு வீடு போன அன்று
கட்டிக் கொடுத்த
புளிசாதம் சாப்பிட
சம்பந்தி வீட்டாரிடையே
சண்டையே நடந்ததாம்.

புருஷன் செத்துப் போக
பிள்ளைகள் கைவிட்டுப்போக
வீசியெறிந்த
புளிச் சக்கையாய் அவள்.

உள்ளூர்க் கோயிலின்
உற்சவத்தில்
இலவசமாய் வழங்கும்
புளிசாதப் பொட்டலங்களை
நடுங்கும் கைகளோடு
அவள்
வாங்குவதைப் பார்க்கையில்
மனசுக்குள்ளொரு கேள்வி.

“அந்தப் பானைகள்
இப்போது
பரண்மேல் கிடக்குமோ?”

# நகரும் சுடராய் வாழ்வை நடத்து...

வயிற்றுப் பள்ளத்தை இட்டு நிரப்ப
வாழ்க்கையை தொலைத்த மனிதா மனிதா!
வானவில் தோன்றி அழைக்கும் போது
வாசலை மூடிய மனிதா மனிதா!

காசின் ஓசைகள் கேட்டது போதும்
கவிதையின் சந்தங்கள் கேட்கப் பழகு
கண்கள் மலர பூக்கள் சிரிக்கையில்
கலகல வென்று சிரித்தால் அழகு.

உள்ளங்கையில் மழைத்துளி ஏந்தி
ஒவ்வொரு செல்லிலும் விசிறியாய் வீசு
புல்லாங்குழலில் கசியும் இசையை
புண்பட்டுப் போன மனதில் பூசு.

எந்திர நொடியில் எத்தனை இழந்தாய்
வந்த சுகங்களை வழியில் தொலைத்தாய்
கைகள் குலுக்கி கலைந்தது போதும்
மனசுகள் குலுக்கு மகிழ்வலை மோதும்.

பறவைக் கூட்டம் சிறகுகள் விரிக்கையில்
கண்கள் விரிய காணப் பழகு
கண்ணீர் நொடிகளை நாளில் கழித்து
நகரும் சுடராய் வாழ்வை நடத்து.

# ரகசியம்

எவரிடமும் சொல்லாதே
என
எல்லோரிடமும் சொல்வது.
ரகசியம்
அடுத்தவர் குறித்தெனில்
ஆர்வம்.
நம்மைப்பற்றி எனில்
சோர்வோம்.
அழகின் ரகசியம்
புன்னகை.
வெற்றியின் ரகசியம்
முயற்சி.
வாழ்க்கையின் ரகசியம்
மாற்றம்.
வெற்றியின் ரகசியத்தை
விளக்க வேண்டும்.
தோல்வியின் ரகசியத்தைப்
புதைக்க வேண்டும்.
இராணுவ ரகசியத்தைப்
பாதுகாக்க வேண்டும்.
கவிதை ரகசியத்தை
ரசிக்க வேண்டும்.
காதல் ரகசியத்தை
ருசிக்க வேண்டும்.
ரகசியம் குறித்த
ரகசியம் தெரியுமா?
ஒரு சில பேருக்குத்
தெரிந்தால்தான்
அது ரகசியம்.
ஊருக்கே தெரிந்தால்
அது சுவாரசியம்.

# உயரத்தில் தமிழை வைப்போம்

உலக மொழிகளில்
திலகமொழி தமிழ்.
உச்சரிக்கும் போதே
உற்சாகம் பிறக்கும்.

எழுதிப்பார்க்கையில் ஏடுகள் மணக்கும்.

நேர்முனை
எதிர்முனை
இவற்றை இணைத்தால்
மின்சாரம் பிறக்குமாம்.

பேனா முனையிலிருந்து
பிறக்கும் மின்சாரம் தமிழ்.

நம் அன்னைத் தமிழில்
ஆண்டுக்கணக்காய் மூன்று தானா?
ஆட்சித் தமிழ் மட்டுமென்ன
ஆகாதா?
தமிழால் முடியும்
தமிழால் முடியாவிட்டால்
எதனால் முடியும்?

யாப்புத் தமிழில்
கோப்புகள் வரட்டும்.

சங்கத் தமிழ்
தொழிற்சங்கத் தமிழாகட்டும்
நீதித்துறை நிதித்துறை
பணியாளர் விதித்துறை
எல்லாத் துறைகளிலும்
வெல்லத் தமிழ் இடம் பெறட்டும்.

மருந்துச் சீட்டுகள் தமிழில்
மதிப்பெண் அட்டைகள் தமிழில்
பொருந்தும் இடத்திலெல்லாம்
புகுந்து வரட்டும்.

மற்ற மொழிகளெல்லாம்
கற்றுக்கொள்ள.
தமிழ்மொழி மட்டும்
பற்றுக்கொள்ள.

ஆங்கிலத்தால் தான் எல்லாம் முடியும்
என்ற எண்ணம் விடுவோம்.

அரசு எந்திரத்திற்குத்
தமிழ் எண்ணெய் இடுவோம்.

கணினியில் வரட்டும்
கனித்தமிழினி.

இனி பென்சில்களை அல்ல -
நாம் உணர்வுகளைக் கூர்தீட்டுவோம்.

ஊர் கூடித் தேர் இழுப்போம்
உயரத்தில் தமிழை வைப்போம்.

(தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு வென்றது)

## புலம் பெயர்தல்

தாத்தன்
வாழ்ந்த இடம் பார்த்தேன்
மரங்கள்
உருண்டு திரண்ட கரங்களால்
கன்னங்கள் வருடின.

பறவைகள் சடசடத்து
வரவேற்புக் கவிதைகள் வாசித்தன.
தவளைகளோடு நடந்த
கலந்துரையாடலில்
தாராளமாய்த் தகவல்கள்.
வாரத்திற்கொருமுறை
பிளாஸ்டிக் பூக்கள் துடைக்கும்
என் பிள்ளைகள்
நிஜப்பூக்கள் தொட்டு
ஆச்சர்யப்பட்டனர்.

பூத்தோடும் கொடிச்சங்கிலியும்
அணிந்திருந்த மனைவி
கைகளில் கொடி சுற்றி
கண்மூடி ரசித்தாள்.

அடிமனசின் கரைகளில்
அடித்தபடி இருந்தது
சந்தோச அலை.
நெருக்கடி நிமிடங்களுக்கிடையே
வந்த வரம்
இந்த வனச் சுற்றுலா.

# புள்ளி விவரம்

ஐஸ்வர்யா ராய்க்கு நார்மல்
டெலிவரி ஆன தேதி
நவம்பர் பதினைந்தாம்.
பேரைக் கேட்டாலே
அதிரும் வசனத்தால்
ஹிட்டான படத்தின் மொத்த வசூல்
நூறு கோடியைத் தொட்டு விட்டதாம்.
இளைஞர்களின் தேசிய கீதமாம்
'வொய் திஸ் கொலைவெறி டீ' பாடலை
நெட்டில் பார்த்த கட்டிளங் காளைகளின்
எண்ணிக்கை நாலு கோடியைத்
தாண்டி விட்டதாம்.

புள்ளி விவரங்களில்
புழங்கும் நண்பனே!
டாஸ்மார்க் கடைகளில்
ஓராண்டு விற்பனை
பதினெட்டாயிரம் கோடியாம்.

வளரும் இளம் பெண்களில்
நாற்பத்தி நான்கு சதவீதம் பேருக்கு
இரத்த சோகை நிச்சயம் இருக்காம்.
உயிரை இறுக்கும்
கயிறைத் தயாரித்துக் கொண்டிருக்கையில்
பகத்சிங் ஒரு புத்தகத்தின் பதினாறாம் பக்கத்தைப்
படித்துக் கொண்டிருந்தானாம்.
பூக்களின் அழகில் பூரிக்கும் நண்பா!
வேர்களைப் பற்றியும் விசாரணை நடத்து.

# ஆதியில் நின்றவள் கொற்றவை

ஆதியில் நின்றவள் கொற்றவை
சாதித்து வென்றவள் கொற்றவை - அட
அடிமையில் உழலும் பெண் இனமே
அவள் கண்களில் உன் சுடர் பற்றவை.

வெற்றி பெற்றவள் பெண்தானே
வீரம் விளைத்தவள் பெண்தானே
சுற்றி உள்ளவர் வெளிச்சம் பெற
உருகும் மெழுகும் அவள்தானே.

நிலத்தில் விதையை ஊன்றி வைத்தாள்
உழவர்கள் வாழ்வை மலர வைத்தாள்
களத்தில் நின்று கரம் உயர்த்தி
காரியம் ஆயிரம் முடித்து வைத்தாள்.

பத்து விரல்களிலும் மோதிரங்கள்
பறித்தோர்க்கு எதிராய் மோதிடுங்கள்.

சுற்றும் பூமிக்கு அச்சாணி
பெண்ணெனும் உண்மையை ஓதிடுங்கள்.

ஆதியில் நின்றவள் கொற்றவை
சாதித்து வென்றவள் கொற்றவை - அட
அடிமையில் உழலும் பெண் இனமே
அவள் கண்களில் உன்சுடர் பற்றவை.

# அடித்துப் பெய்த மழை

அம்மாடி பெண்ணுக்குள் என்ன சக்தி?
பேதலித்துப் போனதடி எந்தன் புத்தி
கண்ணாடி மாளிகையில் கல்லடியாய் - ஒரு
கண்வெட்டில் எனைச்சரித்தது அவளின் யுக்தி.

இரு சிறகு எனக்கிங்கே முளைத்திடுமா?
இன்பநதி மேனியெங்கும் கிளைத்திடுமா?
வெறும் விறகு வீணையாக மாறிடுமா? அதில்
விதம்விதமாய் ராகங்கள் ஊறிடுமா?

தாகத்தைத் தீர்த்து வைக்க நதி வருமா?
தமிழ்க் கவிதை பல சொல்ல சுதி வருமா?
சோகத்தைப் புதைத்து வைத்த பானைபோல - கன்னச்
சுழிப்பினிலே கால்நூறைப் புதைத்துவிட்டாள்.

நடக்கின்ற பாதையெல்லாம் ராஜவீதி
கிடக்கின்ற மண்திண்ணைப் பட்டுமெத்தை.
சடக்கென்று எல்லாமே மாறிப்போச்சு - நாள்
சந்தோஷ நொடிகளாலே நிரம்பியாச்சு
அம்மாடி பெண்ணுக்குள் என்ன சக்தி?
பேதலித்துப் போனதடி எந்தன் புத்தி.

# தமிழ் நமது மின்சாரம்

ஔவை காலத்தில் மூன்று தமிழ் - நம்
அவசர காலத்தில் நூறு தமிழ்.

மொழி நமது விழியாகும் அதை
அறிந்தால் வெளிச்சம் விரிவாகும்.

அகமும் புறமும் சங்க காலம்
அறிவியலே தொழிற்சங்க காலம்.

அனைத்தும் சுமந்த கடல்போல
அன்னைத் தமிழினி உருமாறும்.

தமிழ் நமது மின்சாரம்
தமிழ் நமது மல்லிச்சரம்
வானவில் தந்த நிறமெடுத்து
வந்த தமிழ்மொழி வரமாகும்.

வள்ளுவன் பாரதிதந்த வரி
வளரும் தலித்துகள் இதய வலி
துள்ளும் ஹைக்கூ பெண்கள் மொழி
என தொடரும் நமது கவிதை நதி.

சிலைகள் வைத்தது ஒரு காலம்
சிற்றிதழ் வளர்த்தது ஒரு காலம்
கலைகள் எல்லாம் வலைத்தளத்தில்
காணத்தருவது வருங்காலம்.

மணலில் எழுதி 'அ' படித்தோம்
மனசில் தோன்றிய கவி வடித்தோம்
மடிக்கணினியை விரித்து வைத்து
மக்கள் தமிழை நாம் வளர்ப்போம்.

நீதிமன்றத்தில் அன்னைத்தமிழ்
நிர்வாகம் எங்கும் புதிய தமிழ்
நாடாளுமன்றத்தில் நமது தமிழ்
ஒலிக்கும் நாளில் ஒளிரும் புகழ்.

வித்தகர் வளர்த்த நம் மொழியை
வீதிகள் தோறும் வளர்த்திடுவோம்
நித்தமும் புதிய அணுகுமுறை
நிச்சயம் வெல்லும் ஏது தடை?

திக்குகள் தோறும் படையெடுப்போம்
மக்கள் கலைகள் வளர்த்தெடுப்போம்
சக்கரம் சுற்றிவருவதுபோல்
சாதனை படைக்க அணிவகுப்போம்.

## இன்றே புதிதாய்

ஆங்கிலேயன் போயாச்சு - இன்னும்
அடிமை குணம் மாறலயே
அடிமையாக வாழ்ந்துபட்ட மனிதா - நீ
மாற்றம் இன்னும் காணலயே...

பெரிதாய்ப் பிறரை எண்ணி எண்ணி
உன்னை மறந்து போனாயே
சுதந்திரம் பிறக்குதடா - புதிதாய்ச்
சுதந்திரம் பிறக்குதடா - மனிதா
மாற்றம் கொள்ளடா - மனிதா
விழித்துக்கொள்ளடா...

இன்றே புதிதாய்ப் பிறந்தோமென்று
ஏற்றம் கொள்ளடா - மனதில்
மாற்றம் கொள்ளடா!

## முகம் முழுக்க சிரிப்புடன்...

எல்லா நாட்களின் மீதிருந்தும்
வீசுகிறது
இட்லி தோசைகளின் நெடி.

துரோக ஆறுகள்
அடிக்கடி ஓடியதால்
அறுந்து கிடக்கின்றன
மனசின் கரைகள்.

அடித்துப்பிடித்து
ஆளாகும் ஆசையின் கீழ்
மிதிபட்டு அழுகிறது
மனிதாபிமானம்.

டெங்கு
காய்ச்சல்காரனின் ஜுரமானி போல்
எப்போதும் ஏறுகிறது
விலைவாசி.

'மானாட மயிலாட'வின்
பளபளப்பில்
மங்கலாய் தெரிகின்றன
பல கவிதை வரிகள்.

இலவசங்களுக்காக
வரிசையில் காத்திருக்கும்
கால்களின் வேர்வைச் சுரபிகள்
அடைபட்டுக் கிடப்பதை
அறிந்தார் இல்லை எவரும்.

வழிப்பறி கொள்ளையர்கள்
தங்கிப்போன
பாழடைந்த மண்டபங்கள்
தனியார் கல்லூரிகளாக
மறு அவதாரம்
எடுக்கின்றன.

ஊழல் அரசியல்வாதிகளின்
தவறுகளை அழிக்கும்
அழிரப்பர்களாகி ஆகிவிட்டன
ஐநூறு ரூபாய் நோட்டுகள்
சின்னச் சின்ன வலிகளுக்குத்
தரப்படும் ஒத்தடமாக
முகம் முழுக்க
சிரிப்புடன்
வருகிறது தீபாவளி.

# பிம்பம்

நிலம் கொத்தி
நீர் தெளித்து
கை நிறைய விதைகள் எடுத்து
தெளிப்பாள் அம்மா.

பச்சைப் பாய் விரித்ததுபோல
பத்து நாட்களில் கீரைகள் முளைக்க
அம்மாவின் முகம்
அழகாய் ஜொலிக்கும்.

முறம்போல் விரிந்த
காதினைச் சொறிந்து
குனிந்து மண்டியிடச் செய்து
குழந்தையை ஏற்றிக் கொள்ளும்
யானையைப் பார்த்து
அலட்சியமாய்ச் சிரிக்கும்
பாகனின் முண்டாசு
கிரீடமாய்த் தெரியும்.

அழகிய வரி ஒன்று
மின்னலாய்த் தோன்ற
அடுத்தடுத்த வரிகளுக்காய்
மண்டை கொதிக்க யோசிக்கும்
கவிஞனின் சட்டைக்
காலரைக் கவனி
தூக்கியபடியேதான் இருக்கும்
எப்போதும்...
எத்தனையோ பேர்
கடை போட்டிருந்தாலும்
எவர் வாசித்தாலும்
இசையாய்க் கசியும்

புல்லாங்குழல் விற்பவனின்
நடை மட்டும்
திருவிழாக் கூட்டத்திலும்
தனியாய்த் தெரியும்

கலர் ஜீன்சும்
கட்டம் போட்ட சட்டையுமாய்
எப்போதும் திரியும்
என் இனிய நண்பா!
சக ஊழியன்
கோபத்தில் திட்டியதற்காய்
அவன்மீது பெட்டிசன்
போட்டுவிட்டு
பெருமிதம் கொள்ளும் உன்னைக்
கண்ணாடியில் பார்
கறுப்பாய் தெரிவாய்.

# அலைகளாய் எழுக

படை நடத்தி படை நடத்தி
படை நடத்தி வருக.

கடை நடத்தி வருவோரெல்லாம்
கரமுயர்த்தி எழுக.

விடை கிடைக்கும்
நொடி வரைக்கும்
கொடியுயர்த்தி வருக.

தடை விலக்கும் அரசுக்கோர்
தக்க பதில் தருக.
பாரதத்தை ஓர் கேக்காய்
துண்டுப் போட்டு விற்றால்
பாரதியின் பேரரெல்லாம்
சகித்திருத்தல் முறையோ?
பூரதமாம் வணிகர் வாழ்வில்
புயல் கொடுத்த மக்கள்
போகும் வரை தீர்ந்திடுமோ
தேசத்திலே சிக்கல்?

சில்லறை வர்த்தகத்தில்
சிறந்திருந்தோம் நாமும்
வால்மார்ட்டை அழைத்து வந்து
போடுகிறார் நாமம்.

தின்பண்டம் மட்டும் அல்ல
நம் மண் பண்டம் உணர்க
நியாயத்தின் குரல் உயர்த்தி
தெருக்களிலே திரள்க

அம்மாவின் சுருக்குப் பை
அப்படியே உருவி
அடுத்தவன் பால் தருகின்ற
கிறுக்கன் செயல் போல
நம் வணிகம் அன்னியர்க்கு
தந்திடுதல் முறையோ?
இம்மண்ணின் பொருட்களிலே
என்ன உண்டு குறையோ?

ஒவ்வொரு நாணயமாய்
உண்டியலில் போட்டு
ஒரு நாளில் உடைத்து விட்டார்
தெருவினிலே போட்டு.
சிலைகளாய் நின்றவர்
அலைகளாய் எழுக.

சீற்றம் கொண்ட
இடிகளாய் எழுக.
ஆவேசம் கொண்ட
புயல்களாய் கிளம்பித்
தேசப் பக்தர்கள்
தெருவினில் திரள்க.

# தொட்டிப் பூச்செடியே...

தொட்டிப் பூச்செடியே
தூது வந்த தேவதையே
குப்பைத் தொட்டிக்குள்ளே
தப்பி விழுந்த ஹைக்கூவே.

கண்கள் ரெண்டும் நட்சத்திரம்
கவின் வடிவம் புது சித்திரம்
கால் உதைத்து நீ பழகு காலம்
உனக்கு உச்சம் தரும்
கோயில் பல சுற்றி வந்து
கூட்டமொன்று தவிக்கையிலே
தங்க நாணயம் தவறியது போல
இங்கு வந்த வெண் சங்கே
இன்னல் தீரும் நீ உறங்கு.

பாட்டிமார் தாலாட்ட
பலர் கூடி சீராட்ட
வீட்டு விளக்காக
உன்தோழர் பலர் பிறக்க
தெரு விளக்காய் வந்தவனே
இருள் விலகும் நீ உறங்கு
எப்படியோ பிறப்பு வரும்
எப்படியும் இறப்பு வரும்.

வாழ்நாளில் உதவுவோர்க்கே
வரலாற்றில் சிறப்பு வரும்.
தொட்டிப் பூச்செடியே
தூது வந்த தேவதையே
பட்ட நிலம் செழிப்பாக
பாய்ந்துவிடு புது நதியே.

## கரும்பலகை

பல ஆண்டுகளாய்
படிந்த தூசியினூடே
கூர்ந்து பார்க்கையில்
தெரியும்
அவரவர் எழுதிய
ஆனா ஆவன்னா.

அழிக்கும் டஸ்டர்
எழுதும் சாக்பீஸ்
எல்லாமே ஒன்றுதான்
இதற்கு.

சடங்கு போல் தொடரும்
வெள்ளை எழுத்து
கலர் கலராய் மலரும்
இலக்கிய மன்ற தொடக்க
விழாவன்று.

வருகைப் பதிவின்
நிஜமான நிலவரம்
ஆண்டு பல கழிந்த பின்தான்
அறியப்படும்.

மடிக்கணினியில்
விளையாடும்
மனிதர்க்கும்
அடித்தளமாய் அமைந்தது
இதுதான் இதுதான்.

# சுய விமர்சனம்

அலைகள் எழுப்பியதாய்
அக மகிழ்கிறாய்.

உனது குமிழிகளைக்
காலம் உடைத்துப்போடும்போது
பாவம்
உடைந்து போவாய்.

ஏணிப் படிகளில் நின்றுகொண்டு
சிகரம் தொட்டதாய்
சிலிர்த்துக் கொள்ளாதே.

ஒரு செங்கல் உருவலில்
அடித்தளமில்லா கோட்டைகளைக்
கலைத்துப் போடுவதுதான்
காலத்தின் வரலாறு.

உனது கத்தி சுழற்றலில்
காயம் பட்ட சகாக்களின்
கசிவை உணராத நீ,
வெகுமக்களிடம் போய்
என்ன உன்னத இலக்கியத்தைப்
பேசிவிடப் போகிறாய்?
தெருவிளக்கின் வெளிச்சத்தில்
ஜொலிக்க ஆரம்பித்த நீ
போக்கஸ் லைட்களின் பின்னாலா
போவது?
வெளியே மட்டுமே
வெளிச்சம் இல்லை.
உனது அறை இருட்டை விரட்ட
தோழர்களிடம் சுடர் தேடு.

ஒற்றை நட்சத்திரமாய்
ஒளிர்வதைவிட
ஆயிரம் சுடர்களேற்றும்
அகலாவது முக்கியம்.

நேர்படப் பேசுவது உறுத்துவதால்
உளறல்களின் நுரைகளில்
கரைந்து போகாதே.

உனக்கொரு மைக் செட்டையும்
மற்றவர்களுக்கு ஹியரிங் எய்டையும்
தந்திருப்பதாகத் தப்பிதமாக
கற்பிதம் செய்யாதே.

கர்வம்
விரலுக்கான மோதிரமல்ல
வெட்டி எறியப்பட வேண்டிய நகம்
எந்த மாற்றமும் முழு மாற்றமில்லை.

காணும் காட்சிகள்
தோற்றப் பிழையல்ல
தோற்றப் பிழை என விளங்கு.

எட்டுத் திசையிலும் கைகளை வீசி
வெற்றி மாலைக்குப் பூப்பறி
உன்னிடமிருந்தே மாற்றத்தை
உருப்படியாய் இனி தொடங்கு.

# தீபாவளிச்
# சிதறல்கள்...

தெரு முழுதும்
அப்பிக் கிடக்கும் இருள்.

பிஞ்சுக்கரங்களின்
சாட்டைக்குப் பயந்து
விலகி ஓடும்.

பட்டுச் சுடிதார்
காட்டன் சுடிதார்
அக்கம்பக்கம்
இருக்கும்
வர்க்கம்.

இடிக்குப் பழகிய
பறவைகள்
வெடிக்குப் பயந்து
முடங்கும் மூலையில்.

ஆயிரம் வாலா
வெடிச் சத்தத்தில்
அமுங்கிப் போகும்
ஒற்றை வெடிகள்.

பஜ்ஜிகளுக்குப் பயந்து
அடுத்த வீடு போனால்
போண்டாவால் மிரட்டுவார்கள்.

நடிகையின் பேட்டி
புதுப்படப் பாடல்

இந்தியத் தொலைக்காட்சிகளில்
முதல் முறையாக
ஒளிபரப்பாகும்
மெகாஹிட் திரைப்படம்
காலைமுதல் மாலைவரை
கழுத்து வலிக்கப் பார்த்து
முடிகிறது
தமிழர்களின் தீபாவளி.

தட்டுகளில் இனிப்பு தந்து
பக்கத்து வீடுகளுக்கு
அனுப்புவாள் அம்மா
எஸ்.எம்.எஸ்.களோடு
முடிந்து விடுகிறது
இப்போது எல்லாம்.

## ஊர் பாட்டு

பாடு தோழா புகழ் பாடு
நாம் வாழும் நகரின் புகழ் பாடு.

அன்னை மடி போல் நமை தாங்கும்
அறந்தை மண்ணின் புகழ் பாடு
கடைகள் உண்டு கல்வி உண்டு
கலகலப்பான வாழ்க்கை உண்டு.

நடைகள் போடும் வேளையிலே
நலமா என்கிற குரலுண்டு.

பஸ் ஸ்டாப் அருகில் சர்ச் வரும்.

பத்தடி நடந்தால் கோவில் வரும்.

பள்ளிவாசல் பாங்கொலியோ
காற்றில் கலந்து மிதந்து வரும்.

பஞ்சு மில்லும் பல்தொழில் நுட்பக் கல்லூரியும்
நெஞ்சு நிமிர்த்தும் செல் டவரும்
கொஞ்சும் அழகுக்கு அடையாளம்
கொஞ்சம் முயன்றால் அது நீளும்
அவரவர் கொள்கை அவரவர்க்கு
அறந்தாங்கி வளரும் தவறாது.
சுவர்கள் எழுப்பும் மனிதரில்லை
சொர்க்கம் இதுதான் நீ பாடு.

## அசுர சாதகம்

கடைசியில் வந்தேவிட்டது
கச்சேரி நாள்.

மூன்றாண்டுகளாய் முழங்கிய
முரசுகளுக்கு பதிலாய்
புல்லாங்குழலில்
புதுராகம் இசைத்தேன்.

ஒத்து ஊதியவர்கள்
நைசாக நழுவினார்கள்
வேறு வழியில்லாமல்
கோரஸ் பாடியவர்கள்
வயிற்றை கலக்குவதாய்
காரணம் சொல்லி
வெளியேறினார்கள்.

எல்லா பாடல்களிலிருந்தும்
உருவி எடுத்த வரிகளை
வைத்துக் கொண்டு
ஒப்பேற்றியவர்களின் உதடுகளில்
இப்போது
மவுனம்.

அனுபவங்களின் சாயல் படிந்த
எனது பாடலைப் புரிந்துகொண்டு
உள்ளங்கை அழுத்திய
நல்ல உள்ளங்களுக்கு நன்றி.

## சூட்சுமம்

உயரே உயரே யாரும் போகலாம்
உழைப்பே அதற்கு ஆதாரம்.

எதிரிகள் நம்மை இயக்குகின்றார்கள்
என்றும் இல்லை சேதாரம்.

ஓடும் வேளையில் முட்டி வலித்தால்
ஒரு கோப்பையை கண்களில் பதிய விடு
வாடும் வேளை மனசின் தொட்டியில்
வண்ண மலர்ச்செடி பதியனிடு.

முயற்சி செய்கையில் முதுகுக்குப் பின்னே
கேலிகள் செய்வார் பலர் கூடி
முயற்சியில் வெற்றியை பெற்றதன் பின்னே
கைகள் குலுக்குவார் அவர் தேடி.

பாலையில் அலைந்து தேடிடுவோர்க்கே
சோலை தண்ணீர் பரிசு வரும்
வேலை முடிக்கும் வேளை வரைக்கும்
வேகம் கொண்டால் வெற்றி வரும்.

# புதுவிதமாய் பாருங்கள்

பாழும் மனிதர்களே பாவி மனிதர்களே!
வாழும் வரை பிறர் மனதை
வாட விடும் மனிதர்களே.

இனியன சில செய்ய இனியேனும் முனைவீரா?
அடர்ந்த மூங்கில் காட்டுக்குள்ளே
வளர்ந்த ஒரு மூங்கில் கூட
புல்லாங்குழல் ஆகி பொழிவதனை பாருங்கள்.

இசைபட வாழ்வதுதான் இயல்பென சொல்லுவதை
வழி மொழிந்து வாழுங்கள்.

படையெடுப்பு நடப்பதுபோல்
பறக்கின்ற பறவைகளின்
மாறா ஒழுங்குதனை மனதினிலே கொள்ளுங்கள்.

ஒழுங்காக செயல்பட்டால் ஒரு நாளும் தவறாது
அழகான தத்துவத்தை அடி மனசில் வையுங்கள்.

கடும் சுமையை இழுத்தாலும்
கவலையின்றி விசிலடித்து ரசனையுடன்
இயங்குகின்ற ரயில் வண்டி பாருங்கள்.
அடுத்தவர் கை கோர்த்து ஆர்வமுடன் செய்தால்
எடுத்த காரியத்தில் வெற்றி வரும்
என்பதனை உணருங்கள்.
பலமுறை தோற்றாலும் பாடுபட மறக்காத
சிலந்தி வலை பாருங்கள், சிந்தனையின் மூழ்குங்கள்
விரக்தியிலே மூழ்குவதால் விளைவது ஒன்றுமில்லை
வெல்லும் வரை உழைக்கின்ற வித்தை தனைக் கொள்ளுங்கள்.

இதுவரையில் பார்த்ததையே புதுவிதமாய் பாருங்கள்
விதவிதமாய் அனுபவங்கள் அடிமனசில் முடியுங்கள்.

## பொங்கல் என்பது...

நகரத்து பொங்கலில் நாட்டமில்லை
    தகரத்தில் பெய்த மழை போல்
தடதடவென முடிகிறது
    அனைவரும் வருகிறார் அனுமதி விடுப்பில்
பரபரவென்று பார்க்கிறார் வேலைகள்
    சோப்புநீர் போட்டு கழுவிய தரைகள்
விம் பவுடர் தொட்டு விளக்கிய கேஸ் ஸ்டவ்
    இரண்டு கரும்புகள், இஞ்சி, மஞ்சள்
மருந்துபோல் வாங்கிய வாழை சீப்பு
    அரைக்கிலோ அரிசி வாசனைப் பொருட்கள்.

வைத்துதிரும்பிய சில நொடிக்குள்ளயே
    விசிலடித்து அழைக்கும் குக்கர் பொங்கல்.

கிண்ணமும் ஸ்பூனும் கைகளில் ஏந்தி
    எண்ணம் முழுதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
எல்லோர் செல்லிலும் எஸ்.எம்.எஸ். வாழ்த்துகள்
    வந்ததும் தெரியாமல் போனதும் தெரியாமல்
எல்லாம் நடக்குது அவரச கதியில்
    எந்திர வாழ்க்கையின் வரங்கள் விழாக்கள்.

துருப்பிடித்த நாளை துலக்கும் பொடிகள்.

கிராமத்து பொங்கலில்தான் கிறுகிறுப்பதிகம்
    மராமத்து பார்த்த மண்வீடுகள்கூட
மணப்பெண் போலவே கவர்ச்சியாய் தெரியும்.
    கரும்புக் கட்டுகள், கலர்ப் பொடி கோலங்கள்
வரிசை தட்டுகள் வாழைத்தார்கள்
    எமனின் வயிற்றை எடுத்துவந்தது போல்
எல்லோர் வீட்டிலும் பறங்கிக்காய்கள்.

மஞ்சள் கொத்துகள் மகிழ்ச்சி பாடல்கள்
வஞ்சகமில்லா வாழ்த்துக் குரல்கள்.
பரணில் கிடந்த பானையை இறக்கி
பளபளவென்றே புளியால் துலக்கி
அரிசி, வெல்லம், ஏலம், முந்திரி
அதன்மேல் நெய்மழை, திராட்சைத் தூவல்
பொங்கி வருகையில் குலவைச் சத்தம்
அம்மா வைத்த சர்க்கரை பொங்கல்
அடிநாக்கு வரையிலும் ஒட்டிக்கிடக்கும்.

மாட்டுப்பொங்கல் மஞ்சு விரட்டு
மைதானத்தில் ஊர்மக்கள் கூடி
பேதம்மறந்த ஆட்டம் பாட்டம்
கூட்டுப் புழுவாய் தவிக்கும் மனிதர்களே!
பட்டாம்பூச்சியாய் பரிணாமம் பெறுங்கள்.
விழா நாள் என்பது வெறும் நாள் அல்ல
அலுத்துச்சலிக்கும் அழுக்கான வாழ்வைப்
புதுப்பிக்கும் நாளென புரிந்து கொள்ளுங்கள்.

## மறுபடியும்

இருட்டுக்குப் பின்தான் விடியல் தோன்றும்
இன்னல் வந்த பின் அன்பும் சேரும்
கண்ணீரின் ஓடு பாதை நீ தொடர்ந்தால் - அது
புன்னகைக்கும் உதட்டருகே முடியக் கூடும்.
மரணத்தைச் சந்தித்த வீடு தன்னை
மறுபடியும் புதுப்பித்து வாழ்ந்து காட்டும்
சூரியனும் கடலுக்குள் வீழ்ந்து போகும்
சுறுசுறுப்பாய் மறுநாளே கிளம்பி ஓங்கும்
விழும் சருகை உரமாக்கிக் கொண்ட பூமி
மறுபடியும் பூப்பூக்கும் மணம் பரப்பும்
கவலை வலை உனை அழுத்தக் கலங்கும் நண்பா
கட்டாயம் வெற்றி வரும் கிளம்பு தெம்பாய்.

# பிரகடனம்

உலகம் என தொடங்கி
பல வார்த்தைகள் போட்டு
பல நாளாய் இருந்தும் வரும்
பாட்டை விட்டு விலகிடவே
விரும்புகிறேன் - துன்பம் கண்டு
இளகிடவே விரும்புகிறேன்.

நன்மை எல்லாம் அலகிடவே
விரும்புகிறேன் - அனைத்தும் உண்மை.

வியர்வையின் கண்ணீர் பற்றி
விளக்கமாய் பாட வேண்டும்.

பார்வை ஒரு லென்சாய் மாற
பல திசை நோக்க வேண்டும்.

தீவுகளாய் இருப்பவர்கள் ஒன்று சேர
தீர்வு தரும் வரிகளையும் எழுத வேண்டும்.

அங்கங்கே இருக்கின்ற அழுக்கெரிக்கும்
கங்குகளாய் வார்த்தைகள் பிறப்பெடுக்கும்
மங்கைகளை அடிமையென இன்னும் எண்ணும்
மடமைதனை எதிர்த்து கவி சுரக்கும்.

சங்கெடுத்து ஊதிவிட்டு ஓய மாட்டேன்
சமூகத்தின் செவிப்பறையை கிழித்தும் சேர்ப்பேன்.

# விமர்சனம்

இயல்பாய் மலர்ந்த புன்னகையோடு
போஸ் கொடுத்தேன் நான்
பிரிண்ட் போட்டு கொடுக்கையில்
கடைக்காரர் சொன்னார்
'போட்டோஜெனிக் முகம் சார் உங்களுக்கு.'

'கண்களைக் கவனி கவிதை மிதக்குது'
இது அலுவலக நண்பரின் கருத்து.
'வெள்ளை சட்டை என்பதனால்
லேசாய் தெரியுது
பைக்குள் இருக்கும் ஏடிஎம் கார்டு'
இன்னொரு சகா சொன்னதிது.

'அடிக்கடி ஆடை மாற்றும் உங்களை
வானவில்லின் பின்னணியிலேயே
போட்டோ எடுத்திருக்கலாம்
பொருத்தமாய் இருக்கும்'
மனைவி சொன்னது.

எப்போதும் கூட்டம் பேசிக்கொண்டே இருக்கும்
அப்பாவை மைக்கின் பின்னணியிலேயே
எடுத்திருந்தாலும் தப்பேதுமில்லை
இது சுஜித்.....

நாலு பேர் நாலு விதமாகச் சொல்ல
அடுத்த அடிளுக்கு
ஆயத்தமாகிறேன் நான்.

# டிசம்பர் இருபத்தைந்திடம் இரண்டு கதைகள்

அருகில் அழைத்துக் கேளுங்கள்
டிசம்பர் இருபத்தைந்திடம் இருப்பது
இரண்டு கதைகள்.

அதன் ஒரு கண்ணில் ஆனந்தம்.
மறு கண்ணில் மாறாத சோகம்.

டிசம்பர் இருபத்தைந்திடம் போர்வையாய்
போர்த்தியிருக்கும் குளிர்பனி.

அதன் கண்களையும்
வேர்க்க வைத்தது வெண்மணி
ஜெருசேலத்தில் ஒருதேவ குமாரனுக்கு
பூச்செண்டு தந்ததும்
வெண்மணியில் சில
தேவையின் குமாரர்களுக்கு
மலர்வளையம் வைத்ததும்
இந்த இருபத்தைந்துதான்.

வரலாற்றை கி.மு., கி.பி., என்று
புரட்டிப் போட்டதும்
உழைப்பவர்களைச் சுரண்டும்
முதலாளியின் புரட்டைக் காட்டியதும்
இதே இருபத்தைந்துதான்
ஆண்டவனின் அப்பத்தைக் கொண்டாடும்
இருபத்தைந்துதான் ஆண்டையின் வெப்பத்தை
நாற்பத்தி நாலு விவசாயிகள் சுமக்கும்படி செய்தது
அலுத்துச் சலித்து வரும் நாட்களை
உற்சாகப்படுத்தும்
பரிசுகளோடும் வாழ்த்துகளோடும் வரும்

கிறிஸ்துமஸ் மரம் முளைப்பதும்
உழைத்துக் களைத்த
வேர்வையின் குழந்தைகளுக்குத்
தூக்குமரமாய் கிளைத்ததும்
டிசம்பர் இருபத்தைந்துதான்.

பாவிகளை மன்னிப்பேன் என்று
ஏசு சொன்னாராம்
அப்பாவிகளை எரித்த பாவிகளை
வரலாறு மன்னிக்காது.

டிசம்பர் இருபத்தைந்தில்
ஏற்றி வைக்கப்படும்
மெழுகுவர்த்திகள்
உருகி உருகி வழிவது
வெண்மணியில் மறைந்த
கண்மணிகளுக்காகவே.

மெழுகுவர்த்திச் சுடரின் சிவப்பும்
ராமையாவின் குடிசையில் பற்றிய
தீயின் சிவப்பும்
யுக இருட்டை விரட்ட
வெளிச்சம் கொடுக்கும்
என்பது மட்டும் நிச்சயம்.

## சாணை பிடித்தல்

வெளிர்ந்த உன் பூக்களுக்கு
வண்ணம் அடி.

அலுத்துச் சலித்த நாட்களின் மேல்
ஆனந்தம் தெளி.

பிளவுண்ட பிரதேசங்களுக்குத்
தண்ணீர் பாய்ச்சு.

புல்லாங்குழல் போரடிக்கிறதா,
பறையோசை கேள்.

திரையிசையால் திணறுகிறாயா,
பாரதி பாடல்களில்
ஆறுதல் தேடு.

அநீதியை எரிக்கும் நெருப்பை
அவியாமல் காப்பாற்று.

யுகத்தை ஜெயிக்கும் வீரியத்தை
விரல்களில் ஏற்று.

கையைச் சுட்டுக் கொண்டபின்னும்
விதை தேடும் உழவன்.

சொட்டும் இல்லை என்று
தெரிந்த பின்னும்
தாய்மடி முட்டும் கன்று.

இலைகள் உதிர்ந்த பின்னும்
பச்சையாய்ச் சிரித்து
துளிர்க்கும் செடி.

வழக்கமான கோலம் தவிர்த்து
விழா நாட்களில்
பெரிதாய்க் கோலமிடும் அம்மா -
இவர்களிடம் பாடம் படி.
எழு, நட... தூரத்தில் பார்...
அகண்ட புதிய பாதை!

## இரட்டுற மொழிதல்

'டிக்' அடித்தபடியே
இருக்கின்றன
கடிகாரமும் அதிகாரமும்
சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன
நட்சத்திரமும் - அவள்
ஒற்றைக்கல் மூக்குத்தியும்
அங்கீகாரம் தேடி அலைகின்றன
கவிதையும் காதலும்
உறிஞ்சி எடுத்துவிடுகின்றன
அட்டையும், கடன் அட்டையும்
உயரத்திலே இருக்கின்றன
பட்டமும் பெட்ரோல் விலையும்.

# பரிணாமம்

வானவில்லின்
எந்த வண்ணம்
கவர்ச்சியானது?

உள்ளங்கையில் விழும்
மழைத்துளியின்
விட்டம் எவ்வளவு?

முளைவிடும் இலையில்
எத்தனை நாளுக்கொருமுறை
பச்சை மாறுகிறது?

பட்டாம்பூச்சியின்
இறக்கைகள் நொடிக்கு
எத்தனை முறை
அடித்துக் கொள்கின்றன?

பளீரென சிரித்த
பஸ் சிறுவனுக்கு
எத்தனை பற்கள்
இடம்மாறி இருந்தன?

ஆராய்ந்து பார்க்க
ஆயிரம் இருக்க
சந்திக்கும் நபரிடம்
சாதி மதத்தின்
அடையாளம் பார்க்கிறாய்.

மாற்று மதத்தைச்
சேர்ந்தவனென்றால்
வம்புக்கிழுக்க
வாய்ப்புகள் பார்க்கிறாய்?

விலங்கிலிருந்து
வந்திருந்தாலும்
விளங்கிக் கொள்
நீ மனிதன்.

## ஆராதி

அகல் விளக்கின் சுடர் அழகு
ஆரூரின் தேர் அழகு
இசைவாணர் குரல் அழகு
ஈர மழை பேரழகு
உழைப்பவரின் கரம் அழகு
ஊற்றுத் தரும் மணல் அழகு
எட்டு வைத்த சுவடழகு
ஏந்திழையாள் சிரிப்பழகு
ஐயனார் சிலை அழகு
ஒளிரும் நிலா தனியழகு
ஓடும் நதி மிக அழகு
ஆராதிக்க நீ பழகு.

## ஆயுதம் செய்வோம்

பத்திரிகை என்பதென்ன?
பார்ப்போமா கொஞ்சம் நாமும்.
இப்போது வருவதெல்லாம்
பெரும்பாலும் வார்த்தை ஜாலம்.

அர்த்தங்கள் இல்லா ஜோக்கு.
ஆள்வோரைப் புகழும் போக்கு.
ஆதாரம் ஏதுமின்றி
அவதூறு பரபரப்பு.

அறிவுக்கு விருந்து வேண்டாம்.
ஆராய்ச்சி எண்ணம் வேண்டாம்.
சரிவுக்குள் சிக்காமல்
சர்க்குலேஷன் உயர்ந்தால் போதும்.

வர்த்தகப் பார்வையிங்கே
எங்குமே வந்ததாலே
பத்திரிகை தர்மம்கூட
பணம் சேர்த்தல் என்பதாச்சு.

சரியான பத்திரிகை
சாட்டையாய் இருக்க வேண்டும்.
அநீதிகள் நடக்கும்போது
அதன் தோலை உரிக்க வேண்டும்.

தருகின்ற படைப்பிலெல்லாம்
தர்மத்தின் சுவடு வேண்டும்.
வருகின்ற கதைகள் எல்லாம்
வரலாற்றைப் பேச வேண்டும்.

சுரண்டுவோர் நெஞ்சைப் பார்த்து
சுடுகின்ற கவிதை வேண்டும்.
வறண்டதாய் இருந்திடாமல்
வாழ்க்கையைப் பேச வேண்டும்.

ஆயுதம் செய்வோம் என்றே
அன்று நம் கவிஞன் சொன்னான்
அதன்படி வினைபுரிய
ஆயிரம் இதழ்கள் வேண்டும்.

## புது ராகம்

ஆவியில் கலந்த தேவி
ஆராதிப்பேன் பூத்தூவி

குரலா குழலா குழப்பம்
குளிர்விழி தருதே மயக்கம்

கொலுசுகள் ராகம் புதுசு
குதியாட்டம் போடுது மனசு

சுடரும் மூக்குத்தி அழகு
சொர்க்கமே என்னுடன் பழகு

வார்த்தைகளெல்லாம் கவிதை
வார்த்தாய் முழுதாய்ப் பழுதை

அடடா நடையோ நடனம்
அடைந்தபின் வரணும் மரணம்.

# கதர்ச்சட்டை போட்ட கம்பீரம்

விருதுநகர் பெற்ற விருது.
கதர்ச்சட்டை போட்ட
கம்பீரம்.

சுற்று பழகாத காற்று.
பட்டம் பெறாத
பல்கலைக்கழகம்.

தரித்தரம் வென்ற
சரித்திரம்.

தமிழுக்குக் கிடைத்த
அரசியல் வரம்
தேசம் எங்கும் கல்வி விதைத்தது
அவர் கரம்
உயர்ந்த மனிதரால் உயர்ந்தது
தமிழகம்

பல மாணவர்களுக்கு
கனவாய் இருந்த மதிய உணவு
அவரால் தான்
வாய்க்கு வாய்த்தது

காணாமல் போய் இருந்த நேர்மை
அவர் வந்த பின்பு தான்
அரசியலில் வந்தது

காமராஜர்
சகாப்தம் ஆகிய சாமானியர்
வெறும் தலைவர்களுக்கு மத்தியில்
ஜொலிக்கும் பெரும் தலைவர் அவர்.

# என்ன பிரயோஜனம்?

ஒரு மரமாக மாறிப்
பூத்துக் குலுங்கு.

மாத்திரைக் காகிதமாய்
ஆஸ்துமா நோயாளியின்
அவதி தீர உதவு.

நிழற்குடையாகிப்
போக்குவரத்துக் காவலர்
இளைப்பாற இடம் கொடு.

குறைந்தபட்சம்
குண்டூசியாகவாவது மாறி
இரண்டு தாள்களை இணை.

ஊக்காக உருமாறி
டிரவுசர் கிழந்த பையனின்
மானம் மறை.

பழைய தாளாகி
கடலை மடிக்கவாவது
பயன்படு.

மனிதா!
எதுவுமே செய்யாமல்
நீ
இருந்தென்ன? போயென்ன?

# காம்ரேட் இஎம்எஸ்

பௌர்ணமியே!
உன்னைப் பற்றி
பிறை நிலா பேசுகிறேன்.

அரசியல் வானின்
சிவப்பு நட்சத்திரமே!
உன் ஆழ அகலங்களைக்
கவிதையால் அளக்கின்றேன்.

மூத்த தோழனே!
சி பி எம் காத்த தோழனே!
நீ எழுதிய புத்தகங்களை எண்ணி எண்ணி
என் விரல்கள் வலிக்கின்றன.

உன்
செல்லப் பெயர் குஞ்சு.

நீ தீண்டாமையை எரித்த
அக்கினிக் குஞ்சு.

மனிதம் வளர்த்த சங்கரனே!
ஒரு சந்தேகம்.

உன் ரத்தம் மொத்தமுமே
சிவப்பணுக்கள் தானா?

தலைவனே!
உனக்கு திக்குவாய்.

பேசினாலோ
எதிரில் உள்ளவர்களை
மார்க்சீயத்தில் முக்குவாய்.
தடைகளைத் தகர்த்தவனே!
நீ தங்கத்தை நிகர்த்தவன்.

காம்ரேட் இஎம்எஸ்!
வாக்குச் சீட்டுகளால்
இடது சாரி அரசை அமைக்கலாம்
என்பது
உலகுக்கு நீ அனுப்பிய எஸ்.எம்.எஸ்
ஆம். - நீ
கேரளத்தில் ஒரு செங்கோட்டை
கட்டியவன்.

எளிமையின் அடையாளமே!
வள்ளத்தோள் கவிதைகளை
வாசித்தாய்.

வர்க்கப் போராட்டத்தை நேசித்தாய்
மூச்சடங்கும் நொடி வரைக்கும்
யோசித்தாய்.

கனிந்த மனிதாபிமானியே!
உன் பங்களிப்பால் வந்ததல்லவா?
தேசாபிமானி.

எப்போதும் ரப்பர் செருப்புடன்
நடந்தவனே!
1957 மார்ச்சில் நீ வென்றாய்.

கேரளத்தின் மார்ச் பாஸ்ட்
தொடங்கியது.

இன்றுவரை அதன் பயணம்
செம்மண் பாதையில்தான்.

படித்த கேரளம் படைத்தவனே!
இது உன் நூற்றாண்டு.

உழைக்கும் மக்களின் வேர்வைத் துளிகளும்
ஊருக்கு உழைப்பவர் கண்ணீர்த் துளிகளும்
இருக்கும் வரைக்கும் நீயும் இருப்பாய்.

## மாற்று

கண்ணீர்க் கோடு
முடியும் இடத்தில்தான்
பூக்கிறது புன்னகை.

இருளின்
உச்சப் புள்ளியிலிருந்து
கசிகிறது வெளிச்சம்.

வசவுகளுக்குப் பக்கத்திலேயே
இருக்கின்றன
வாழ்த்துகள்.

சிக்குண்ட நூல்கண்டின்
முடிச்சுகளுக்குள்
ஒளிந்திருக்கிறது
அவிழ்க்கும் சூட்சுமம்.

உதிர்ந்த சருகுக் குவியலுக்குள்
மறைந்து கிடக்கிறது
வீரிய விதை.

அழுது மங்கிய
கண்களைக் கழுவி
வேறுபக்கம் பார்த்தால்
தெரியும் பாதை.

## மீறல்

அழுத்தி அழுத்தி சீவினாலும்
படியாமல்
நெற்றியில் விழுகிறது
கற்றைமுடி.

பார்த்துப் பார்த்துப் போட்டாலும்
டீச்சரின் கோட்டை விட்டு
விலகிப் போகிறது
பையனின் ஆனா.

தேடித் தேடி நடந்தாலும்
பாதச் சுவட்டை விட்டு
தவறிப்போகிறது நடை

கவனமாய்க் கத்தரித்த
செடிச் சிற்பத்திலும்
உயரமாய் வளர்கிறது
ஒரு கிளை.

எப்படித்தான் அலசினாலும்
எங்காவது ஓரிடத்தில்
அதிகமாய்ப் போய்விடுகிறது
சட்டையில் நீலம்.
அறைக்குள் வைத்தே
வளர்த்தாலும்
ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டி
சிரிக்கிறது பூ.
ஒரே மாதிரியான டிக்டிக்கோடு
வாழ்க்கை நகர வேண்டுமென
நீயேன் நினைக்கிறாய்?

# சுழற்சி முக்கியம்தான்

சுழலும் பூமியில்
சுழலும் எல்லாமே
அதிசயம்தான்.

சுழலும் சக்கரத்தில்
ஒரு கரம் பாண்டம் செய்யும்.

சுழலும் நாற்காலியில் அமர்ந்து
பலகரம் அதிகாரம் செய்யும்.

வஸ்தாதுவின் கையில்
சிலம்பு சுழல்கையில்
ஆச்சர்யம் பூக்கும்.

ஆசிரியரின் கையில்
பிரம்பு சுழல்கையில்
அச்சத்தில் வேர்க்கும்.

ஆலையின் சுழற்சி
வளர்ச்சிக்கு அறிகுறி.

ஆற்றின் சுழற்சி
ஆபத்தின் அறிகுறி.

சுழலும் காற்றாடி பார்த்து
சிறுவர்களுக்கு சிரிப்பு வரும்.

சுழலும் கடிகார முட்கள் பார்த்து
எவருக்கும் பொறுப்பு வரும்.

ஊர்கூடி மைதானத்தில்
வயிற்றுப் பாட்டுக்காய் ஒரு கிழவன்
சுழன்று சுழன்று சைக்கிள் ஓட்டுகையில்
கண்களை முட்டிக்கொண்டு
கண்ணீர் வரும்.

# நைலான் ஊஞ்சல்

அறுவடை காலத்திற்காகக்
காத்திருந்து
வைக்கோல் எடுத்து
பிரிமுறுக்கி
மரத்தடி தேடி
மாட்டிவிட்டு
ஆடிய நினைவுகள்
மனசில் ஆடின
மகன் என்னிடம்
ஊஞ்சல் கேட்டதும்.

பால்க்காரன் வந்ததும்
வைக்கோல் கேட்கணும்.
கயிறு திரிக்கும் கந்தனுக்கு
பிரி முறுக்க வருமோ?
அலுவலகத்தில் அதே கவலை.

ஆபிஸ் வாசலில்
விற்றுக் கொண்டிருந்தான்.
அஜீத்துக்கு ஒன்று வாங்கினேன்.
வேலை முடிந்து
திரும்பிய மனைவி
கைப்பையிலிருந்து
நைலான் ஊஞ்சலை
எடுத்துக் காட்டியதும்
மனசு ஏனோ சுருண்டு கொண்டது.

# கார்டுகளோடு...

காடுகளில் அலைந்த
காலம் போய்
கார்டுகளோடு அலைகிறோம்
இப்போது.

ஏடிஎம் கார்டு
இருப்பவரைத்தான்
மதிக்கிறார்கள் எல்லோரும்.

விதவிதமாய் அடித்து வைத்திருக்கிறார்கள்
விசிட்டிங் கார்டுகள்.

இரயில் பயணங்களில்
மறக்காமல்
எடுத்துப் போகிறார்கள்
பிளேயிங் கார்டுகள்.

அலைந்து திரிந்து
அடைந்ததும்
சாதித்த சந்தோஷம்
ரேசன் கார்டுக்கு.

கட்சிகள் சிலவற்றின்
உறுப்பினர் கார்டுகளை
கணக்குப் பார்த்தால்
மக்கள் தொகையைவிட
பலமடங்கு வருகிறது.

கடவுள் படம் போட்ட கார்டுகள்
பலபேரின் பர்சுகளில்

கிரிக்கெட்டர்களின் படம் போட்ட கார்டுகள்
சிறுவர்களின் சேகரிப்பில்.

தேடித் தேடி கிரிட்டிங் கார்டுகள் வாங்கி
காதலிக்கு அனுப்பாமலே
வைத்து விடுகிறார்கள் சிலர்.

வெட்டிங் கார்டுகளிலிருந்து
கேட்கிறது
முதிர்கன்னிகளின் விசும்பல்.

எப்போதோ போட்ட
போஸ்ட் கார்டுகள்
எல்லோரின் டிரங்குப் பெட்டிகளில்.

மறக்காமல் வாங்குங்கள்
மனிதர்கள் சங்கத்தில்
ஓர் உறுப்பினர் கார்டு.

## சுடர் பார்ப்போம்

தொடர் பார்த்துக் களைத்தவரே!
சுடர் பார்த்துக் களித்திடுங்கள்
எந்தச் சுடர் உயர்ந்ததென்று
எடைபோட்டுப் பார்த்திடுங்கள்.

பக்கத்து வீட்டு சின்னப் பெண்
முகத்தில் பொத்திய கைகளை
வெட்கம் வழிய விலக்கி
சற்றுமுன் குத்திய
ஒற்றைக்கல் மூக்குத்தியை காட்டுகையில்
அவள் முகம் சுடருமே, அதுவா?

அறையில் அப்பிய
இருளை விரட்ட
சரக்கென தீக்குச்சி கொளுத்தி,
ஒவ்வொரு திரியாய் திருகித்திருகி
குத்துவிளக்கேற்றி திரும்புகையில்
மனைவி முகம் சுடருமே, அதுவா?

கிராமத்துப் பள்ளியின் ஆண்டுவிழாவில்
தன்னை மொய்த்த அலட்சியப் பார்வைகளைத்
தூசென உதறி...
கைநிறையக் கோப்பைகளுடன்
ஒரு கறுத்த சிறுவன் சிரிக்கையில்
அவன் கண்கள் சுடருமே, அதுவா?

உச்சியில் வெண் பஞ்சு
உடலெங்கும் சுருக்கங்கள்
கண் சுருக்கி கண் சுருக்கி
காசுகளை அடையாளம் கண்டு

பள்ளி வாசலில் கடைபோட்டு
பரபரப்பாய் வியாபாரம் பார்க்கையில்
பாட்டியின் மேனியில்
வியர்வை சுடருமே, அதுவா?

முதுகுக்குப் பின்னால் விமர்சனம் பேசி
ஓர் எதிரியாய் உங்களை
வர்ணித்துக் கொண்டவரின்
நடுங்கும் கைகளை
உரிமையுடன் குலுக்கி
கம்பீரமாய் திரும்பும்
உங்கள் கண்கள்
தன்னம்பிக்கையின் அடையாளமாய்
தகதகக்குமே, அதுவா?

தொடர் பார்த்துக் களைத்தவரே
சுடர் பார்த்துக் களித்திடுங்கள்
எந்தச் சுடர் உயர்ந்ததென்று
எடைபோட்டுப் பார்த்திடுங்கள்.

# வழுக்குப் பாறைகள்

புட்டிகளிலிருந்து
பொங்கி வழியும் நுரை
என் மனசின் கால்களை
அடிக்கடி நனைக்க
ஆசைப்படுகிறது.

பார்வையாளர்களாக இருக்கும்
பணப்பேரங்களில் எல்லாம்
ஒரு கட்டு நோட்டு
என் வெள்ளைச் சட்டையில்
கறைபூச முயற்சிக்கிறது.

அடக்குமுறை கண்டு பொங்கும்
என் பானைகளில்
சலுகைகளைத் தெளிக்க
அதிகார வர்க்கம்
அடிபோடுகிறது.

எனது வெற்றிகளை
ஏற்க மறுத்து அடம்பிடிக்கும்
சில குள்ள மனிதர்களின் மீது
கொப்பளிக்கும் கோபத்தை
சிரமப்பட்டு தான்
அடக்க வேண்டியிருக்கிறது
அறிவார்ந்த விவாதங்களைப்
புறந்தள்ளி விட்டு
துணுக்குத் தோரணங்களுக்கு
மயங்கும் மக்கள் கூட்டத்தை
மௌனமாக சகிக்க வேண்டியிருக்கிறது.

தியாகத்திரிகளில்
ஏற்றி வைக்கப்படும் அகல்களை,
டியூப் லைட்டுகள்
கேலி பேசும்போதெல்லாம்
கோபத்தில் முகம் சிவக்கிறது.
பாதையெங்கும் கிடக்கின்றன
இடறிவிடும் பள்ளங்கள்,
பார்த்துப் பார்த்து
தொடர வேண்டியிருக்கிறது
பயணத்தை.

# வழக்கம்போல் ஒரு வானவில்

வழக்கமான வானவில் பார்த்து
அலுத்துப்போச்சு.
எனக்கே எனக்கென வானவில் ஒன்று
எந்த நிறத்தில் அதை நான் வரைய?
அக்காவின் மருதாணி பூசிய விரல்கள் போல்
செக்கச் சிவந்ததென்றால்
கட்சிக் கலரா? என்பார்கள்.

பள்ளி வயதில் ஜாமின்ட்ரி பாக்ஸில்
சேகரித்த நாவல் பழங்களின்
கருநீலக் கலரென்றாலோ கருப்பு போலிருக்கும்
தவிர
கருத்த மேகத்தின் பின்னணியில்
எடுப்பாகவும் இருக்காது.

அப்போதுதான் குளித்துவிட்டு வந்த
அம்மாவின் முகம்போல் ஜொலிக்கும்
மஞ்சள் நிறத்தில் வரையலாம்தான்,
ஆன்மீகத்தின் சாயல் அடிக்கும் அதில்,
தொட்டியில் ஜாலம் காட்டும்
பூச்செடிகளின் பச்சை நிறத்தில்
வரையலாம் என்றாலோ,
கிளிச்சிறகு போல் தோன்றும்
அபாயம் இருக்கிறது.

எதற்கு வம்பென்று
வழக்கம்போலவே வரைந்துவிட்டேன்.
புரிந்தது,
ஏற்றம் தரத்தான் மாற்றம்!

## எதிர்கொள்...

பவுர்ணமி நிலவிலும்
படிந்து கிடக்கிறது களங்கம்.
ஓட்டையே இல்லாத
புல்லாங்குழல்
ஒன்றேனும்
தயாரிக்கப்பட்டதில்லை
இதுவரை.

சுடர்விட்டு ஒளிரும்
குத்துவிளக்கின் அடியிலும்
கொஞ்சம் இருட்டு
அப்பிக்கிடக்கும்.
உலக அழகியின் முகத்திலும்
சின்னத் தேமல் இருக்கும்.

புன்னகைகளுக்கு நடுவே
கண்ணீர்த் துளிகள் சுரப்பதாய்
கவலை கொள்கிறாய்.
அட,
சருகுகளை மிதித்தபடி
தொடர்கிறது
வாழ்க்கை.
தளிர்களுக்கு நடுவே
தலை காட்டி
சிரிக்கின்றன பூக்கள்.

# உன்னுடையதும், என்னுடையதும்

பளபளக்கும் முழுக்கைச் சட்டை
உன் விருப்பம்.
கோடுபோட்ட அரைக்கைச் சட்டை
என் தேர்வு.

பஃபே விருந்தில்
பாதாம் கீராக ஆசைப்படுகிறாய் நீ.
பழைய சோற்றுக்கு ருசி கொடுக்கும்
பச்சை மிளகாயாக நான்.

திருகிய மொழி நடையில்
விரக்தி விதைக்கிறாய் நீ.
கீறிய மாங்காய்ப் பத்தை போல்
நேரடியாக நம்பிக்கையூட்டுகிறேன் நான்.

பிரமிப்பின் பீடத்தில்
நிற்க நினைக்கிறாய் நீ.
எதார்த்தத்தின் பள்ளங்களில்
கிடப்பவர்களோடு
கைகுலுக்க விரும்புகிறேன் நான்.

வெளிச்சம் வெளியிலிருந்து தான் என்பது
உன் அசைக்க முடியாத நம்பிக்கை.
வீட்டு அகல்களும் சுடரும் என்பது
எனது அனுபவம்.

பொங்கி வழியும் பாட்டில் நுரைகளில்,
அந்தரங்க உரையாடல்களில்,
அதிர்ச்சியூட்டும் வசவுகளில்,
உனது கவிதைகளைக் கண்டெடுக்கிறாய் நீ.
புல் பொத்தி வைத்திருக்கும் பனித்துளியில்,
ரிக்ஷாக்காரனின் வேர்வையில்.

அடக்க நினைப்பவரை
முட்டிச் சாய்க்கும் மாடுகளின் கொம்பில்
எனது கவிதைகளை எழுதுகிறேன் நான்.

ஊட்டி ரோஜா ஒருவித அழகு
காட்டுப் பூக்களில் மற்றொரு அழகு
இதுதான் அழகென
எவர் சொல்ல இயலும்?

# ஆதர்சம்

பிடாரி கோயிலின்
கருங்கல் இடுக்கில்
காக்கை எச்சத்தோடு
விழுந்து
முளைவிட்டு இலைவிடும்
ஆலஞ்செடி.

அடைமழை நாளின்
இடைவெளியில்
ஈசல் பிடித்து
வறுத்துச் சாப்பிடும்
தலித் சிறுவன்.

விபத்தில் சிக்கிய
வாகனம் எடுக்க
இங்கே அணுகவும்.
கொட்டை எழுத்தில்
போர்டு மாட்டி
கிரேனோடு காத்திருக்கும்
மெக்கானிக்.

காதைக் கண்ணாக்கி
சாலை கடந்து
ஒவ்வொரு ஆபிஸாய்
ஏறி இறங்கி
சேருக்கு ஒயர் பின்னும்
பார்வையற்ற இளைஞன்.

காலையில் செத்துப்போன
புருஷன் பிணம்
வீதி கடந்ததும்
குழந்தைகளின் பசிக்காக
அழுதுகொண்டே
அடுப்பு மூட்டும் தாய்.

## ஆல்பம்

பேருந்து ஹாரன்களின்
பிளிறல்களைத் தாண்டியும்
சுகமாய் விழுந்தது
ஆர்மோனியத்தின் மீட்டல்.

அடிக்கடி விட்டுப் போகும்
ஸ்பீக்கரின் ஒயரைச்
சரி செய்துகொண்டே
சுதி பிசகாமல் சேர்ந்திசைத்தாள்
அம்மைத் தழும்பு மனைவி.

எதிரே விரித்திருந்த
கிழிந்த துண்டில்
எதுவுமே இல்லாதபோதும்
ஒளிமயமான எதிர்காலத்தை
அற்புதமாகப் பாடிக்கொண்டிருந்தான்
பார்வையிழந்த பிச்சைக்காரன்.

கேசட் வாங்க வைத்திருந்த
பணத்தைப் போட்டுவிட்டு
திருப்தியோடு நகர்ந்தேன் நான்.

## ரகசியம்

வண்டி நிறுத்தும்போதெல்லாம்
மனைவி சொல்வாள்.
‘கையோடு அந்த
கவரப் போட்டா என்ன?
வெய்யிலிலே கிடந்து
வெளுத்துப் போகுதில்ல...’

ஒவ்வொரு முறையும்
காதில் விழாதது மாதிரி
நகர்ந்து விடுவேன் நான்.

வண்டிக் கண்ணாடியில்
வாகாய் அமர்ந்து
கொத்தி விளையாடும்
சிட்டுக்குருவி பாவம் என்று
எப்படிச் சொல்ல அவளிடம்?

# தவிப்பு

அக்காவைத் தேடி
அலையும் குருவி
எக்காலம் சேரும்?

சொட்டுச் சொட்டாய்
தேன் சேர்த்த ஈக்கள்
அடையவே அடையாதா
தேனடையை...

வைக்கோல் கன்றை
வாஞ்சையுடன் நக்கும் பசு
உண்மை தெரிந்தால்
உடைந்து போகுமோ?

காத்திருக்கும் கிளிக்கு
எப்படிச் சொல்வது?
பழுக்கவே பழுக்காது
இலவங்காய் என்பதை...

## நெருப்பின் மரபு...

நந்தன் மீது
முதன்முதலில் பற்ற வைத்தீர்கள்
நாற்புறமும் இன்றுவரை
நின்று எரியுது.

அவிந்து குவிந்த
சாம்பல் தொட்டுத்
தேய்த்து வருவதால்
வெறி சுமந்த கோரைப்பற்கள்
முனை மழுங்கலே.

பொதுக்கிளாசில் டீ கேட்டு
நீட்டிய கையைப்
போட்டெரித்தீர் பாய்லரிலே
இன்னும் மறக்கலே.
செருப்பு போட்டு நடந்தார்கள்
பாதையின் மேலே
நெருப்பு போட்டு அனுப்பினீர்கள்
பாடையின் மேலே.

ஏரியிலே நீரெடுத்து
வந்த பெண்களை
சேரியிலே அனுப்பினீர்கள்
வெந்த பெண்களாய்
நெல்மணிகள் கூடக் கேட்டார்
வெண்மணியிலே
வைக்கோலாய் எரித்தீர்கள்
வாடை மறையலே.

ஆதிமனிதன் தந்த தீயால்
உணவு வந்தது
சாதிவெறியில் வந்த தீயால்
மனிதம் வெந்தது.

எந்தச் சாதி என்றாலும்
இரத்தம் ஒன்று தான்.
வெந்த சதை எலும்பு கூட
எவர்க்கும் ஒன்றுதான்.

மானுடத்தின் கண்டுபிடிப்பில்
தீ உயர்ந்தது.
கலவரத்தில் எரிகையிலே
கண் கலங்குது.

சாதி வெறியில்
தீ வளர்த்துத் திரியும் பாவிகள்
சாதித்தது என்னவென்று
சொல்ல முடியுமா?

உழைக்கும் மக்கள்
உங்களை எச்சரிக்கிறோம்.
உருப்படியாய்
நெருப்பையினி பயன்படுத்துங்கள்.

# கலைஞன்

சீவாளி எடுக்கும் போதெல்லாம்
காதில் கேட்கும்
பாட்டியின் குரல்.
உன் தாத்தாவின்
கச்சேரி கேட்டு
பத்து விரலுக்கும்
மோதிரம் போட்டார்
பாலைவனம் ஜமீன்தார்.

நாயனம் துடைத்து
சாதகம் செய்கையில்
அப்பாவின் மகுடிக்குத்
திருவிழாக் கூட்டமே எழுந்து
கைதட்டிய காட்சி
அழியாச் சித்திரமாய்
மனசில் விரியும்.

அப்பாவின் ஜிப்பாவோடும்
தாத்தாவின்
அங்கவஸ்திரத்தோடும்
பொங்கலன்று
ஒவ்வொரு வீட்டின்
திண்ணையில் அமர்ந்து
வாசிக்க ஆரம்பித்த
அரை நொடிக்குள்ளேயே
தட்டில் வைக்கப்படும்
சில்லறையை
நடுங்கும் கைகளால்
நான் எடுத்து வருவேன்.

# மீறல்

அழுத்தி அழுத்திச் சீவினாலும்
படியாமல்
நெற்றியில் விழுகிறது
கற்றை முடி.

பார்த்துப் பார்த்துப் போட்டாலும்
டீச்சரின் கோட்டை விட்டு
விலகிப் போகிறது
பையனின் ஆனா.

தேடித் தேடி நடந்தாலும்
பாதச் சுவட்டை விட்டு
தவறிப் போகிறது நடை.

கவனமாய்க் கத்தரித்த
செடிச் சிற்பத்திலும்
உயரமாய் வளர்கிறது
ஒரு கிளை.

எப்படித்தான் அலசினாலும்
எங்காவது ஓரிடத்தில்
அதிகமாய்ப் போய்விடுகிறது
சட்டையில் நீலம்.

அறைக்குள் வைத்தே
வளர்த்தாலும்
ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டிச்
சிரிக்கிறது பூ.

# துண்டு

துண்டென்று நினைத்துத்
தூக்கியெறியாதீர்.
வளையல் துண்டு
கலைடாஸ் கோப்பாசி
ஜாலம் காட்டும்.

தண்டவாளத் துண்டு
மணியாகிக்
காலம் காட்டும்
மஞ்சள் துண்டு
மருந்தாகும்
கரும்புத்துண்டு
விருந்தாகும்.

மூங்கிலின் துண்டு
புல்லாங் குழலாகிக்
கிறங்க வைக்கும்.
கரித்துண்டை வைத்தே
தெருவோர ஓவியன்
தீட்டிக் காட்டுவான்.

பீடித்துண்டு கிடக்காமல்
எத்தனை நிமிடங்களை
இழந்திருக்கிறீர்கள்?
சணல் துண்டு தேடி
எத்தனை முறை
அலைந்திருக்கிறீர்கள்?
குழந்தைகளின் சேகரிப்பைப்
பார்த்ததுண்டா நீங்கள்?

துண்டுப் பென்சில்கள்
உடைந்த பொம்மைத் துண்டுகள்,
பத்திரிகையில் கிழித்த
துண்டுப் படங்கள்
எத்தனை பெருமையாய்க்
காட்டுவார்கள் தெரியுமா?

துண்டென்று நினைத்துத்
தூக்கியெறியாதீர்.

## தெறிப்புகள்

அருவியாய்க் கொட்டுகையில்
அழுக்கென்ன? பிசுக்கென்ன?

பூக்கும் நோக்கம்
புரியுமா உனக்கு?

## (ஏ)மாற்றம்

தொடை எலும்பைக்
கடைவாய்ப் பற்களால்
நொறுக்குவார் தாத்தா.

விதையில்லாத் திராட்சையையே
விரும்பிக் கேட்கிறான்.
என் மகன்.

எல்லாக் கோலத்திலும்
எறும்புதான் மொய்க்கும்
அம்மா போட்டாலோ
அத்தனை விழிகளும்.

இப்போதோ
எப்போதாவதுதான்
ஸ்டிக்கர் கோலத்தை
மாற்றுகிறாள் மனைவி.

என் புத்தகப் பைக்குள்
கிட்டிப் புல்லைக் கண்டதும்
முட்டி போடச் சொன்னார்
மூன்றாம் வகுப்பு வாத்தியார்.
ஒவ்வொரு நாளும்
ஞாபகமாய்
வீடியோ கேம்ஸை
எடுத்துக்கொண்டு போகிறாள் மகள்!

'தேள் கடிச்சிடுச்சு சாமி'
நள்ளிரவுத் தூக்கத்தில் எழுப்பும்

சேரிப் பொண்ணுக்காக
மூலிகை தேடி
டார்ச்சோடு போவார் அப்பா.

தெரு முனையில்
பஸ்ஸில் அடிபட்டுத் துடிக்கும்
சைக்கிள்காரனைப் புறக்கணித்துவிட்டு
அலுவலகம்
விரைந்து கொண்டிருக்கிறேன் நான்!

# உதிரும் பூ எடுத்து...

தீக்குச்சி உரசுகையில்
கந்தகம் கருகும் வாசத்தை
எல்லோரும் நுகர்கையில்
அதற்கு
மருந்து சுமந்த அரும்புகளின்
கனவுகள் கருகும் நாற்றத்தை
நுகர முடிகிறதா?

பிண ஊர்வலத்தில்
செத்துப் போனவரின்
சொத்துக்கள் பற்றி
எல்லோரும்
பேசிக்கொண்டு வருகையில்
பாடையிலிருந்து உதிரும் பூ எடுத்து
பிஞ்சு மகளின்
கண்ணீர்ப் பிசுபிசுப்பைக்
கண்டுகொள்ள முடிகிறதா?

அசைவ உணவை
அசை போட்டபடியே -
மீன் குழம்பில்
உப்பு அதிகம்
எதனால் என்று
எல்லோரும் யோசிக்கையில்-
வலை வீசிய மீனவனின்
வேர்வையால் இருக்குமோ
என யோசிக்கிறாயா?

கை கொடு நண்பா
நீ கவிஞன், கவிஞனேதான்.

## பார்வை

கோவிலுக்கருகில்
பார்வையிழந்த பிச்சைக்காரி
நடுங்குமவள் கைகளில்
நசுங்கிய பாத்திரம்.

சில்லறை விழும்
சத்தம் கேட்டதும்
நல்லா இருக்கணும் என
நன்றி சொல்லுவாள்.

பாத்திரத்தில்
ஒரு பத்து ரூபாய் நோட்டை
சத்தமில்லாமல் நான்
வைக்கையில்
சலனமேயில்லை
சந்தோசமெனக்கு.

# நதிமூலம்

தலையில் கொட்டு தண்ணீரை
வேட்டிய கட்டிவிடு
விழுந்துடப் போகுது
புளியக் கரைச்சி ஊத்து
போதை தெளியட்டும்...
மேளக்கார பிச்சை வீட்டில்
தெருவே திரண்டிருந்தது.

வாயிலிருந்து வந்த வசவுகள்
பெரிய மனிதர்களைப் பிய்த்தெறிந்தது.
அத்தனை போதையிலும்
தாய்க்குலம் வாழ்கவென்றார்.
அரை மணியாச்சு
ஆட்டம் முடிய.

ஒவ்வொரு முறை கச்சேரி
போய்வரும் போதும்
இப்படித்தான் நடந்து கொள்கிறார்.
மறுநாள்
தனியாய் மடக்கி விசாரித்தேன்.
'கரகாட்டக்காரி மரகதத்தை
நாட்டாமை வீட்டுக்கு
அழைச்சிட்டுப் போனாத்தான்
எல்லாத் திருவிழாவிலும்
எங்கள் கச்சேரி.

அந்த பாவத்ததான்
தண்ணியில கழுவுறேன்
உனக்குப் புரியாது தம்பி.'

எனக்குப் புரிந்தது
கச்சேரி மேடைகளில் அவர்
ஓங்கி அடிப்பது
தவிலை அல்ல.

## ஆச்சரியங்கள்

எந்த டிரில் மாஸ்டர்
வகுப்பெடுத்தார்?
வரிசை கலையாமல்
பறக்கின்றன பறவைகள்.

அம்மா போடுவதைப்
பார்த்துக்கொண்டு மட்டும்
இருந்து விட்டு
சிக்கலான கோலத்தையும்
எப்படிப் போட முடிகிறது
தங்கையால்?

பேருந்து நிலையத்தின்
இரைச்சல்களுக்கிடையேயும்
நிம்மதியாகப் படுத்தபடி
என்ன கனவு காண்கிறான்
காலிழந்த பிச்சைக்காரன்?

குட்டிப்பையன்
தட்டிவிட்ட மைப்புட்டிக்குள்
எத்தனை நாட்களாய்
அடைந்து கிடந்திருந்தது
அழகான ஓவியம்?

ஆற்றுக்குச் சல்லடை
யார் கொடுத்தார்?
மாவு மாதிரி
மணல் வைத்திருக்கிறதே.

ஆச்சரியம் பூக்கும்
நிமிடங்களால்
அர்த்தப்படுகிறது வாழ்க்கை.

# சுவாசம்

ஆனாலும்
உனக்கு மூக்கு நீளண்டா
என்பார்கள் நண்பர்கள்.

பள்ளிக்கூடம் விட்டுத்
தெருக்கோடி வரும்போதே
என்ன குழம்பென்று
எனக்குத் தெரிந்துவிடும்.

காய்ந்தபின் வீசும்
சுண்ணாம்பு வாசத்திற்குப்
போகிக்காகக் காத்திருப்பேன்.

போய் வந்த நாளின்
இரவிலும் அடிக்கும்
சாவு வீட்டுப் பூவின் நெடி.

சுற்றுப்பாதையாக இருந்தாலும்
பூக்கடை வழியாய்த்தான்
போய் வருவேன் எப்போதும்.

தாத்தா போடும்
பொடியின் நெடி.
மழை பெய்தபின்
கிளம்பும் மண் வாசம்.

மாவுமில் பரப்பும்
மசாலா வாசம்
எதுவுமே தப்பாது
என் மூக்குக்கு.

டீசல் புகையில்
ரொம்பத்தான்
தவிக்குது
இப்போதெல்லாம்
என் மூக்கு.

## கோலம்

நேற்று இருந்தது
போலிருக்கிறது
அந்தக் கீற்று வீட்டில்.
கொல்லையில் குடை பிடிக்கும்
மகிழம்பூ மரம்.

ஒவ்வொரு விடியலிலும்,
மரம் போட்ட கோலத்தை
மனசில்லாமல் கலைத்துவிட்டு
மாவால் கோலம் போடுவாள்
அம்மா.

மார்கழி மாதம்
வந்துவிட்டால் போதும்
ஊர்விழி பூராவும்
எங்கள் வாசலில்
செங்கல் பொடி
கரிப்பொடி
மஞ்சள் பொடி
அம்மாவின் கைப்பட்டதும்
ஆனையாய்த் தேராய்
அணிவகுத்து நிற்கும்.
பூவாய்ச் செடியாய்
பூத்துக் குலுங்கும்.

எப்போது கோகுலாஷ்டமி?
எல்லோரும் காத்திருப்பர்
அரிசி மாவெடுத்து

அளவெடுத்த மாதிரி
அவள் வரைந்த பாதங்கள்
தவறி மிதித்தவரைத்
தண்டிக்கத் தூண்டிவிடும்.

வாசல் மறித்து...
கோலத்தைப் பார்த்தியா?

## பரிணாமம்

ஒவ்வொருமுறை
கடந்து போகும் போதும்
பாட்டுப் பாடித்தான்
பயத்தை மறைப்பேன்.

அரைகுறை வெளிச்சத்தில்
ஆள் நிற்பது மாதிரியே இருக்கும்.
உருட்டி விழிக்கும் கண்களும்
ஓங்கிய அரிவாளும்
நெடுநெடுவென்ற தோற்றமும்
இனம் புரியாத
பயத்தைக் கொடுக்கும்.

நடுச்சாமத்தில்
உலாப்போகும்
எதிர்வரும் ஆசாமியை
வாளால் வகிர்ந்துவிடும்.
இருபது நபர்கள்
இதுவரை செத்தனர்.
பள்ளிப் பையன்களின்
புள்ளிவிவரம்
நினைவுக்கு வர
அப்போதெல்லாம்
சைக்கிள் பெடலை
அழுத்தி மிதிப்பேன்.
பல வருடங்கள் கழித்து
ஊருக்குப்போகையில்

முனியன் சிலையின்
இடிந்த துண்டுகளில்
அமர்ந்தபடி
இளவட்டங்கள்
புகை வட்டம்
விட்டுக் கொண்டிருந்தார்கள்.

## மாட்டுப்பெண்

அழுதழுது சிவந்திருந்தது
உன் முகம்
சோறு தண்ணீர் செல்லவில்லை
உனக்கு
உள்ளுக்கும் வாசலுக்குமாய்
அன்று முழுதும் அலைந்தாய் நீ
இனி ஈனவே ஈனாதென்ற
மயிலைப் பசுவை விற்ற நாளில்
நீ தவித்தது ஞாபகத்திலிருக்கிறது
மலடி என்ற பட்டத்தோடு
மாமியார் வீட்டிலிருந்து வந்த
பத்து மாதங்களாய்
புத்தி பேதலித்துக் கிடக்கும் அக்காவே
அழுது தீரேன் துயரத்தை...

## செல்

சட்டெனத் தோன்றி
வானவில் அழைத்ததை
சொட்டென வீழ்ந்து
மழைத்துளி அழைத்ததை
கண்சிமிட்டி உன்னை
விண்மீன் அழைத்ததை
செடியில் சிரித்துப்
பூக்கள் அழைத்ததை
எத்தனை நாட்கள்
இழந்திருப்பாய் நீ?

தொடர்பெல்லைக்கப்பால்
இருப்பதாய்ச்
சிலநேரம் உன்
செல் சொல்கிறது.

திருவிழாப் பார்க்க
நண்பர்கள் அழைத்ததை
மணவிழாப் பார்க்க
மாமன் அழைத்ததை
கடைசியாய் முகம் பார்க்க
அம்மா அழைத்ததை
எந்திர வாழ்க்கையில்
இழந்த நண்பனே...

சொல்
தொடர்பெல்லைக்கப்பால்
இருப்பது
செல் மட்டும்தானா?

## காலந்தோறும் காயங்கள்

இருள் படர்ந்த
சிறு அறையில்
விறகடுப்பை ஊதி ஊதி
அம்மா சமைத்தது
அடிமனசில் நிற்கிறது.

பளிங்குத் தரை
குழல் விளக்கு
பளபளப்பாய்ச் சமையலறை
கேஸ் அடுப்பு
குக்கருடன்
சீக்கிரமாய்ச் சமையலின்று.

ரசத்தில் உப்பு
அதிகமென்று
அது வைத்த செம்பால்
அப்பா அடித்த அடி
அம்மாவின் முகத்தில்
ஆறாத் தழும்பாய்.

பவுடர் பூசிய
மனைவியின் முகத்தில்
காயமேதுமில்லை
உற்றுப்பார்த்தால்
உள்காயமிருக்கலாம்.

## அரிசியியல்

பத்தடி உயரப் பத்தாயமது
ராட்சசன் வயிறு போல
அடிப்பக்கம் பெருத்திருக்கும்.

ஓட்டை அடைத்த
கொட்டாங்குச்சி
தொப்புள் போல.

முப்பது நாளுக்கொருமுறை
தப்பாமல் திறப்பார்கள்.

அம்மா வாய் திறக்க
தலையாரி குதிருக்குள் குதித்து
காலால் தள்ளுவார்.

மழையாய்க் கொட்டும் நெல்
மலையாய்க் குவியும்.

திரண்ட நெல்லை
இரண்டு மூட்டையாக்கி
சைக்கிளில் ஏற்றுவார்
தலையாரி.

அரிசியாய்த் தவிடாய்
அரை மணியில் வரும்
முனை முறியாத அரிசியை
முறத்தால் கொழிப்பாள்
நாச்சம்மை.

குருணை அவளுக்குக்
கூலியாய்ப் போகும்.

மளிகைக் கடையிலிருந்து
ஐந்து கிலோ அரிசி வாங்கி
மனைவி இப்போது
பொட்டலம் பிரிக்கையில்
அம்மா குதிர் திறப்பது
அடி மனசில் நிற்கிறது.

## ஆசை

சிறிய ஏணியில் ஏறி
பெரிய பாம்பில் இறங்கி
கட்டம் கட்டமாய்
நடக்கிறது
வாழ்வெனும் பரமபதம்.

ஆடிப்பார்க்கும் ஆசைமட்டும்
விடுவதில்லை எவர்க்கும்.

## வினயம்

வளரும் செடியின்
கிளைகளை முறிப்பான்
முருகேசன்.

அடுத்தவன் பம்பரத்தை
ஆணியால் குத்துவான்
முத்தலிப்பு.

புதுப்பேனா பார்த்தால்
நிப்பை உடைப்பான்
சப்பாணி.

பட்டாம்பூச்சியின்
இறக்கைகளைப் பிய்த்து
சந்தோஷப்படுவான்
அந்தோணிசாமி.

கால்பந்து விளையாட்டில்
அடுத்தவன் காலைத்
தட்டி விடுவான் தங்கராசு.

பிள்ளைகள் பிராயத்தில்
விளையாட்டாய்ச் செய்வதை
வினயமாய்ச் செய்கிறார்கள்
பெரியவர்கள்.

## வட்டம்

பெரும் புள்ளியாகப்
பிரியம் பலருக்கு.
நேர்கோடாக
நிற்பதை விடவும்
வட்டம் உருவாக்க
விரும்புகிறார்கள்.

உருவான வட்டத்தைக்
கலையாமல் காக்கக்
கவலை வருகிறது.
வட்டத்தைக் காப்பாற்ற
ஏதாவது செய்தால்
மற்ற வட்டங்கள்
மனம் கோணுகின்றன.

ஒவ்வொரு வட்டத்திற்கும்
அடுத்த வட்டம்
சின்னப் புள்ளிதான்.
வட்டத்தைப் பெரிதாக்க
அடுத்த வட்டத்தை
உடைக்க அலைகிறார்கள்.

ஒவ்வொரு வட்டமும்
ஒரு வளையம்.
எப்போது இணையும்
சங்கிலியாய்?

# கவிதைகள்
# கவிதைகள் அல்ல...

என் கவிதைகள்
மயில் இறகுகள்
மனசை வருடும்.

என் கவிதைகள்
பனிக் கட்டிகள்
சிலிர்க்க வைக்கும்.

என் கவிதைகள்
சாவிக் கொத்து
பூட்டுகள் திறக்கும்.

சிரமத்தில் நீங்கள்
சிக்கித் தவிக்கையில்
உங்கள் சிநேகிதன்
செய்வதை என்
கவிதைகள் செய்யும்.

மனித குல வரலாறு
மாற்றத்தால் ஆனது.
கண்ணீர் செரித்து
சிறகுகள் விரித்து
வானத்தை ஜெயித்த
வண்ணப் பறவை நாம்
துயரங்கள் மறந்து
உயரங்கள் தொடுவோம்.

அந்த உற்சாக நேரத்தில்
உங்களோடு இருக்க
என் கவிதைகள்
கண்விழித்துக் காத்திருக்கின்றன.

## அதை மட்டும்

ஒவ்வொரு வீட்டிலும்
வைத்திருக்கிறார்கள்
வியூ ஃபைண்டர்.

இன்லண்டின் இடத்தை
எஸ்எம்எஸ் பிடித்திருக்கிறது.

வெந்து போனதை
விசிலடித்துச் சொல்கிறது
குக்கர்.

தொடர்களின்
இடைவேளைகளில்
பரிமாறிக் கொள்ளப்படுகிறது
பாசம்.

யூஸ் அன்ட் த்ரோ
குவளைகளால்
நிரப்பப்படுகின்றன தெருக்கள்.

ரிமோட்
ஆஷ்ட்ரே
வார இதழ்கள்
ஆடியோ கேசட்டுகள்.

எடுக்கிற இடத்தில்
எல்லாமும் வைத்துவிட்டு
மனசை மட்டும்
வைத்திருக்கிறார்கள்
தொடமுடியா தூரத்தில்.

## பழக்கம்

பரிசுப் பொருட்கள்
சுற்றிய தாளைப்
பத்திரமாகச்
சேர்த்து வைப்பாய்.

பாக்கெட் பாலைச்
சட்டியில் கொட்டி
பாலிதீன் கவர்கள்
மடித்து வைப்பாய்.

ஜவுளிக் கடையின்
மஞ்சள் பைகளை
எவருக்கும் தராமல்
எடுத்து வைப்பாய்.

டி.வி, மிக்சி
அட்டைப் பெட்டிகள்
ஆண்டுக் கணக்கில்
அடுக்கி வைப்பாய்.

பழக்க தோஷம்
பற்றிக் கொள்ள
சின்னச் சின்ன
சண்டைகள் சேர்த்து
பக்கத்து வீட்டுடன்
பகையேன் வளர்க்கிறாய்?

## கலை

கறம்பக்குடி திலகவதி
கரகமென்றால்
எட்டூர் ஜனங்களும்
எப்போதும் திரள்வார்கள்.

உச்சிப் பொட்டும்
எட்டுக்கல் மூக்குத்தியும்
ஜரிகை வேய்ந்த ஜாக்கெட் அழகும்
வாலிப வயோதிக அன்பர்களின்
தூக்கத்தைத் திருடும்.

நையாண்டி மேளத்தின்
நடைக்குத் தகுந்தபடி
திலகவதி ஆட ஆட
திருவிழாக் கூட்டமே
உறைந்து போய் நிற்கும்.

உறுமி மேளத்தின் உச்ச அதிர்வில்
நாக்கு குழறிய ஊர்ப் பெரிசுகள்
நூறு ரூபாய் நோட்டை
ஜாக்கெட்டில் குத்தச்
சண்டை போடுவார்கள்.

காலம் திலகத்தின் முகத்தில்
முதுமை வரைந்தது.
மூன்று நாள் பட்டினியில்
பஞ்சடைந்த கண்களோடு
அரிசியும் மளிகையும்
கடனாய்க் கேட்டு
ஒவ்வொரு கடையாய்
ஏறி இறங்குகிறாள் இப்போது.
வாழ்க்கை ஆடுகிறது
அதன் ஆட்டத்தை...

## திடீரென்று...

பேண்ட் சட்டையை விட
பாவாடை தாவணி மேல்
விருப்பம் அதிகரித்தது.
தோடு ஜிமிக்கியும்
ஒற்றைக்கல் மூக்குத்தியும்
நட்சத்திரங்களாய்க்
கனவில்
ஜொலிக்க ஆரம்பித்தன.

பூக்கடை வழியாய்ப்
போய் வருகையில்
ஜடை அலங்காரப் பூவைக்
கண்கள் வண்டுகளாய்
மொய்த்துக் கிடந்தன.

பழகிய சினேகிதன்
தொட்டுப் பேசுகையில்
படபடத்தது மனசு.
குழம்பித் தெளிந்து
பெண்ணாய் மாற
வீதிக் குரல்கள்
கேலி பேசின.

பெற்ற டிப்ளமோ
கற்ற நடனம்
எழுதிய கவிதைகள்
எல்லாம்...
ஒற்றை வார்த்தையில்
பொசுங்கிப் போனது
'பொட்டை.'

## மாற்று

கண்ணீர்க் கோடு
முடியும் இடத்தில்தான்
பூக்கிறது புன்னகை.

இருளின்
உச்சப் புள்ளியிலிருந்து
கசிகிறது வெளிச்சம்.

வசவுகளுக்குப் பக்கத்திலேயே
இருக்கின்றன
வாழ்த்துகள்.

சிக்குண்ட நூல்கண்டின்
முடிச்சுகளுக்குள்
ஒளிந்திருக்கிறது
அவிழ்க்கும் சூட்சுமம்.

உதிர்ந்த சருகுக் குவியலுக்குள்
மறைந்து கிடக்கிறது
வீரிய விதை.

அழுது மங்கிய
கண்களைக் கழுவி
வேறு பக்கம் பார்த்தால்
தெரியும் பாதை.

## அஞ்சறைப் பெட்டி

ஏலம் இருந்த
அறையில் கிடந்து
மணக்கிறது முதல் காதல்.

பெருங்காயம் கிடக்கும்
அறை முழுதும்
பட்ட காயங்கள்.

உப்புக் கிடந்த
அறைக்குள்
தப்பாமல் சில கண்ணீர்த்துளிகள்.

கடுகு உளுந்து
இருந்த அறைக்குள்
நிரம்பிக் கிடக்கும்
கோபத்தில் தெறிக்கும் வசவுகள்.

மிளகும் மிளகாயும்
இருந்த அறைதான்
ரோஷம் போட்டு வைக்க.

அவரவர் மனசிலும்
இருக்கிறது
அம்மா புழங்கிய
அஞ்சறைப் பெட்டி.

## வௌவால் வாழ்க்கை

விளக்குகளை விடவும்
இருட்டையே நம்புகிறார்கள்.

பலூனைப் பெரிதாக்கவே
பயன்படுகிறது காற்று.

நதிபோலவே
நடந்துகொள்கிறது சாக்கடை.

கைகுலுக்குவதை விடவும்
நகங்களால் கீறவே
விரும்புகிறார்கள்.

புத்தகங்கள் படிப்பதில்லை
பூக்களோடு சிரிப்பதில்லை
நிலா ஒளிபரப்பு
எவருமே பார்ப்பதில்லை.

கரன்சிகளை எண்ணியே
கழிகின்றன நிமிடங்கள்.

# ஆடுகளம்

பாம்பும் ஏணியும்
பக்கத்திலேயே
இருக்கின்றன
பரமபதத்தில்.

எத்தனை ஜோக்கர் இருந்தாலும்
ரம்மி வந்தால்தான்
ஜெயிக்க முடியும்
சீட்டுக்கட்டில்.

சிப்பாய்களை விடவும்
யானை வீழ்ந்தால்தான்
அதிகம் வருந்துவார்கள்
சதுரங்கத்தில்.

கொள்ளையடித்தவன்
எல்லோரையும் போல்தான்
இருப்பான்
குலை குலையாய் முந்திரிக்காயில்.

ஆடுகளமறிந்து
ஆடினால்
அழ வேண்டியதில்லை
தோற்று.

# மழைத் துளிகள்...

இன்றைக்குப் பூக்காதே
மலரே!
அவள் வரவில்லை.

ஞாபக அறைகளில்
ஊதுவத்தி.
உன் நினைவுகள்.

வந்த பின்னே உறக்கம்.
உறக்கத்திலும் அவள்.
காதலி முரண்தான்.

உன்னிடம் உண்டா!
ரோஜாச்செடியே!
அவள் போல சிரிப்பு.

பூக்கும் வரை
வேருக்குக் கஷ்டம்
யாருக்குத் தெரியும்?

சுட்ட அப்பளம்
சுற்றிலும் பருக்கைகள்
பட்டினி ராத்திரி.

நட்சத்திரம்
உருகி வழிகிறதோ?
வெளியில் மழை.

அவள் தடம் பதித்த
இடம் எது?
தலயாத்திரை போக வேண்டும்.

கரும்பு வண்டிக்காரன்
காசில்
ரேஷன் சர்க்கரை.

புல்லின் விரல்கள்
கிள்ளியதோ?
பூவுக்கென்ன சிரிப்பு.

மொட்டின் முகத்தில்
பன்னீர் ஊற்று
விடிந்தும் விழிக்கவில்லை!

அந்தி வானம்
அழகாய் வானவில்
எந்தப் பக்கம் கிழக்கு?

சிதைந்த கல்தான்
செதுக்கச் செதுக்கச்
சிற்பம்.

பாதிச் சிலம்பு
பரல்கள் சுற்றிலும்
மதுர இரவு.

பிறை நிலா
குறை களை
பௌர்ணமி.

கையில் காசில்லை
நட்சத்திரங்களைத்தான்
எண்ண வேண்டும்.

சித்திரை மாதம்
கத்திரி வெயில்
நெருப்பு கேட்கும் பாய்லர்.

கற்றவர்க்குக் குழல்
மற்றவர்க்கு
மூங்கில்.

புத்தக அலமாரி
சுத்தமாய் மறைத்து
கலர் டி.வி.

கடைசிச் செல்லையும்
காதாய் மாற்றும்
குயிலின் குரல்.

தொட்டியில் செடி வளர்
தோட்டத்தில் மரம் நடு
துளிர்க்கும் நாட்கள்.

குறை கேட்கும் மந்திரி
கூட்டமாய் மக்கள்
வெள்ளைத்தாள் விற்பனை.

அறுந்த வலை
ஏறும் சிலந்தி
வகுப்பெடுக்கும் மனசுக்கு.

சாப்பிட்டாயா பெண்ணே?
என் கைகளைக்
கழுவ வேண்டும்.

எச்சத்தில் விழும்
மரமாய் எழும்
வீரிய விதை.

## ஹைக்கூ மின்னல்கள்

சுட்ட அப்பளம்
சுற்றிலும் பருக்கைகள்
பட்டினி ராத்திரி.

கையில் காசில்லை
நட்சத்திரங்களைத் தான்
எண்ண வேண்டும்.

அலையும் கடல்
கவிழும் படகு
அதோ கிளிஞ்சல்கள்!

அந்தி வானம்
அழகாய் வானவில்
எந்தப் பக்கம் கிழக்கு?

வாடிய செடியும்
வருத்தம் தொலைக்க...
மறுபடி பூக்கும்

அடர் இருள்
ஒரு அகல்
இனி பகல்.

துளி மழை
உளம் நனை
குற்றாலம்.

வரும் பகை
தரும் சுகம்
அனுபவி.

புல்லாங்குழல்
ஆத்தாவின் காது
ஓட்டைகள் அழகுதான்.

ப்ரேக்ஃபாஸ்ட்
ப்ரேக்கிங் நியூஸ்
நவீன தமிழன்.

அறுந்த வலை
ஏறும் சிலந்தி
வகுப்பெடுக்கும் மனசுக்கு.

சொட்டும் மழைக்கு
ஏங்கிய மனசு சபிக்கிறது
கொட்டிக்கொண்டிருக்கையில்.

மணல் மறைத்த ஊற்று
எப்படியோ கண்டுபிடிக்கிறார்கள்
யாரோ சிலர்.

சிதைந்த கல்தான்
செதுக்கச் செதுக்கச்
சிற்பம்.

தகிக்கும் கோடை
தார்ச்சாலையில்
உருகும் ஐஸ்வண்டிக்காரன்.

கண்ணீர்க் கோடு முடிகிற
இடத்தில் பூக்கிறது
ஒற்றைப் புன்னகை.

அறைக்குள் வளர்ப்பு
சன்னலுக்கு வெளியே
தலைநீட்டிச் சிரிக்கும் பூ.

பழைய டைரியின் மக்கிய நெடி
ஒன்றில் மட்டும் மல்லிகை வாசம்
உன் கூந்தல் பூ.

நைந்த தலையணை
பழைய கடிதங்கள்
நினைவின் சாம்பல்.

மூச்சுக் காற்றைத் திருடிக்கொண்டு
ஓடுபவர்களின் கைகளில்
விசிறிகள்.

தூக்கியெறிய குச்சி தேடாமல்
எத்தனை பேர் ரசிக்கின்றனர்...
மரவட்டையை!

மொட்டின் முகத்தில்
பன்னீர் ஊற்று
விடிந்தும்கூட விழிக்கவில்லை!

இன்றைக்குப் பூக்காதே
மலரே!
அவள் வரவில்லை.

ஓட்டலில் கூட்டம்
ஓரே விருந்து
தொழிலாளருக்குப் பட்டினி!

எச்சத்தில் விழுந்தாலும்
மரமாய் எழும்
வீரிய விதை.

தொடர்கள் பார்த்து
கழியும் பொழுதுகள்
சுடர் பார்க்க ஆளில்லை.

கனத்த புத்தகங்களை
வென்றுவிடும்
கவிதையின் ஒரு வரி.

இறைந்து கிடக்கும்
புள்ளிகள் தான்
சரியாய் இணைத்தால் கோலம்.

பாட்டனின் வாள்முனை
இப்போதும் கூர்மையாய்...
பாட்டெழுதும் பேனா.

இயங்கும் போதே
ஒளிரும் கவனி
ஒற்றை மின்மினி.

மழையை இரசி
மனசால் சிரி
கரையும் கவலை.

பூவில் பனித்துளி
உழைப்பவன் வியர்வைத்துளி
அதிக அழகு எது?

குறை கேட்கும் மந்திரி
கூட்டமாய் மக்கள்
வெள்ளைத்தாள் விற்பனை.

நிலாப் பழத்தில்
மொய்க்கும் ஈக்கள்
நட்சத்திரங்கள்.

பட்டுச் சுடிதார்
காட்டன் சுடிதார்
எங்குமுண்டு வர்க்கம்!

கற்றவர்க்குக் குழல்
மற்றவர்க்கெல்லாம்
மூங்கில்.

அடித்துக் கொள்ளாதீர்கள்...
குழந்தைகளே!
அப்பா - அம்மா விளையாட்டுத்தான்.

புல்லின் விரல்கள்
கிள்ளியதோ?
பூவுக்கென்ன சிரிப்பு.

அந்த வீட்டிலும்
பருக்கை வாசம்
கூட்டாஞ்சோறு.

அலையும் கடல்
கவிழும் படகு
அதோ... கிளிஞ்சல்கள்.

பாட்டியின் சுருக்குப் பைக்குள்
பதுங்கிக் கிடந்தன
ஒளிரும் சொற்கள்.

வானத் தலையணை
கிழிந்து போனதோ...?
பஞ்சாய் பறக்குதே!

யாருக்கு கல்யாணம்...?
பன்னீரைத் தூவும்
மேகம்.

சாயத் தொழிற்சாலைக்கு
வேலைக்குப் போகும்
அவள் விதவை.

சித்திரை மாதம்
கத்திரி வெயில்
நெருப்பு கேட்டும் பாய்லர்.

கடும் கோடை
தார்ச்சாலை
உருகும் ஐஸ் வண்டிக்காரன்.

கையில் காசில்லை
எண்ண வேண்டும்...
நட்சத்திரங்களையாவது.

பத்து விரல்களும்
பத்தாமல் போனது
பதினொன்றாய் பேனா.

அடர் இருட்டு
அப்பிக் கிடக்கும்
பிறகே விடியும்.

எல்லாக் கோலங்களிலும்
எறும்புதான் மொய்க்கும்
அம்மா போட்டால் அத்தனை விழிகளும்.

சிதைந்த கல்தான்
செதுக்கச் செதுக்கச்
சிற்பம்.

விரலிடுக்கில் வழியும்
நிலவொளி
கண்களில் மரங்களின் பரதம்.

தண்ணீர் ஊசிகள்
தரையில் பாய்ந்தன
மேலெழும் கொப்புளங்கள்.

பன்னீர் மரத்தின் பாதங்களில்
சிதறிக் கிடக்கின்றன
சின்ன நாதஸ்வரங்கள்.

மகளுக்கு காதுகுத்து
அம்மாவின் காதில்
கவரிங் வளையம்.

மின்னலென உதித்து
யோசிக்கையில் மறந்தே போனது
பிடிபடாத கவிதை வரி.

எல்லா நாட்களின்
மீதிருந்தும் வீசுகிறது
இட்லி, தோசைகளின் நெடி.

கசியும் இசையில்
தனியே தெரிகிறது
புல்லாங்குழல் விற்பவனின் நடை.

யுக இருட்டை விரட்ட
வெளிச்சம் கொடுக்கும்
தீயின் சிவப்பு.

சொட்டு கூட இல்லை
தெரிந்தும் முட்டுகிறது
தாய்மடியைக் கன்று.

உழைப்பவன் கைகளில்
காய்ப்பு
உலகிலேயே உயர்ந்த பூ.

மழையை ரசி
மனசால் சிரி
கரையும் கவலை.

குவிந்த சாம்பலைக்
கூர்ந்து கவனிக்கையில்
மறைந்திருக்கும் கங்கு.

கடைசிச் செல்லையும்
காதாய் மாற்றும்
குயிலின் குரல்.

நிலவின் ஒளி
பரவும் வெளி
கவிதை மடி.

சுண்டல் சிறுவனிடம்
பேரம் பேசு...
காசு குறைகிறது பீருக்கு.

'ஆ'னா எழுதிப் பழகுகையில்
பேனா கூட
உயரும் ஓரடி.

மணலில் அப்பா
மடிக்கணினியில் மகன்
தளரா தமிழ்.

பிறை நிலா
குறை களை
பௌர்ணமி.

தொட்டியில் செடி வளர்
தோட்டத்தில் மரம் நடு
துளிர்க்கும் நாட்கள்.

நட்சத்திரம்
உருகி வழிகிறதோ?
வெளியில் மழை.

வந்த பின்னே உறக்கம்
உறக்கத்திலும் அவள்
காதலி முரண்தான்.

சாவி தேடி
அலைவதே வாழ்க்கையானது
சில நேரம் பூட்டாத பூட்டுக்கும்.

கலகலக்கும் கண்ணாடி வளையல்கள்
மவுனம் பேசும்
இரப்பர் வளையல்.

இட்லிகள்
தோசைகள்
நாள் கடிகாரங்கள்.

சுட்ட அப்பளம்
சுற்றிலும் பருக்கைகள்
பட்டினி ராத்திரி.

வாசலிலேயே இரும்
வந்து சேரும்
வானவில்லும்.

நிறைய சம்பளம்
நிறைய வசதிகள்
முதியோர் இல்லங்கள்.

அந்தி வானம்
அழகாய் வானவில்
எந்தப் பக்கம் கிழக்கு?

மூலிகைச் செடி
பிடுங்கி எறி
குரோட்டன்ஷே போதும்.

அருவியாய் கொட்டுகையில்
அழுக்கென்ன...
பிசுக்கென்ன...?

ஒவ்வொரு கரமாய்
வடத்தில் பதிய
தேரும் சேரும்.

இலைகளை ஆட்டி
ஏற்றுக்கொள்ளும்
மரங்களோடு பேசிப்பார்.

கண்விழி சூரியனே...
தொலைந்து போய்விடவில்லை
உன் வானம்.

சத்தமாய்க்
கவிதை சொல்லிக் கொண்டிருந்தேன்
பித்தன் என்றார்கள்.

ஏறிடு நண்பனே...
ஓரிரு படிகள்தான்
உச்சிக்கு.

நொறுங்கியதோ வானவில்?
வண்ணங்கள் சிதறிக் கிடக்கின்றனவே...
பூக்கள்.

முறுக்கிக் கொண்டிருக்கும்
கொடியைக் கடந்தே தெரிகிறது
சிரிக்கும் பூ.

கோயில் புறா
மசூதி காகம்
ஒரே வானம்.

ஞாபக அறைகளில்
ஊதுவத்தி
உன் நினைவுகள்.

## உறுத்தல்

சாமி உண்டியலில்
திருடிய காசில்
விரும்பிச் சாப்பிட்ட
கடலை உருண்டைகள்.

மொத்த வகுப்பும்
பெஞ்சில் நிற்க
உள்ளங்கையில் எழுதி வைத்து
ஒப்பித்து தப்பித்த
மனப்பாடப்பாட்டு.

காய்கறி விலையில்
காசுகள் கூட்டி
மதிய உணவுக்குப்பின்
சாப்பிட்ட
'ஸ்பெஷல்' தோசைகள்.

வாங்கிய அன்றே
வழியில் தொலைத்து
விளையாட்டு பீரியடில்
பைகள் கலைத்து
அதே கலரில்
அமுக்கிய பேனா.

வாங்கிய அன்றே
வழியில் தொலைத்து
விளையாட்டு பீரியடில்
பைகள் கலைத்து
அதே கலரில்
அமுக்கிய பேனா.

ஊரணி நீரில்
ஒருமணி நேரம்
ஆட்டம் போட்டு
மாட்டிக் கொண்டபின்
வாங்கிய வசவு.

ஊர்கோடித் தோப்பில்
ஆள்கூடி அடித்து
தோட்டக்காரனின் துரத்தலில்
விட்டெறிந்த மாங்காய்கள்.

# மின்மினிகள்

ஓட்டத்தில் வென்றால் தான்
பரிசு கொடுப்பார்கள்
உன் பார்வை பரிசை பெற்ற பின்தான்
தொடங்கிற்று என் இதய ஓட்டம்.

வண்ண கைக்குட்டை
வாச செண்டு
பூ போட்ட புடவை
இதய வடிவிலான
நகைப் பெட்டி
பரிசுகளுக்குள் பதுங்கி கிடக்கிறது
என் லப்டப்.

கோடி நட்சத்திரங்கள்
ஜொலித்தாலும்
அம்மாவின்
ஜோடி மூக்குத்திக்கு
இணையாகாது.

இளம்பச்சை
கிளிப்பச்சை
கரும்பச்சை
பார்த்தால் பசி தீரும்
தாவரம் பார்.

நீயேனும் உணர்ந்தாயா
நம் நட்பு காதலாக
மலர்ந்த தருணத்தை.

பார்வையால் பற்ற வைத்தாய்
அடி மனசில் வெடிக்கிறது
ஆயிரம் வாலா.

அடிக்கடி உச்சரித்தேன்
உன் பெயரின் எழுத்துகள்
சில தேய்ந்திருக்குமே.

சத்தியம் செய்கிறேன்
கத்தியை விடவும்
கூர்மையானது என் கவிதை.

கணக்குப் பார்க்கையில்தான்
தெரிகிறது... இருப்பதே
பெரிய விஷயம் என்பது.

கொழு சுமப்பவன்
அழுகிறான்
எழு மானிடமே.

சிநேகமாய்ச் சிரிக்கும்
பூ தெரிகிறது எனக்கு
முறுக்கிக் கொண்டிருக்கும்
கொடியைப் பார்க்கிறாய் நீ.

மணல்
மறைத்து வைத்திருக்கிறது
ஊற்றை
யாரோ சிலர் தான்
கண்டுபிடிக்கிறார்கள்.

தடவித் தடவி
வளர்த்த புறாதான்
எச்சமிட்டுப் போனால்
என்ன செய்ய?

பிரைடு ரைசும்
கட்லெட்டும் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் பொழுதுகளில்
நினைவுக்கு வருகிறது
அம்மா உருட்டி வைத்த
தயிர்ச் சோறும் மாவடுவும்.

விறகு எரிந்தால் கரியாகும்
கரி எரிந்தால் சாம்பலாகும்
உன் நினைவுகள் மட்டும்
எதுவும் மிஞ்சாமல் எரிக்கிறதே
எப்படி?

சாலை குழியில்
கால் தடுக்கி விழுந்தேன்
எழுந்து நடமாட
இரண்டு வாரங்களாயிற்றும
உன் கன்ன குழியில்
விழுந்திருக்கிறேன் எழுவது
எப்போதோ?

பழைய டயரியை
புரட்டிக் கொண்டிருந்தேன்
எல்லா பக்கத்திலும்
மக்கிய நெடி
ஒன்றில் மட்டும் மல்லிகை வாசம்
உன் கூந்தல் பூ.

கூர் தீட்டிய வார்த்தைகளால்
குத்துகிறீர்கள் நீங்கள்
நார் உரிய நார் உரிய
தேங்காயாகிறேன் நான்.

விறகு எரிந்தால் கரியாகும்.
கரி எரிந்தால் சாம்பலாகும்.
உன் நினைவுகள் மட்டும்
எதுவும் மிஞ்சாமல் எரிகிறதே
எப்படி?

சாலை குழியில்
கால் தடுக்கி விழுந்தேன்
எழுந்து நடமாட
இரண்டு வாரங்களாயிற்று.
உன் கன்னக் குழியில்
விழுந்திருக்கிறேன் எழுவது
எப்போதோ?

பழைய டயரியை
புரட்டிக்கொண்டிருந்தேன்.
எல்லா பக்கத்திலும்
மக்கிய நெடி
ஒன்றில் மட்டும் மல்லிகை வாசம்
உன் கூந்தல் பூ.

ஒருவிரல் தன்னை நீட்டி
உணர்வெனும் கயிறு தொட்டாள்
வேகமாய் ஊஞ்சல் ஆட
வீழ்ந்துதான் போனேன் யானும்.

## சடங்கு

கையில் தரப்படும்
அட்சதையை
எவ்வளவு பலமாக வீசி எறிந்தாலும்
படுவதேயில்லை மணமக்கள் மீது.

பழைய டைரியைப்
புரட்டி கொண்டிருந்தேன்
எல்லாப் பக்கங்களிலும்
மக்கிய நெடி.
ஒரு பக்கத்தில் மட்டும்
மல்லிகை வாசம் - உன்
கூந்தல் பூ.

நீயேனும் உணர்ந்தாயா?
நட்பு காதலாக
மொட்டவிழ்ந்த
தருணத்தை.

நனையத்தான் மழை
நானிலமே நனை.

மழையில் கரைகிறது வானவில்
மண்ணில் புதைந்து கிடக்கிறது பொன்
சிபாரிசுகளுக்குள்
தொலைந்து போகிறது திறமை.

அமாவாசையன்றே
ஆரம்பித்து விடுகிறது பௌர்ணமி
தாமதமாய் கண்டுகொள்கிறாய் நீ.

பூக்கள் தூவி
வாழ்த்தியது மரம்
கவுரவக் கொலை செய்யக்
காதலர்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

குடை மறந்த நாளின்
மழை உணர்த்திற்று
குடையோடு வந்த
நாட்களின் பிழை.

நகர்
நட
ஓடு
என்ன செய்தாலும்
சுவடுகள் முக்கியம்.

குறைகள் இருப்பதாய்க்
கவலை கொள்கிறாய்
ஓட்டைகள் இல்லாத
குழலை வாசிக்க முடியாது.

நாடகத்துக்குச் சினிமா
சினிமாவுக்குச் சின்னத்திரை
சின்னத்திரைக்கு யூடியூப் சேனல்
இடுப்பிலிருந்தே இறங்குகின்றன
துடுக்கான குழந்தைகள்.

# ஒரு ஜோதி உருவாக்கு

இரு ராகம் இணைசேரும்
புதுகீதம் உருவாகும்
வருங்காலம் நலமாகும்
வரலாறு நமைப்பாடும்
திசையெட்டும் புதிய ஒளி
தெறிக்கட்டும் உனது விழி
அசையட்டும் சுட்டுவிரல்
அதுகாட்டும் எனது வழி
சிரிக்கட்டும் உனது இதழ்
சிந்தட்டும் சில்லறைகள்
விரிக்கட்டும் மனச் சிறகு
விழிக்கட்டும் கல்லறைகள்
எழிலோடு நீபாடு
என்னோடு விளையாடு
அழியாத ஒரு ஜோதி
உருவாக்கு அன்போடு

# இப்போதும் இருக்கிறார்கள்

அலுவலகங்களில், வீதிகளில்
அவ்வப்போது தட்டுப்படுகிறார்கள்
கூனிகள்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம்
மறைந்திருந்து அம்பு விடுகிறான்
பக்கத்து வீட்டு ராமன்.

மனைவியின் மோதிரத்தை அடகுவைத்து
சீட்டு விளையாடுபவனுக்குத்
தருமனின் முகச்சாயல் இருக்கிறது.

காமத்துப் பாடம் நடத்திய
குருவின் முகத்திரை கிழிக்க
காவல் நிலையத்தில் நிற்கிறாள்
குட்டிப் பாஞ்சாலி.

கட்டிலில் கைவிட்டுப் போன
நளனைத் தேடி
கவலையோடு காத்திருக்கிறாள்
தமயந்தி.

லஞ்சம் வாங்க மறுக்கும்
பஞ்ச பாண்டவர்கள்
கௌரவர்களின் சபையில்
கேலி செய்யப்படுகிறார்கள்.

ஆனாலும்,
ரத்தச் சொட்டுக்களிலிருந்து
உதிக்கும் மகிஷனாய்...
அநீதிக்கு எதிராக
குரல் உயர்த்தும் மனிதர்கள்
தோன்றிக்கொண்டேதான் இருக்கிறார்கள்.

## நடிப்புச் சுதேசிகள்

பவுடர் பூசி முகத்தில்
பளபளப்பு ஏற்றிக் கொள்கிறாய்.

உதடுகளில் புன்னகையை
ஒட்ட வைத்துக் கொள்கிறாய்.

நரைமுடி மறைக்க
இருக்கவே இருக்கிறது
ஹேர் டை.

அனிச்சைச் செயலாய்
கூம்பி விரிகின்றன
உன் கைகள்.

ஆதங்கங்களை மறைத்துக்கொண்டு
அடுத்தவரின் நலம் விசாரிக்கிறாய்.

குறுக்கு வழியில் போவதிலும்
குற்ற உணர்வில்லை உனக்கு.

தொலைக்காட்சித் தொடரில்
வருபவர்கள்
நன்றாக நடிப்பதாய்
வியந்தோதிக் கொள்கிறாய் எப்போதும்.

## பெயரை எழுதும் பேனா கூட...

அவன்
பட்டுக்கோட்டையில் இருந்து
பாட்டுக்கோட்டை கட்டியவன்
புதுப்பாட்டைத் தந்ததனால்
புது பாட்டைப் போட்டவன்

விழி பூட்டு போட்டிருந்த மக்களுக்கும்
விழிப்பூட்டும் கவிதை சொன்னவன்

மொழி, பாட்டு என்பதெல்லாம்
அரிப்பெடுத்தோர் முதுகுதனை
சொறிந்துவிடும் விசிறி அல்ல
சமூக கோபத்தை விசிறிவிட வேண்டும் என்று
குறைப்பாட்டைத் திரைப்பாட்டில் கூறிவைத்தவன்

செங்கபடுதான் காட்டின் புழுதியை அள்ளி
சினிமா படுதாவில் அப்படியே அப்பிவைத்தவன்
விருத்தங்கள் பாடி வைத்த தமிழெடுத்து
ஏழை மக்கள் வருத்தங்களைப் பதிவுசெய்தவன்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தான்
வீணே உண்டுகழித்திருப்போரை நிந்தனை செய்தான்

பழகிய வரி எடுத்தே பாடல்கள் செய்தான் - அதையும்
படிப்போர் பின்பற்றும் பாடமாய் செய்தான்

கல்யாணசுந்தரம் அவன் பெயரை எழுதும்
பேனா கூட ஓர் அடி உயர்ந்து விடுகிறது.

## புதுப்புது அர்த்தங்கள்

சொல்லென்றால் வேண்டும்
அதற்கு அர்த்தம்.
இல்லையெனில் அது வெறும் சப்தம்.
புழங்கும் வார்த்தைகளுக்குக் கூட
புதிய அர்த்தம் வருவது
கவிஞர்கள் கையாளும் போதுதான்.
சில சொற்களை அழுத்தி உச்சரித்தால்
அர்த்தம் மாறும்.

சில சொற்களைப் பிரித்து உச்சரித்தால்
அர்த்தம் மாறும்.
சேர்த்தோ பிரித்தோ
ஒட்டியோ வெட்டியோ
வார்த்தைகளைச் செலவழித்தால் தான்
வாழ்க்கை அர்த்தம் அடைகிறது.
முதல் சொல்லை மழலை சொல்லும் வரை
தாய் தான் எப்படி தவித்து போகிறாள்?

அர்த்தம் இல்லாத வார்த்தைகள் கூட
அழகாய் இருப்பது குழந்தைகள் பேசும்போது தான்.
படைத்தவன் நினைத்த அர்த்தமும்
படித்தவன் உணர்ந்த அர்த்தமும்
ஒன்றாகும்போது தான் படைப்பு
வெற்றி பெறுகிறது.

காதல் தேசத்தில் வார்த்தைகளை விடவும்
மௌனமே ஆயிரம் அர்த்தங்களைக் கொடுக்கும்.
நேர்மை உழைப்பு தியாகம் பாசம்
இந்த வார்த்தைகளெல்லாம்
அர்த்தம் மாறி கிடக்கும் அவல பொழுதில்தான்
நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## பேனா

நிப்பின் கூர்மை
எப்போதும் மழுங்காது

எழுத எழுத
ஊறிக்கொண்டே இருக்கும் உண்மை.

தவறுகளை அடிக்கோடிட்டு
அடிக்கடி காட்டும்

சும்மாயிருக்கும்
சொற்களை
வைர கற்களாய்
வார்க்கும்.

சட்டைப்பையில்
செருகிகொண்டால்
கம்பீரம் கூடும்

கையெழுத்திட அடிக்கடியும்
கவியெழுத்து எழுத
எப்போதாவதும்
பயன்படும் பேனா
சமூகத்தின் நா...

# வெந்த பெண்கள்

அடுக்களையின் வெப்பத்தில்
அடைந்து வெந்து
அன்றாடம் அவமதிப்பால்
மனசில் வெந்து
துடுக்கான சமூகத்தின்
கொடுக்கு நாக்குச்
சூட்டினிலே வெந்து வெந்து
நொந்தவள் நான் வந்துள்ளேன்.

சந்தம் சொல்ல
தலையாட்டிப் பொம்மைகளாய்த்
தாய்குலத்தை ஆக்கிவைத்து
விளையாட்டுக் காட்டிவரும்
சமூகத்தை விசாரிப்போம்

ஓ... நீங்கள் புத்திசாலிகள்
பலநூற்றாண்டுகளாய் எம்
பகல்களையும் இருட்டாக்கினீர்கள்.

ஆப்பிள் தருவதாய் அறிவித்தீர்கள்
கத்தியை மட்டுமே காட்டினீர்கள்.

எமக்கு வாங்கி தந்த
பல வண்ண புடவைகளையே
எமது உரிமைகளின் மீது
போர்த்தப்படும்
சவத்துணி ஆக்கினீர்கள்

அந்தமான் தீவிற்குத்தான்
அழைத்துப் போனீர்கள்
உல்லாசப் பயணம் போவதாய்
ஊருக்குச் சொன்னீர்கள்.

முளைத்த நாள் தொடங்கி எங்களை
இளைத்தவர்களாகவே நடத்தினீர்கள்

ஆண்கள் பிறந்தால் இனிப்பையும்
பெண்கள் பிறந்தால் சலிப்பையும்
பரிமாறிகொள்வதே இங்கு
வழக்கமாய் இருக்கிறது.

பாரதீ... இந்த தேசத்துத் தீயில்
நீ சொன்னது மாதிரி
நந்தலாலாக்கள் அல்ல,
வெந்த லீலாக்களே அதிகம்.

## வெள்ளம்

வெக்கையில்
மனம் வெதும்பி
சொட்டு மழைக்கு
ஏங்கினேன்.

வெள்ளமாய்ப் பிரவகித்து
துரும்பாய் அடித்துச் சென்றாய்
என்னை நீ.

## நில் கவனி செல்

அது உன் வாகனம் தானே
ஏன் எமனின் வாகனம் போல் இயக்குகிறாய்?
வரிசையில் நிற்கும் வண்டிகள் தாண்டி
இண்டு இடுக்குகளில் முண்டியடித்து
சாகச பயணம் செய்யத் துடிக்கிறாய்.
அது சாக பயணமாய் ஆவது நன்றா?

எதிர்வரும் வண்டிகள் குறித்து கவலையில்லை
திரும்பும் திசை குறித்து தெளிவில்லை
விதிகளெல்லாம் மீறுவதற்கென்றே
விளங்கிக் கொள்கிறாய்
தெரிந்துகொள்.

விபத்துக்கு ஒரு விண்ணப்பம் போடுகிறாய்
குடித்துவிட்டு வண்டி ஓட்டி
இடித்துவிட்டு விழிக்கிறாய்
செல் பேசியபடி செல்கிறாய்
இன்கம்மிங் இலவசமாய் இருக்கலாம்
அவுட்கோயிங்கிற்கு அவசரம் ஏன்?

சாலை பயணம் முக்கியம் தான்
அதைவிட முக்கியம் நாளைய பயணம்.
எதிலும் அவசரம் தவிர்
வாழ்க்கை ஒரு தேநீர் கோப்பை
ஒவ்வொரு சொட்டாய் உறிஞ்சி ரசி
ஒரு கதை தெரியுமா?

கண்ணதாசன் ஒருமுறை
மலேசியா போனார்

இலக்கிய கூட்டத்திற்கு நேரமாகிவிட்டதென
இயக்கிய டிரைவர் விரைந்து பறந்தார்.
சிரித்தபடியே கவிஞர் சொன்னார்
'இந்தக் கூட்டத்திற்கு
பத்து நிமிடம் தாமதமாய் போகலாம்;
ஆனால் பத்து வருடம் முன்பே போய்விடக் கூடாது'

இனியேனும் விழி
சாலை விதிகள் மதி
வண்டிப் பயணம் மட்டுமல்ல
வாழ்க்கைப் பயணமும் சுகமாகட்டும்!

## சுமை

தூக்கித்தான் எறிகிறார்கள்
புத்தகப் பையை
பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்
எல்லாப் பிள்ளைகளும்.

# தொலைந்து போனவைகள்

ஏர் கூலர், எல்சிடி டிவி,
ஏசி, பல்சர்
மாடி வீடு, மடிக்கணினி
அலைபேசி, தொலைபேசி
அழகழகாய் மகிழுந்து
வசதிகள் எல்லாம்
வந்து சேர்ந்திருக்கின்றன
பண்பாடு தான்
இங்கு பறிபோயிருக்கிறது.

கைகள் நிறைய காற்றைப்
பொத்திவைத்துக் கொண்டு
வேப்பமரங்கள் நின்ற
வீதிகளில் எந்நேரமும்
புகையும் மெகா சுருட்டுகள் போல்
ஆலைகளின் புகைக் கூண்டுகள்
சுமைதாங்கி கற்கள் இருந்த
இடங்களில் எடை பார்க்கும் இயந்திரங்கள்.

சிகரெட் அட்டை பிரேமில் சிவப்பு காகிதம் ஒட்டி
ரப்பர் கட்டி செய்யப்பட்ட திருவிழா கண்ணாடிகள்.
பாசிங்க்ஷோ, சார்மினார், சிசர் என பையன்களின்
பைகளில் சிகரெட் அட்டைகள்
அம்மை தழும்பேறிய முகம் போல்
ஆக்கர் வாங்கிய பம்பரங்கள்
கற்றாழை முள் அச்சாக
பக்காவாய் சுற்றிய பனையோலைக் காற்றாடிகள்.
குறையும் ஆளுக்கு கிச்சான் கொடுத்து
ஆடப்பட்ட கிளிதட்டுகள்.
பருந்துகளோடு போட்டிப் போட்டுப்
பறந்த பட்டங்கள்.

சீசனுக்கு ஒரு
விளையாட்டை விளையாடியவர்களின்
பேரர்களுக்கு சமமான வீரர்கள்
இப்போது லேப்டாப்தான்.

பச்சை பெல்ட்டுகளில் இருந்து
மடிக்கப்பட்ட நோட்டுகளை
எடுத்துச் செலவழித்தவர்கள் ஏடிஎம்
கார்டுகளோடுதான் இப்பொழுது திரிகிறார்கள்.

பழங்களும் இனிப்புகளும் வாங்கிப்
படுக்கையில் கிடந்த பெருசுகளை
நலம் விசாரித்த காலம்போய்
எஸ்எம்எஸ்களோடு முடிந்து விடுகிறது
எழவு விசாரணை
அலைந்து அலைந்து கரன்சி சேர்க்கும் மனிதா...
தொலைந்தவை குறித்து விசாரணை நடத்து.

## பாட்டுப் பாட்டன்

கற்பனையின் ஊற்று
கவிதா சாகரம்
பாட்டுப் பாட்டன்

நேர்முனை எதிர்முனை
இவற்றை இணைப்பதால் மட்டுமல்ல
பேனா முனையிலிருந்தும் மின்சாரம் பிறக்கும்
என்பதை நிரூபித்தவன்.

செல்லம்மாளின் புருஷன்
சிந்தனைகளின் அரசன்
புதுக்கவிதைக்கு கால்கோள் விழா செய்தவன்
பல கவி நட்சத்திரங்களைக் கொண்ட பால்வீதி
வெகுநாளாய் அந்நியப்பட்டுக்கிடந்த கவிதையை
அனைவரின் மனசிலும் முடிந்துவிட்டவன்
அநீதிகளை எதிர்க்க இரண்டு குறுவாள்களை
உதடுகளின் மீது உலவவிட்டவன்
முற்போக்கு முகாமின் முகம்.

# வரலாற்றின் கல்வெட்டுகள்

புதுவைக் குயிலே!
எங்கள் புதுமைக் குயிலே!
புவியின் செவிகளே புல்லரிக்கும்படி
கவிகள் சொன்ன
புரட்சிக் குயிலே!
ஆசான் பாரதி அமைத்த பாதையில்
தாசன் நீயும்
கவித்தேர் இழுத்தாய் - அதில்
வடமாகவேணும் இடம்பிடிக்க
தமிழின்
அத்துணை வார்த்தைகளுமே
அடம்பிடித்தன.
உன் பாட்டுச்சாட்டை சமூகத்தின்
தடித்த தோலின்மீது
விழுந்த பின்னால்தான்
இறக்கும்வரை உறக்கம்
என்றிருந்த சமூகம்
விழித்தது பின்னர் செழித்தது.
தளிர்களின் அழகிலேயே
தடுமாறி கிடந்திடாமல்
வேர்களைப் பற்றியும் விசாரித்தவனே!
பூக்களின் வாசத்தில்
வேர்வை மனிதர்களின்
ரத்தத்தின் வாசத்தை அடையாளம் கண்ட
அற்புத கவிஞனே!
உன் சொற்செட்டுகள்
வரலாற்றின் கல்வெட்டுகள்.

# இன்னொரு சுதந்திரப் போர் நடத்து

கட்டம் போட்ட சட்டை போட்ட பாரதி பேரா!
நாட்டில் நடக்குது இன்று எல்லாம் தாறு மாறா.
கண்களில் கண்களில் தீ ஏற்று!
கவிஞன் சொன்னதை நிறைவேற்று.
கிளைவின் தலைமையில் வந்த
கம்பெனி தேசத்தைச் சீரழிக்க
கிளர்ந்தான் பாரதி ஊரை அழைத்தான்
தீமை தனை எதிர்க்க.

ஆயிரமாக கம்பெனி வந்தால்
தேசம் என்னாகும்?
சில்லறை வணிகர் கல்லறை தேடி
அழும் நிலை உண்டாகும்.
கோடிக் கணக்கில் விளம்பரம் செய்து
வருவான் பகாசுரன்
தெருக் கோடிக் கடைக்குப் பூட்டுப் போட்டு
அழுவான் நம் தோழன்.

கோக், பெப்சி உள்ளே வந்தபின்
குண்டுசோடாக்கள் போனது போல்
அன்னிய வர்த்தகம் வந்துவிட்டால் - நம்
அன்னையின் சுருக்குப் பை பறி போகும்.

வஉசி ஓட்டினான் சுதேசி கப்பல்
வரவேற்பில்லை அவனுக்கு.
வாடகை குறைத்தான் ஆங்கிலேயன்
ஜனங்கள் உதவினார் தவறுக்கு.
இன்னும் ஒரு முறை இழப்பதுவோ?
கண்ணீர்க் கடலில் மிதப்பதுவோ?

கோடி கணக்கில் முதல் போட்டு
வருவான் வால் மார்ட்டு
மோதி ஜெயிக்க முடியாமல்
நம்மவர் அழுவார் நடுரோட்டில்

கொள்ளையாய் கிடைக்கும் லாபம் என்று
பசப்புரை செய்வோரே
தோட்டை அழித்து மூக்குத்தி வாங்கிட
துணிபவர் தாய் மாரோ?

உதிரிகளாக உள்ளவரை
எதிரிகள் வெல்வர் நீ பாரு
ஒன்றாய் நின்றவர் வென்று விடுவார்
இதுதான் வரலாறு
ஊரைத் திரட்டு
இன்னொரு சுதந்திரப் போர் நடத்து.

# விசாரணை

பாசி படிந்து
கிடக்கிறது
உன் ஊருணி.

எந்தப் புளி கொண்டு
விளக்கியெடுப்பாய்
உன் மனசை?

சமூகத்தின்
துயர நெடி படியாமல்
பார்த்துக் கொள்கிறாய்
மூக்கை.

அதெப்படி?
அநியாயங்கள் நிகழ்கையில்
அனிச்சைச் செயலாய்
மூடிக் கொள்கின்றன
உன் விழிகள்.

உன் செவிகளுக்குச்
சொல்லி வை
உதவி கேட்கும்
உண்டியல் சத்தம்
இடியோசையல்ல.

வரும் மார்ச் ஏழில்
நாற்பத்திரெண்டாவது
பிறந்த நாள் எனப்
பெருமிதம் கொள்கிறாய்
எல்லாம் சரி, இதுவரை
எத்தனை நாள்
வாழ்ந்திருக்கிறாய்?

## எழுக தீ

ஆதிநாள் முதலாய்
ஆண்டுக்கொரு முறை
மூட்டப்படுகிற போகி நெருப்பே!

கிழிந்த பாய்
நைந்த தலையணை
உடைந்த பொம்மைகள்
உதவாப் பொருட்கள்
பழைய கடிதங்கள்
பலவித குப்பைகள்
எரித்து எரித்து
சலித்த நெருப்பே!

உன்மேல் படிந்த
சாம்பல் ஊதி
ஊழிதீயாய்
உடனே மாறு.
எட்டு திசையிலும் பற்றிப் பரவு.

உயிர் குடிக்கும் பசி
ஊழல் வரும் வழி
வெறி சுமந்த மதம்
சண்டைக்கு இழுக்கும் ஜாதி
மனிதம் கெடுக்கும் நெறி
இவற்றின் சாம்பலும்
மிஞ்சாமல்
எரித்து போடு.

## தகவல்

சிங்கப்பல் தெரியச் சிரித்தபடி
“வாங்க மாமா” என்றான் பாலு.
கூட்டும் பணியைப் பாதியில் நிறுத்தி
“வீட்டில் நலமா?” என்றாள் திவ்யா.
“காப்பி சாப்பிடுங்கண்ணே”

ஈரம் சொட்டும் தலையுடன்
டம்ளரை நீட்டினாள்
நண்பனின் மனைவி.
‘இந்த நாள் இனிய நாள்’ என்று
தொலைக்காட்சியில்
சொல்லிக் கொண்டிருந்தார் தென்கச்சி.

“சொல்லுங்கண்ணே...”

நண்பன் மனைவி என்னைப் பார்க்க
டூருக்குப் போன அவள் புருசன்
ஆக்சிடென்டில் செத்ததாய்ப்
போன் வந்ததை
எப்படிச் சொல்ல அவளிடம்?

## சதீஷ்... உனக்கு ஒரு சபாஷ்...

தத்துவாச்சேரி தந்த தங்க மகனே
சாதாரணமானவர்களாலும்
சாதிக்க முடியும் என்பதற்கு
உதாரணம் ஆனவனே

149 கிலோ எடையை
நீ தூக்கி உயர்த்தினாய்
தமிழர்களின் எடையோ
ஆயிரம் கிலோ அதிகரித்திருக்கிறது

உணவூட்டிய போதெல்லாம்
உணர்வூட்டினாராம் உன் அப்பா
புழுதிக் கட்டிலில் ஆடித் திரியும்
பல பேருக்கு நீதான் ஆதர்சம் இப்போ

காமன்வெல்த் உனக்கொரு தொடக்கம்தான்
எட்டுத்திக்கிலும் கை நீட்டி
வெற்றிமாலைக்குப் பூப்பறி
ஒலிம்பிக் உன் பெயரைப் பதக்கப்பட்டியலில்
சேர்க்க உனது இன்சியலை கேட்டுக்கொண்டிருப்பதாக
கூகுளில் உலவுகிறது ஒரு தகவல்.

# எண்ணதாசன்

மெட்டுக்குப் பாடினார்கள்
துட்டுக்குப் பாடினார்கள்
கைதட்டுக்குப் பாடினார்கள்
அவன் பாட்டுக்குப் பாடிக்கொண்டிருந்தான்
அனைத்துமே கிடைத்தது.

அவன் வாய் தமிழர்களின் தாய்
அவன் தாலாட்டு கேட்டு
உறக்கமல்ல கிறக்கம் வந்தது
அத்திக்காய் காய் காய்
அவன் வார்த்தைகள் கேட்டு சொக்குவாய்
எதுவும் பேசமுடியாமல் திக்குவாய்
எல்லோரும் வலை விரித்தால்
வெறும் மீன்கள்தான் விழும்
அவன் கலை விரித்தான்
விண்மீன்களே வந்து விழுந்தன.

எல்லோரும் பார்த்த வானம்
எல்லோரும் பார்த்த மேகம்
எல்லோரும் வளர்த்த சோகம்
கண்ணதாசன் சொன்னால் எல்லாமே புதுசுதான்.
அவன் பேனா முள்ளில் சிக்கிட
ஆசைப்பட்டு உச்சத்து நட்சத்திரங்கள்
ஊர்வலம் வந்தன
அவன் காலத்தில் எல்லாம்
திருமணம் நடத்த தேவையானவை நான்கு;
1. மணமகன் 2. மணமகள்
3. தாலி 4. கண்ணதாசன் பாடல்
‘வாராய் என் தோழி வாராயோ...’
ஒலிக்காத மண்டபம் கண்டாயோ?
கண்ணன் புல்லாங்குழல் வாசித்தான்
அவன் தாசன் மைகுழலாள்
வாசிக்க வைத்தான்.

## சூட்சுமம்

உயரே உயரே யாரும் போகலாம்
உழைப்பே அதற்கு ஆதாரம்
எதிரிகள் நம்மை இயக்குகின்றார்கள்
என்றும் இல்லை சேதாரம்.

ஓடும் வேளையில் முட்டி வலித்தால்
ஒரு கோப்பையை கண்களில் பதிய விடு
வாடும் வேளை மனசின் தொட்டியில்
வண்ண மலர்ச்செடி பதியனிடு.

முயற்சி செய்கையில் முதுகுக்குப் பின்னே
கேலிகள் செய்வார் பலர் கூடி
முயற்சியில் வெற்றியை பெற்றதன் பின்னே
கைகள் குலுக்குவார் அவர் தேடி.

பாலையில் அலைந்து தேடிடுவோர்க்கே
சோலை தண்ணீர் பரிசு வரும்
வேலை முடிக்கும் வேளை வரைக்கும்
வேகம் கொண்டால் வெற்றி வரும்.

# நீலம்

ஆகாயம் ஆழக்கடல்
பேனா மை
நீலம் ஜொலிக்குமிடம்
சொன்னால் நீளும்
சுன்னச்சுவர் பளபளக்க
வேட்டி சட்டை இன்னும்
வெளுப்பாக்க
புதுபுது விதமாய் எடுக்கும்
புகைப்படத்திற்குப்
பின்னணியாக
வாழ்வின் நிமிடங்களை
அர்த்தப்படுத்தியபடி
சீராய் நகரும்
பள்ளிக்கூட பிள்ளைகளின்
கனவுகள் நிரப்பிய கால்சட்டையாக
காதல் அன்பு பாசம்
கண்ணீர் சிரிப்பு வாழ்த்து எல்லாம்
உள்ளங்கைகளில் சுமந்த
அடர்ந்த பூங்காவின்
கன்னத்து மச்சமாய்
அழகாய் சிரிக்கும் பூவாக.
நீலம்தான் நிச்சயம் தேவை
நிலம் முழுக்கவும்
நீலம் செய்கிறது ஜாலம்.

## ஆறு என்பது...

இளம்பெண்ணின் விரிந்த கூந்தல்போல்
பரந்து படர்ந்தாலும்
முதிர்கன்னியின் சுருங்கிய தேகம்போல்
ஒடுங்கி ஓடினாலும்
ஆறு எப்போதுமே அழகுதான்.

ஆறு
சலவைத் தொழிலாளர்களின்
சம்பள பூமி
வீர இளைஞர்களின்
விளையாட்டு மைதானம்.

ஈரம் சுமந்த இயற்கை குழாய்.
கவிஞர்களின் சொர்க்கம்.
காதலர்களின் மடி.
ஆனால்
இப்போதோ
அருகிவரும் அற்புதம்!

## ஐம்பதான ஆயுத கிடங்கே...

விடியல்தோறும் வீட்டுக்கு வந்து
கதவைத் தட்டும் கதிரே கதிரே
ஐம்பதாகியும் அலுக்கவே இல்லை
அடுத்தது உன் போல் ருசிக்கவே இல்லை.

முடியும் இருட்டு என்பதை சொல்வாய்
முஷ்டிகள் உயரும் சரித்திரம் சொல்வாய்
இடியும் மின்னலும் மிரட்டும் வேளையும்
இயக்கம் ஜெயிக்கும் என்பதைச் சொல்வாய்.

தலைவர்கள் அறிக்கை தைரியம் கொடுக்கும்
தகவல்கள் மூளையின் மடிப்பை முடுக்கும்
கலைகளைச் சோலையும் கதிரும் வளர்க்கும்
கையில் இருந்தாலே கௌரவம் கிடைக்கும்.

ஐம்பதான ஆயுத கிடங்கே
ஆயிரம் செய்திகள் தாங்கிய முடங்கலே
உழைப்பவர் வியர்வையில் உருவாகும் கதிரே
ஊரே சிவக்க உன் பணி தொடர்க.

## சம்பவங்கள்

இருள் நழுவும்
விடிகாலையில்
டீக்கடை மாஸ்டரும்
நின்றபடி தூங்க
புன்னகை பொலிய
செய்தி வாசிக்கிறாள்
சன் நியூஸ் பெண்.

அலுவலகத்திலிருந்து
விடுபட்ட துள்ளலோடு
எல்லா டூவீலர்களும்
எகிறிப் பறக்க
மினி லாரியில்
அமர்ந்தபடி
"உனக்காக
எல்லாம் உனக்காக"
பாடிக்கொண்டிருக்கிறார்கள்
பார்வையிழந்த
இசைக் கலைஞர்கள்.

எட்டரை மணிக்கு
கட்டாயம் பேசு
ஜாடியில் ஊறப்போட்ட
வாக்குறுதி நம்பி
ஸ்விட்ச் ஆஃப்
செய்யப்பட்ட
அரசியல் வாதியின்
செல்லுக்கு
தொடர்பு கொண்டபடியே
இருக்கிறான்
வேலையற்ற இளைஞன்.

# அறிவிப்‘பூக்’கள்

விளம்பர அறிவிப்புகள்
வித்தியாசமானவை.

கடன் வாங்கியே
வாழ்க்கை கழிக்கும்
மக்களைப் பார்த்து
அதை வாங்கு இதை வாங்கு
என நச்சரிக்கும்.

விளம்பர வெளிச்சத்தில்
இருட்டும் கூட
விளக்காக விளங்கப்படும்.

விளம்பர அறிவிப்புகளுக்கு
குறிக்கோள் மூன்று
லாபம்.
மேலும் லாபம்...
மேலும் மேலும் லாபம்.

விளம்பரங்கள் சொல்லும்
விசயங்களைக் கேட்டால்
தயாரிப்பாளருக்கே கூட
பொருளைத்
தானே வைத்துக்கொள்ள தோன்றும்.

வழுக்கை தடுக்க
அழைக்கும் விளம்பரம்
பர்சை மொட்டையடிக்கும்.

விலை குறைக்கப்பட்ட
பொருட்களின் விளம்பரங்கள்
கடனை அதிகரிக்கும்.

விளம்பரங்கள் பார்த்து
பொருட்களை வாங்கி
அவதிப்படுகையில்
தலைவலி மாத்திரை
விளம்பரம்
தாராளமாய் உதவும்.

விளம்பர அறிவிப்புகள்
நம் காதுகளில்
சுற்றப்படும்
அறிவிப்பூக்கள்.

## பேசுக அவர் புகழ்!

ஈரோட்டின் தார்ரோடு
கருப்பானதேன்?
பெரியார் நடந்த
பாதை என்பதாலா?
வண்டிப்பயணம் சுகமாக
தார்ரோடு உதவும்.
வாழ்க்கைப் பயணம் சுகமாக
ஈரோடு உதவும்.

கருப்புக்கண்ணாடி
போட்டு நடந்தால்
சூரிய வெப்பம் சுடாது
கருப்பின் பின்னாடி
நாடு நடந்தால்
மதவெறி நெருப்பு சுடாது.

கருப்பு வளையம் போட்டால்
சுகப்பிரசவம் நடக்குமாம்.
இந்தக் கருப்பு வளையம்
விரிவானால்
யுகப்பிரசவம் நடக்கும்.
கருப்பு, சிவப்பு, வெளுப்பு
எல்லா நிறங்களுக்கும் ஜொலிப்பு
இதன் பின்னணியில்தான்
கருத்த மேனியை உற்றுப்பார்!
சிவப்பணுக்கள் சிரிக்கும்.

அழகான மேனியில் கருப்பு மச்சம்,
சுவையான பழமாய்
கருப்பு திராட்சை,
எழுதிப் பழக கருப்பு சிலேட்டு,
நனையாமல் காக்க
கருப்புக்குடை,
நாடு செழிக்க கருப்பில் விடை.

பெரியார் நூற்றியிருபத்தைந்து
பேசுக! அவர் புகழ் மகிழ்ந்து
தந்தை பெரியார்,
தம் பிள்ளைகளுக்கு
சொத்துக்களை அல்ல
அறிவுமுத்துக்களைச் சேர்த்தவர்.

மூட நம்பிக்கையின்
முதுகில் அடித்து
பகுத்தறிவைப் பரப்பியவர்
அடிமைக்கு அடிமையாய்
பெண்களை நினைக்கும்
அவமானத்தை
அடியோடு எதிர்த்தவர்.

தலைக்கு வெளியே
நரைத்திருந்தாலும்
உள்ளுக்குள் இளமையாய்
உலா வந்தவர்
பெரியார் அவர் போல்
இனியார்?
காலம் நம்மில்
கண்டு தரட்டும்
அதற்கு இவ்விழா
செண்டு தரட்டும்.

# தமிழா! தமிழா!

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற
பூங்குன்றனின் பேரனே!
‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’
என்று பேசியவனின் வாரிசே!
எது தேர்வாய் நீ?

வெட்டும் கத்தரிக்கோல்
இணைக்கும் ஊசி
எது வரைவாய் உன் திரையில்?
வசீகரிக்கும் வானவில்
வடியும் இரத்தக் கோடு
எது இருக்கும் உன் வயலில்?
பறக்கும் பச்சைக் கிளிகள்!
சிதைக்கும் வெட்டுக் கிளிகள்!
சுற்றி உற்றுப் பார்.

கோவிலிலிருந்து புறப்படும் புறா
மசூதியின் மடியில் அமர்கிறது
சர்ச்சின் ஜன்னலில் இளைப்பாறி
அடுத்த நகர்வுக்கு வரைபடம்
தயாரிக்கிறது
புறாவிற்கே புரிகிறதே
உன் கருவூலம் கவனி.

பாரதியின் பேனா
அவன் தாசன் கண்ணாடி
பட்டுக்கோட்டை சட்டை
பெரியாரின் கைத்தடி
கோட்சேயின் குண்டா
கொண்டு வருவாய்?
தமிழா தமிழா எடை போடு
தக்கவர் பின்னால் நடை போடு!

# சாதனைத் திருநாள்

ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநீதி
என்று அழுத்திச் சொன்ன ஒரு தேதி
எட்டு வைத்து எட்டு வைத்து
எழுச்சிகொண்ட பெண்ணினம்
தனக்கான வானத்தைத் தொட்டுவிட்ட ஒரு தினம்!

உழைக்கும் மகளிரின்
உரிமைச் சங்கு!
அடிமை இருட்டை
விரட்டிய கங்கு!
செங்கல் சூளையில் வேலை பார்த்தாலும்
ஏசி ஐடி -யில் வேலை பார்த்தாலும்
கடைசி வரிசையில் பெண்கள்
என்பதை மாற்றிட வந்த மைல் கல்!

பனை ஓலை விசிறி
சீலிங் பேன்
ஏர் கூலர்
ஸ்ப்லிட் ஏசி
எத்தனையோ மாற்றம் இங்கு வந்தாலும்
பெண்களின் மனவெக்கை மட்டும்
மாறவே இல்லை!

அழுவதும் தொழுவதும் ஒரு காலம்
அடிமையாய்க் கடந்தது ஒரு காலம்
ஆணுக்கு பெண் நிகர் என்றே
எழுந்து நடப்பது வருங்காலம்
மார்ச் என்றாலும்
எட்டு என்றாலும்
நடப்பதைக் குறிக்கும்
மார்ச் 8-ம் பெண்கள் முன்னேற்றப் பாதையில்
நடப்பதைக் குறிக்கும்!

## மாற்றம்

பளபளக்கும் வெள்ளிக்கிண்ணம் நிறைய
நெய் வழியும்
சர்க்கரை பொங்கலை நிரப்பி
வெள்ளிக்கிழமை தோறும் தருவார்
எதிர்வீட்டு ராமானுஜ அய்யங்கார்.

பேப்பர்கூடை நிறையவும்
குண்டு மல்லிகைப் பூக்களைக்
கொண்டு வந்து கொடுப்பார்
அடுத்த தெரு மாலதி அக்கா.

'குழம்பு வையுங்க' என்ற கட்டளையோடு
நாக்கு இல்லாத பாம்புகளாய் இருக்கும்
முருங்கை காய்களை
ஈரத்துணியில் சுற்றி
முகம் முழுக்க மகிழ்ச்சியோடு
தருவார் கோட்டகொல்லை நாச்சியம்மை.

'உப்பையெல்லாம் காசுக்கு விற்பதாவது
ஒரு படி எடுத்துக்கோங்க' என்று
கடைவாசலில் இருக்கும் மூட்டையை
காட்டுவார் மளிகைக் கடை அண்ணாச்சி.

இன்னொரு வங்கியின் ஏடிஎம் -மில்
பணம் எடுத்து விட்டதாக
இருபது ருபாய் கழித்துக் கொண்டதாக
எஸ்எம்எஸ் தான் வருகிறது இப்போது.

# இளைய தமிழா

தை தை என்றே நீ ஆடு
தமிழா மகிழ்ந்து கொண்டாடு
ஈரம் வீரம் நம் பண்பாடு
இழந்ததை மீட்டோம் பண் பாடு

இதுவரை வந்தது எத்தனை தை?
இத்தை தைத்தது இதயத்தை
கப்பிக்கிடந்த வருத்தத்தை
களத்தில் துடைத்து வந்த தை

காலம் வரைந்த கடிதத்தை
கண்டு தந்தது இந்தத் தை
ஞாலம் வியக்கும் மாற்றத்தை
தந்து பார்வையை மாற்றும் தை

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
வார்த்தையில் கண்ட முழக்கத்தை
வாழ்க்கையில் கொண்டு வந்த தை

அலைகள் புரளும் மெரினாவில்
இளம்தலை திரண்ட வரலாறு
கலைகள் உரிமைகள் மீட்டெடுக்க
களத்தில் குதித்தது காட்டாறு

சத்தியம் வென்ற சமரினிலே
சமமாய்க் கைகள் கோர்த்தவர்கள்

மூவாயிரம் ஆண்டு மூத்தவர்கள்
முத்தமிழ்ப் பெருமை காத்தவர்கள்
வலையில் புழங்கிய இளையபடை
வந்ததும் தகர்ந்தது வந்த தடை
இளையதமிழா என் வணக்கம்
இனியும் செயல்படு மண் மணக்கும்!

# வேண்டுவன

இரு விழி உருட்டி
எல்லாம் பார்த்த
இறுமாப்புடன்
இருக்கும் உலகமே...

என் பிரதியேகச் சேகரிப்பில் வைக்க
இவை தேவை.

உன் கருவூலத்திலிருந்து அனுப்பி வை.

காதலியைத் தழுவும்
இருபத்துமூன்றாவது வயதில்
தேச நலனுக்காய்
மரணத்தைத் தழுவிய
பகத்சிங்கின் கழுத்தை இறுக்கிய
கயிற்றின் ஒரு பிரி

வறுமையைச் செரித்து
வாழ்க்கையைப் புதுக்கி
நெருப்புக் கவிதைகள்
எழுதிக் குவித்த
பாரதியின் கற்றை
மீசையிலிருந்து
ஒற்றை முடி

பசித்துக் கிடந்தோர்
புசித்து ருசிக்க
அணையா அடுப்பைப்
பற்ற வைத்த
வாழ்க்கைச் சித்தர்
வள்ளலாரின்
இடுப்பு வேட்டியிலிருந்து
ஓர் இழை

கேட்டாரைப் பிணிக்கும்
அடுக்கு மொழி
உதிரிகளாய்க் கிடந்தவரை
ஒன்று சேர்த்து
எதிரிகளை வீழ்த்தும்
போர்த் தந்திரம்
இவற்றால்
அண்ணாந்து பார்க்க வைத்த
காஞ்சிக் களஞ்சியம் அண்ணாவின்
பொடி டப்பியிலிருந்து
ஒரு சிட்டிகை

அப்புறம்
காந்தியின் கண்ணாடி
பெரியாரின் கைத்தடி
அம்பேத்கர் கோட்டு
மார்க்சின் மந்திரப் புன்னகை
இவை போதும் இப்போது
பிற தரக் கேட்பேன் பிறகு.

# எக்காலம்

இட்லி தோசைகளின்
நெடி அடிக்கும் நொடிக்கிடையே
இசைமழையில் நனைந்தபடி
இளைப்பாறல் எக்காலம்?

கோடிகளைக் குவித்தவரைக்
கும்பிடும் திருக்கூட்டம்
அறிவார்ந்தோர் பின்னாலே
அலைமோதல் எக்காலம்?

பொய்ப்பூவை உதிர்ப்போரின்
கை பற்றிக் குலுக்காமல்
உள் மனசில் பேசுபவர்
உறவு கொள்ளல் எக்காலம்?

குறுக்கு வழி வெற்றிகளைக்
கொண்டாடும் தமிழர் இனம்
உண்மையையும் வியர்வையையும்
உணர்ந்திடுதல் எக்காலம்?

கருப்பு வெள்ளைத்தாள் எனவே
கவிதையினைக் காண்பவர்கள்
புதுயுகத்தின் குரலென்று
புரிந்துக்கொள்ளல் எக்காலம்?

# வினையும்
# எதிர்வினையும்

ஒரு துளி விரி
பெருங்கடல் வரும்

இருள் கொஞ்சம் சகி
முடிவில் புது விடியல்

தமிழ் தினம் துதி
தலைமுறைக்கே நிதி

வேர்வைகள் விதை
வெற்றிகள் குவி

மரம் செடி நடு
மழைக் குறி அறி

பறையிசை ருசி
பரவசம் உணர்

பல கவி படி
பார்வையில் ஒளி

தீத்துண்டு எடு
தீமை மேல் விடு

மனிதனை மதி
மதிப்புறும் நொடி

கரம் பற்றப் பழகு
வரமாகும் வாழ்வு.

## யார் இவன்?

நானோர் ரசிகன்
நல்லன செய்பவன்
ஊர் தோறும் சுற்றி
உறவுகள் வளர்ப்பவன்
பார்வையை விரிப்பவன்
வேர்வையை மதிப்பவன்.

தீர்வை நோக்கிய
திசையில் நடப்பவன்
எடுத்த காரியம்
முடித்திட முயல்வேன்
அடுத்தவர்க்குதவிட
ஆர்வமாய் அலைவேன்.

அழகாய் ஆடைகள்
அணியப் பிடிக்கும்
அறிவுச் செய்திகள்
அலசப் பிடிக்கும்
புத்தக வாசனை
பிடிக்கப் பிடிக்கும்.

வித்தகக் கவிதைகள்
வடிக்கப் பிடிக்கும்
நேச மழையில்
நனையப் பிடிக்கும்
நேர்த்தியாய் எதையும்
செய்யப் பிடிக்கும்.

நகைச்சுவை வெடிகள்
வெடிக்கப் பிடிக்கும்
பொய்கள் குறைத்து
பூக்கப் பிடிக்கும்.

சின்னச் சின்ன
சாரல் பிடிக்கும்
சிரித்தபடியே
வாழப் பிடிக்கும்.

வெற்றியின் பாடம்
தோல்வியின் ஞானம்
இரண்டும் சமமாய்
ஏற்கப் பிடிக்கும்
கைகள் குலுக்கிக்
கலைந்து விடாமல்
மனசுகள் குலுக்கி
மகிழப் பிடிக்கும்
நானோர் ரசிகன்
நல்லன செய்பவன்.

## உரசல்

தலை கொழுத்த தீக்குச்சி
வற்றியதோர் வத்திப்பெட்டி
உரசும் நொடியில்
உண்டாகும் தீ.

# வாழ்வதற்கே போராட்டம்

தலைமேல குட்டு வச்சா
தாங்கிக்கிட்டு வாழ்ந்திடலாம்
அடிமடியில் இடிவிழுந்தா
ஆருதான் பொறுப்பாக?

உச்சத்தத் தொட்ட கிளி
உசுரத்தான் விட்டது ஏன்?
சிறகுகளக் கருக்கிக்கிட்டு
சிதிலமாகிப் போனதுஏன்?

கனாக்கண்ட வானம் ஒண்ணு
கைகூடவில்லையிண்ணு
பொண்ணொருத்தி நொந்த கதை
பொன்கருத்துப் போன கதை

பரிட்சையில பெயிலாகி
பலபேரு செத்ததுண்டு
ஜெயிச்ச பொண்ணு மரிச்ச கதை
ஜெகத்துல கண்டதுண்டா?

அறிவாலே ஜெயிச்சவதான்
அரியலூரு ராசாத்தி
ஆதரிச்சி வச்சோமா
அவ உயிரைக் காப்பாத்தி

ஆத்துல சுழல் வந்து
அழிச்ச கதை கேட்டிருக்கோம்.
ஸ்டெத்துல கைநீண்டு
டெத்தாக்கி விட்டுடுச்சே?

நீட்டு என்றும் கோர்ட் என்றும்
நீட்டி முழக்கினாங்க

கட்டையில உடல் போச்சு
காப்பாத்த யாருமில்ல

பாதகத்தி சாவினிலே
பாடம் நாம் கத்துக்குவோம்
இனி புதிதாய் அனிதாக்கள்
இல்லாமல் பாத்துக்குவோம்

தற்கொலையால் தீர்வு இல்ல
தத்துவத்த ஒத்துக்குவோம்
வாழ்வதற்கே போராட்டம்
வரும் காலம் வழிகாட்டும்

அக்கினியில் மொட்டுகள
அழிச்ச கதை போதுமய்யா
உக்கிரம் கொண்டெழுந்தால்
அக்கிரமம் தீருமையா!

# சுருங்கும் இறக்கைகள்

கண்களைப் பொத்திய கனவுகள் விலக்கி
வெளியே வந்து வெளிச்சம் பார்த்தேன்
பயிற்சி பெற்ற என்.சி.சி. படை போல்
பறந்து கடந்தது பறவைக் கூட்டம்
அந்தக் கூட்டத்தின் கடைசியில்
மனப் பறவை சிறகுகள் விரித்தது

ஒவ்வொன்றாக நினைவில் வந்து
ஆனந்தம் தந்தன
பால்ய காலத்தில்
போன பயணங்கள்

ஐந்தாம் வகுப்பின்
கோடை விடுமுறையில்
கும்பகோணம்
மாமா வீட்டிற்குப் போனதில்
தொடங்கிற்று என் முதல் பயணம்.

காபி குடித்துவிட்டு அப்போது
கவிழ்த்து வைத்த
பித்தளை டபரா செட் ஒன்று
இப்போதும் என் மனசின் பரணில்
பளபளத்துக் கிடக்கிறது

அடுத்த ஆண்டு விடுமுறையின்போது
திருவாரூர் சித்தப்பா வீட்டிற்குத்
திக் விஜயம் போனோம்.

ஆழித் தேர் பின்னால் அலைந்து திரிந்ததும்
கமலாலயக் குளத்தில் கால் நனைத்ததும்
மனசில் படமாய் மாட்டிக் கிடக்குது

அடுத்தடுத்த விடுமுறைகளில்
சென்னை பெரியம்மா வீடு
மன்னை சித்தப்பா இல்லம்
நெய்வேலி அக்கா என
அனுமார் வால் போல் மிக நீண்டது
என்னைத் துவைத்துப் போட்ட
பயணங்களின் எண்ணிக்கை

மனசுக்குள் பெய்த மழையில் நனைந்து
இந்த விடுமுறைக்கு எங்கே
என மகனிடம் கேட்டேன்
“நீட் பயிற்சி வகுப்புக்கு”
பட்டென்று பதில் கிளம்பி
மனசை அறைந்தது.

இனியும் தொடரக் கூடும்
பறவைகளின் பயணம்!

# நீயும் நானும்

நானொரு வார்த்தை
நீயொரு வார்த்தை
வா
வாழ்க்கையை வார்க்கலாம்

நான் வானம்
நீ நிலா
அட்சரமாய் நட்சத்திரங்கள்

நான் பறை
நீ கை
அடிக்க அடிக்க அதிரும்

என் பேனா
உன் கைகள்
சேர்ந்து தட்டுவோம்
கவிச்சுரங்கம் திறக்கட்டும்

நீ வானவில்
நான் மேகம்
பொழிவேன்
மகிழ்ந்து நனை

நீ உழைப்பாளி
நான் சிப்பி
திறந்து பார்
எல்லாம் ஜொலிக்கும் முத்துக்கள்

நான் பீலி
நீ மனசு
வருடவே வருகிறேன்

நான் சுடர்
நீ காற்று
பற்ற வை
விரட்டுவேன் இருட்டை

நான் சந்தனக் கிண்ணம்
நீ சுட்டுவிரல்
தொட்டுவை மணக்கட்டும்

நான் சரவெடி
நீ தீக்குச்சி
உரசு ஊரே அதிரட்டும்

நான் மேளம்
நீ தாளம்
களைகட்டட்டும் கச்சேரி.

# அயிரைகள்

ஏட்டிஎம்கள் இப்போது
பூட்டிய எம்கள் ஆகிவிட்டன

பாங்குக்குள் புகுந்து
பணம் மாற்றும் போட்டியில்
வென்றவர்களுக்குப் பரிசுகள்
தரப்படுகின்றன
நல்ல மாற்றம்

முன்பெல்லாம்
சம்பாதித்த பணத்திற்கு
ஆதாரம் தர வேண்டும்
இப்போதோ அவனவன்
கணக்கில் இருக்கும்
பணமெடுக்கவே
ஆவணம் அவசியம்

மை போட்டுப்பார்த்து
உண்மை சொல்வார்கள்
அப்போது
மை தொட்டு வைத்துப்
பணம் தருகிறார்கள்
இப்போது

எப்போதும் விரித்த
வலையில் விழுவதில்லை
திமிங்கலங்கள்
பாவம்
அயிரைமீன்கள்தான்
அவதிப்படுகின்றன

பணப் புழக்கம்
என்றார்கள்

மனப்புழுக்கம்தான்
எங்கெங்கும்.

## பிரியா விடை

குழைந்த குரலால்
மனசில் நுழைந்தாய்
தபேலாவைத் தட்டி
மனசைச் சரிசெய்தாய்

நாசிக்குள் இருந்து
புறப்பட்ட உன் குரல்
நாசிக்கின் தயாரிப்பிற்கும் மயங்காதது

செம்பூக்களை மலர்த்திய பாட்டுச்செடி
உன் பாட்டால் அடகு பிடிக்கப்பட்டது
பலரின் செவி

பட்டு நெய்தவர்களுக்காகவும்
பாட்டு நெய்தவர்களுக்காகவும்
பேசிய குரலே

ஏசி அரங்கில் பாடினாலும்
தூசிபடிந்த டாட்டா ஏசியில்
அமர்ந்து பாடினாலும்
உன் பாட்டு
ஏழைகள் படும்
பாட்டையே பாடியது

நீ வியர்வையின் மகன்
அயராத உழைப்பாளி
ஊர் சுற்றிவந்த ராகம்

கள்ளமில்லாச் சிரிப்பில்
எங்கள் உள்ளங்களை வென்றாய்
எல்லோரையும் தவிக்கவிட்டு
ஏன் சென்றாய்?

உடைந்துபோன நெஞ்சோடு
பிரியாவிடை கொடுக்கிறோம்...
திருவுடையான்.

# ஆகஸ்டு 15-ம்
# அனுபவப் பாடமும்

மனிதர்களுக்கு ஆடை
தேசங்களுக்குச் சுதந்திரம்
அத்தியாவசியத் தேவை, அறிக

வாங்கி வந்ததல்ல இந்தியச் சுதந்திரம்
பொங்கி எழுந்ததினால் வந்தது...
புரிந்து வினை புரிக

சுதந்திரப் பூ மகரந்தங்களை மட்டுமல்ல
கந்தகங்களையும் சுமந்தது காண்க

காந்தியடிகளின் கைத்தடியும்
பகத்சிங்கின் தொப்பியும்
வெவ்வேறு குரலில்
விடுதலை கேட்டாலும்
மக்களை ஈர்த்தவை மனதில் கொள்க

இன்குலாப் ஜிந்தாபாத்
புரட்சியின் முழக்கம்
ரகுபதி ராகவ ராஜாராம்
ஒற்றுமை கீதம்
எல்லா நாக்குகளும்
இப்போதும் எதிரொலிக்க

மதவெறியால்
சிவந்த கண்களுக்கு மருந்து
காந்தியின் கண்ணாடி
நடுங்கும் கால்களுக்கு நம்பிக்கை
பகத்சிங்கின் மீசை

பிரிக்க நினைப்பவர்
தோற்க உழை

காவி, வெள்ளை, பச்சை
ஒன்று சேர்ந்தால்
கம்பீரமாய்ப் பறக்கும்
காற்றில் நம் கொடி

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்
இன்னும் உள்ள நம்மவர்
ஒன்றாய் உழைத்தால்
வெல்வோம்... பாடம் படி!

## வாக்கு

வாக்களி
ஜனநாயகத் திருவிழாவில்
பங்களி

வாக்கிங் போனால்
தேகத்திற்கு நல்லது
வாக்களிக்கப் போனால்
தேசத்திற்கு நல்லது

ஜனநாயகம் தந்த
உரிமை உன் ஓட்டு
அதை மதித்து
நீ நடந்து காட்டு

தெரியுமா ஒரு உண்மை
சுதந்திரத்திற்கு முன்பு
எல்லோருக்கும் இல்லை
வாக்குரிமை

சில நாடுகளில்
பல ஆண்டுகள்
வாக்குரிமை இல்லை
பெண்களுக்கு

நம் மக்களாட்சியின் அற்புதம்
அனைவருக்கும் வாக்குரிமை
ஆகவே போய் வைத்துக்கொள்
ஆட்காட்டி விரலில்
ஒரு மை

பணம் பெற்று வாக்களித்தால்
நீ விற்கிறாய்
மனசாட்சிப்படி வாக்களித்தால்
நீ நிற்கிறாய்.

## தங்கத் தமிழன்

அன்புள்ள தமிழனே மரியப்பா
அகம் மகிழச்செய்தது
உன் காரியமப்பா

துயரம் கடந்தாய் முதலில்
உயரம் கடந்தாய் இன்று
அகலக் கண் கொண்டு
பார்க்கிறது அகிலம்

எவரெஸ்டின் பக்கத்தில்
இப்போது உன் உயரம்
தங்கப் பதக்கத்தில்
தகதகக்கிறது உன் வியர்வைத்துளி

பாராலிம்பிக்கில் உன்
எதிர்பாராச் சாதனை
புழுதி மனிதர்களின்
நெற்றிக்கு வைத்த வெற்றித்திலகம்
தமிழகத்திற்குக் கட்டிய தலைப்பாகை

தொடங்கிவிட்டது கணக்கு - இனி
எல்லாத்திசையும் கிழக்கு.

# முகங்கள்

இங்கு எத்தனையோ பேருக்கு
சொந்த முகவரி உண்டு
சொந்த முகம் உண்டா?

அடுத்தவர்களின் முகத்திற்கு
ஆசைப்பட்டு ஆசைப்பட்டுச்
சொந்த முகம் இழந்த
சோகம் பலருக்கு

பேரனின் முகத்தில்
தன் முகம் தேடும் தாத்தாவின் கை
பிஞ்சு முகம் பார்த்துக்
கொஞ்சிக் கொண்டிருக்கும்

வேலைக்கு போகும் பெண்களுக்கு
அந்த முகமே அதிகாரி முகமாகி
அதட்டல் போடும்

அறிமுகக் கதாநாயகன் முகத்தோடு
தன் முகத்தைக் பொருந்த வைக்க
கைக் காசுகளை இழப்பான் இளைஞன்

வேறுவேறாய் இருந்தென்ன
வேட்டியின் கரைகள்?
அணியும் அரசியல்வாதிகளுக்கு
அமைந்திருக்கிறது அதிசயம் தான்
ஒரே மாதிரி முகம்

சிரிப்பு முகம், சிடுசிடுப்பு முகம்
பால் வடியும் முகம், பரிதாப முகம்
முகங்கள் எத்தனை முகங்கள்

ஒன்று தெரியுமா உங்களுக்கு
மனிதர்கள் நேருக்கு நேராய்ப்
பேசிகொண்டிருக்கும் போது
தெரிவதில்லை
உங்கள் முதுகுக்கு பின்னால்
அவர்கள் பேசும்போது
தெரியும் உண்மை முகம்.

# தனிவழியே போகும் மேகம்

சிந்தாத முத்து மணிகளை
எங்கு கொண்டுசெல்கின்றன
இந்த மேக ஓடங்கள்?

சொட்டும் நீர் முத்துக்களைக் கேட்டு
நாக்குகளை நீட்டி
அண்ணாந்து பார்த்திருக்கின்றன
வளரும் முளையின் பசுந்தளிர்கள்

தாகமெடுத்துத் தவித்திருக்கும்போது
தாகம் தீர்க்காமல் தனிவழியில்
போகும் மேகத்திற்கு
என்னவானது என்று
வினவிக்கொண்டன,
வெப்பம் நிறை காட்டில்
உடல் வெப்பம் தாளாமல்
வாடியிருந்த செடிகளும் கொடிகளும்

ஓடை நீரில் ஓடித்திரிந்த மீன்கள்
பாதைகள் குறுகித்
தன் பயணவெளிகள்
சிறுத்துப்போனதென்று
கலங்கிப்போய் இருந்தன

வானவெளி இன்னும்
நீலநிறமாகவே
காட்சியளிப்பதைக்கண்டு
அக்கினிப்பிளம்பாய் அடிக்கும்
உச்சிவெயிலுக்கு
உள்ளே வியர்த்து
வெளியே கனன்று கொண்டிருக்கும்

பாலைவனத்து மேடுகளும்
சற்றேனும் கருக்காதா மேகத்தின்
வெள்ளைநிற மேனி என்று
இளைப்பாறக் காத்திருக்கின்றன
பேராவல் கொண்டு

முப்போகம் விளைந்த
வயல் வெளியெல்லாம்
தப்பாமல் இப்போதும்
நெல்விளையக் காத்திருக்கும்
விவசாயிகளின்
ஏக்கப் பார்வைகளைத் தவிர்த்து
ஏளனப் பார்வையோடு
எங்கே கொண்டு சேர்க்கின்றன
இந்தச் சிந்தாத முத்துக்களை?

மேகங்களே... மேகங்களே...
சிந்தாத முத்துமணிகளை
நீங்கள் சிந்திவிட்டுப் போங்கள்
நாங்கள்
சிந்தும் நெல்மணிகளை
நிலமெங்கும் அள்ளி இரைக்கிறோம்
என்றனர் விவசாயிகள்...

# நிலமெல்லாம் பழுது

உயிராய் நினைத்து உழுத நிலம்
இப்போ
பழுதாகிக் கிடக்குது பாரு

மனசு கொதிக்கப் பறிச்ச நிலம்
இப்போ நிலமே கொதிக்குது
நிறுத்த யாரு?

மானாவரி நிலங்கள் முழுதாய்
விரவி எங்கும் கிடக்க
விளைஞ்ச நிலமெல்லாம்
வீண்போகுது பாரு

சோறுடைத்த நிலங்களெல்லாம்
மீத்தேன் எடுக்க
உடைந்தது பாரு

ஆழ்குழாயால் அதிருது பூமி
அடிமனசு
அர்த்தம் இல்லாமலா
கலங்குது காமி

விவசாயம் தளைக்குமா?
வாழ் நிலங்கள் நிலைக்குமா?
நிம்மதிதான் கிடைக்குமா?
நித்தம் வயிறு பிழைக்குமா?
ஆழ்துளைக் கிணறுகளால்
வயிறுகள் நிறையுமா?
பசித்துக் கிடக்கும் வயிற்றுக்கு
ஒரு கை சோறுதான் கிடைக்குமா?

நன்மை செய்யும் நோக்கில்
தீமையொன்று விளைய
விட்டோழிக்க வேண்டாமா?

உயிரழிக்கும்
தீவினையென்றறிந்து
மக்கள் சார்ந்த அரசு காக்கும்

மக்கள் சார்ந்த
அரசென்றால் காக்கும்.

## இருத்தல்

விதைகள்
மழை வரக் காத்திருக்கின்றன

விளைநிலங்கள்
விண்ணைத்தான் பார்த்திருக்கின்றன

பசிக்கும் வயிறுகளோ
சோறு பார்த்து.

# ஜொலிக்கும் புதுக்கோட்டை

உலகில் எத்தனை நாடிருக்கும்?
உலகில் எத்தனை ஊரிருக்கும்?
அத்தனை ஊரும் அணிவகுத்தும்
அடடா, எம்மூர் முன் நிற்கும்!

வைரம் கிடைக்கும் சில ஊரில்
தங்கம் கிடைக்கும் சில ஊரில்
தங்க வைர மனிதர் குழாம்
தங்கியிருப்பர் எம் ஊரில்!

கோவில் இருக்கும் சில ஊரில்
மசூதி இருக்கும் சில ஊரில்
சிலுவை லிங்கம் பிறை எல்லாம்
சேர்ந்து சிரிக்கும் எம் ஊரில்!

கவிஞர் இருப்பர் சில ஊரில்
கலைஞர் இருப்பர் சில ஊரில்
கலைஞர் கவிஞர் கள வீரர்
கலக்கி எடுப்பர் எம் ஊரில்!

ஆறுகள் இருக்கும் சில ஊரில்
ஆலைகள் இருக்கும் சில ஊரில்
அயரா உழைப்பை விதைப்பவர்கள்
அடர்ந்து இருப்பர் எம் ஊரில்!

உலகில் சூரியன் ஒன்றுண்டு
உலகில் சந்திரன் ஒன்றுண்டு
நிலத்தின் நிலவாய் சூரியனாய்
ஜொலிக்கும் எம் ஊர் புதுக்கோட்டை!

## நாளும் இன்பம்

இனி
ஓடிக் களைத்த சலிப்பில்லை
தேடிச் சேர்த்த நட்பு உண்டு
சாடி விரட்டும்
பகை இல்லை
பாடிக் களிக்கச் சபை உண்டு
போடும் புதிய சட்டைகளில்
என் வேர்வைத் துளியே செண்டாகும்
ஒவ்வொரு நொடியும்
உயிர்ப்பாக ஒரு வசந்தம்
இனியும் உண்டாகும்
விரல்கள் பற்றிக்
குலுக்குவதால் விரியும்
வட்டம் மகிழ்வூட்டும்
கவிகள் கேட்டுக் கிறங்கிப் போய்
அன்பர்கள் கூட்டம் தலை ஆட்டும்
மழையில் நனைந்தால்
சந்தோசம்
மந்திரப் புன்னகை என் கோசம்
மதியைப் பார்த்து 'ஹலோ' சொல்லி
மகிழும் இரவுகள் கொண்டாட்டம்
படித்து ருசிக்கப் புத்தகங்கள்
பழகிக் களிக்க நண்பர் குழாம்
குடும்பத்துக்குச் செலவழிக்கக்
கூடுதலாக மணித்துளிகள்
இனிவரும் நாளும் இன்பம்தான்
எல்லை எனக்கு இமயம்தான்.

## பூவிலங்கு...

காலில் கட்டிய சக்கரங்கள்
கழட்டி இரண்டு நாளாச்சு
கையில் கிடைக்கும் நொடியெல்லாம்
கற்றுத் தருகிற நூலாச்சு
நேரமில்லை என இருந்தேன்
இப்படி நேரும் என்ற நினைப்பில்லை
எதிர்பாராமல் வந்த வரம்
எனவே எனக்குச் சலிப்பில்லை
மனைவி மகன்கள் புடை சூழ
மனையின் அழகுகள் தினம் ரசித்தேன்
செங்கல் எங்கள் கதை சொல்ல
சேர்ந்து கேட்டு அதை ருசித்தேன்
புத்தக அடுக்குகள் புனரமைத்தேன்
பூத்த செடிகளை விசாரித்தேன்
எத்தனை முறைகள் அழித்தாலும்
எழும்புது சிலந்தி வலை அதிசயித்தேன்
அட்டனன்ஸ் முடிக்கும் பயமில்லை
அறிக்கைகள் கேட்கும் துயரில்லை
இத்தனை புதையல் கிடைக்குமென்றால்
எத்தனை நாளும் சிறையிருப்பேன்.

## சூத்திரம்

ஒப்பனை செய்த கற்பனையே
ஒளிரும் கவி அதை ஒத்துக்கொள்
பறவை இட்ட எச்சத்தில்
ஆலம் பார்க்கக் கற்றுக்கொள்.

ஒரு துளி விரித்தால்
கடலாகும்
ஒரு துளி பலருக்கு
உடலாகும்
வளரும் பிறையில்
முழு நிலவு
வறுமையை ஜெயித்து
நீ வளரு.

தமிழின் தனித்துவம்
ஃ ஆகும்
தைரியம் கொள் மனம்
எஃகாகும்
தாரகைகள்
நடுவினிலே
தனியாய்த் தெரிவதே
நிலவாகும்
ஆயிரம் மனிதர்கள்
இங்கிருப்பர்
ஆற்றல் கொண்டால்
நீ ஜெயிப்பாய்.

## எப்படி இப்படி

வளைய வரும்
இளைய சூரியனே
உன் வியர்வையில்
வந்த விளைச்சல் இது

எட்டுத் திக்கும் சுற்றி
பெற்றாய் பெரும் வெற்றி

ஆம்; நீ தமிழகத்தின்
தலைவிதி
மாற்றி எழுதிய
தளபதி

வள்ளுவன் வாக்குப் பலித்தது
காய்ந்து போயின என்பிலதுகள்

வானவில் கூட்டணியால்
கலங்கி நிற்கிறது காவி
'எஸ்'களுக்கெல்லாம்
'நோ' சொல்லியிருக்கிறது
தமிழகம்

முந்தைய முதல்வர்கள்
சுழலும் நாற்காலியில்
அமர்ந்திருந்தார்கள்

ஒவ்வொரு நொடியும்
சுழலும் முதல்வரை
முதன் முதலாய்ச்
சந்தித்திருக்கிறது
முதல்வர் நாற்காலி

ஓய்வின்றிச் சுற்றிவரும்
கடிகார முள்
நீ அதனையும் வென்ற
அதிகார முள்

இதுவரை வாங்கிய
மனுக்கள் எல்லாம்
மசால் வடை மடிக்கவே
பயன்பட்டு வந்தன

நீ வந்து வாங்கிய
பின் தான்
ஒவ்வொரு மனுவும்
உத்தரவானது

மஞ்சப்பைத் திட்டம்
தந்த மாமனிதனே
தமிழர்களின் நெஞ்சப்பை
முழுக்க உன்
நினைப்புத் தான்

படிப்படியாய் உயர்ந்தவரே
அதெப்படி ஏழைகள்
எண்ணப்படியே எல்லாம்
செய்கிறீர்கள்?

உம்போல் முதல்வர்
இனி இல்லை
உன் வெற்றிகளுக்கு
வானமே எல்லை.

## சிவப்பு

ஆரத்திச் சிவப்புக்கு
ஆசைப் படுகிறாய்
வெற்றிலைச் சிவப்பில்
விருப்பம் கொள்கிறாய்
மருதாணிச் சிவப்பில்
மகிழ்ந்து போகிறாய்
கொள்கையில் சிவப்பு மட்டும்
கூடாதா உனக்கு?

புரிந்து கொள்
தேகம் அடிபட்டாலும்
தேசம் அடிபட்டாலும்
முதலில் வெளிப்படுவது
சிவப்புத் தான்

அழுக்கை எரிக்கும்
நெருப்பு
அநீதிக்கு எதிராய்
உருட்டும் கண்கள்
உண்மையைப் பேசும்

நாக்கு
எல்லாமே சிவப்பு
என்பதுதான் சிறப்பு

வெற்றியில் துடிக்கும்
நெற்றியில்
குங்குமம் இருந்தால்
கொள்ளை அழகு

மதங்களைக் கடந்தும்
மனிதம் பேசும்
சிவந்த உதடுகள்

வர்ண பேதம் பார்ப்பதில்லை
சிவப்பு வண்ணம்

அக்கப்போர் பேசி
அலைகிற மனிதனே
வர்க்கப்போர்ப் பக்கம் வா

வண்ணச் சிவப்பை
மட்டையால் தீற்றினால்
வீடு பொலிவு பெறும்
தத்துவச் சிவப்பை
மண்டையில் ஏற்றினால்
நாடு பொலிவு பெறும்

கடைசியாய் ஒன்று
செம்மண் பாதையில் நடக்க
யாருக்குத்தான் பிடிக்காது!

# கண்ணீரும் புன்னகையும்

எஸ்பிபி பாடல் கேட்டு
நோ பிபீ என்றனர் பலர்
காலம் ஆற்றமுடியாத காயங்களை
அவன் கீதம் கேட்டு
ஆற்றிக்கொண்டது ஞாலம்
தங்கள் கண்ணீரையும்
புன்னகையையும் அவன்
குரல் வழி உணர்ந்தவர் கோடி
ஆயிரம் நிலவே வா
பாட்டுக் கேட்டு
கிறங்கிக் கிடந்தது ஒரு தலைமுறை
அந்தக் கானம் கேட்கத்தான்
வானம் அவனை
வரவழைத்துக் கொண்டதோ?

அடடா ஒரு பகலில் இருண்டுவிட்டதே
பல பேரின் இசை வானம்
பௌர்ணமி நிலாக் கூட
பையப் பையத் தானே பிறையாகும்
இந்தப் பாடும் நிலா
ஒரு நொடியில் உடைந்து விட்டதே
பாலுவுக்கும் பால் தெளிக்க நேர்ந்ததே
அய்யகோ ஆயிரம் செவிகளை
அடகு பிடித்தவன்
புலம்ப வைத்து விட்டுப் போய்விட்டானே
அரை லட்சம் பாடல்கள்
தந்த அபூர்வக் குரல் வளையை
அரை நொடியில்
நெரித்துப் போட்ட மரணமே
உனக்கு மன்னிப்பே கிடையாது.

## இதனால்
## சகலமானவர்களுக்கும்...

இடியோசையை வென்றுவிடுகிறது
பூ மலரும் சப்தம்

கருடனுக்கு மேலே பறக்கின்றது
பையன் விடும் பட்டம்

அசைந்து அசைந்து நடக்கும்
ஆனையைக் கடந்து
பறக்கிறது பட்டாம்பூச்சி

தடதடக்கும் புல்லட்டைத் தாண்டி
நொங்கு வண்டி ஓட்டுகிறான்
கிராமத்துச் சிறுவன்

முரட்டு மீசைத் தாத்தாவின்
கன்னத்தில் அறைகிறது
பேரனின் பிஞ்சு விரல்

கனத்த புத்தகங்களின் தத்துவங்களைப்
புறந்தள்ளிப் பேசப்படக்கூடும்
நல்ல கவிதையின் ஒரு வரி...

# பொரிகடலை

மூங்கில் காட்டில்
ட்ரோனாகி வண்டு பறக்கும் விர் என்று
நிலாச் சிலம்பு உடைத்தனால் சிதறிய
பரல்கள் வானத்தில்

புள்ளிகள் சேர்த்தால்
கோலம் வரும்
அனுபவம் சேர்த்தால்
ஞானம் வரும்

ரோஜாப் பூவின் பனித்துளியை
உழைப்பவன் வியர்வை
வென்று விடும்

கட்டிய மாலை
ஓரழகு
காட்டுப் பூக்கள்
பேரழகு

தவறைச் சுட்டும் விரலாகத்
தமிழ் கவி பேனா அறிவாயா?
வரிசை கட்டும் துயரங்கள்
பரிசாய் வெல்லும் பரீட்சைகள்தான்

இருட்டைச் சுமந்த
அறைக்குள்தான்
சுவிட்சும் உண்டு கண்டுபிடி.

# மகத்தான நொடி

அரிதார மனிதர்கள்
ஆயிரம் உண்டிங்கு
சரியான பேர்கள் சிலரே
வானத்து மீனென
உதிர்பவர் மத்தியில்
நிலவென ஒளிர்பவர் தலைவர்
ஆயுளின் நொடிகளை
வீணே கழிப்பவர்
ஆழியில் கரைத்த காயம்
தவறுகள் சகித்திடாத
தைரியம் கொள்வதே
ஜீவனின் அர்த்தமாகும்
தலைமுறைக் கோபத்தைத்
தலையிலே சுமந்தவன்
நிலையினை மாற்ற முனைவான்
ஆறிலும் சாவுதான்
நூறிலும் சாவுதான்
அது ஒன்றும் புதியதில்லை
மரணத்தை எதிர்கொள்ளும்
மகத்தான நொடி வரை
மனிதர்க்கு உதவ வேண்டும்
அறிந்திடு தமிழனே!
அறிவுடன் செயல்படு
சரித்திரம் உன்னைப் பாடும்.

# விழி நோக்கு

அல்லி, ரோஜா
அழகான பெயர்கள்
பூத்தோடு போடு
அழகு கூடும் பாரு
பூப்போட்ட புடவை
பூப்போட்ட சட்டை
பலரின் விருப்பம்
பூப்போட்ட தலையணை
உறை வைத்துத் தூங்கு
நிம்மதியான உறக்கம் வரும்
பூப்போட்ட கைக்குட்டையில் துடை
கண்ணீர் விரைந்து உலரும்
பிறந்த நாளுக்கு பொக்கே
மண நாளுக்கு மாலை
மரண அஞ்சலிக்கு மலர் வளையம்
பூக்களோடு புலரும் நாட்கள்
பூக்கும் செடி
நோக்கும் விழி
நட்சத்திரம்
மணக்க வேண்டும் என்று இல்லை
பூத்தலே வாழ்வு.

## வாழ்வு

பூக்கள் போயினும் மொட்டுக்கள் இருக்கும்
நாட்கள் கழிந்தும் ஆண்டுகள் கிடைக்கும்
பாரம் சுமந்தும் தூரம் கடப்போம்
வாழ்வின் சாரம் வாழ்வதே என்போம்
வானவில் கரைத்திடும் மழைத் துளி இல்லை
வாசல்கள் இல்லா வீடுகள் இல்லை
ஓட்டைகள் இல்லாக் குழல் எங்கும் இல்லை
வாட்டிடும் துயரங்கள் நிரந்தரம் இல்லை
பலமுறை வீசினால் வலையினில் மீன் விழும்
விழுந்து எழுந்தே மழலைக்கு நடை வரும்
அடித்துத் திருத்தினால் அழகிய கவி வரும்
அடிமேல் அடிவை இமயமும் வசப்படும்
மழையில் நனைகையில் குடை நமைக் காக்கும்
மனத்துயர் வருகையில் நம்பிக்கை காக்கும்
பாறையின் நடுவிலும் சிறு விதை முளைக்கும்
பயம் தவிர் மனிதா பாதைகள் கிளைக்கும்.

# கவி

கடல் அலை வீசிய சங்கு
கனலும் நெருப்புக் கங்கு
கூர் தீட்டி வைத்த கொம்பு
என் கவிதான் தமிழா நம்பு
விடியலைச் சுமந்த வானம்
விரித்தால் பெருகும் ஞானம்
குறி வைத்தெறிந்த பாணம்
என் கவி அவ்வண்ணம் தோணும்
தாகம் தீர்க்கும் மேகம்
தடவிக் கொடுக்கும் ராகம்
குழல் வழி கசியும் கீதம்
என் கவி எல்லாம் ஆகும்
விரல் வழி பூக்கும் கோலம்
வேகம் கூட்டும் மேளம்
இணைப்பை விரும்பும் பாலம்
என் கவியில் ஒளிரும் ஞாலம்.

# புதிய பாடம்

சந்தை வெளி மாந்தர்களின்
சிந்தையிலே தீக் கொளுத்த
கந்தகக் கவிகள் பல
கச்சிதமாய் வடிப்பவன் நான்

நீர் காணா நிலம் போல
பிளவுண்ட மனங்களுக்கு
அன்பு மழை பொழியும்
ஆகாய மேகம் நான்

கவலை வலை நெறிக்க
கண்களிலே நீர் சுரக்க
பொழுதெல்லாம் அழுபவர்க்குப்
போக்கிடமாய் இருப்பவன் நான்

சுவர் எழுப்பக் கல் எடுக்கும்
சுயநல மனிதரிடம்
பாலம் கட்டிப் பலம் சேர்க்கும்
பாடம் சொல்லித் தருபவன் நான்.

## அலை

விழுவதும் எழுவதும்தான்
அலைகளின் வேலையாக இருக்கிறது
எப்போதும்

பழைய துளிகளைச்
சுவீகரித்துக்கொண்டுதான்
புறப்பட்டு வருகின்றன
புதிய அலைகள்

பாதங்களை நனைத்துச்
சிலிர்க்க வைக்கும்
சின்ன அலைகளை விடவும்
'ஓ'வெனப் பெருஞ்சத்தத்துடன்
எழும் அலைகளையே
பலரும் விரும்புகின்றனர்

அலைகளைப் பார்த்து
அதிசயிக்கும் சிலரோ
கல்லெறிவதற்குத் தம்
கரம் உயர்த்துவதில்லை

சின்னக் குளத்திற்குள் அசையும்
அலைகளை நினைத்து
வியந்து கொண்டிருக்கும் குழந்தைகளை
அடித்துத் தள்ளுகின்றன
கடலின் காட்டாற்றின் பேரலைகள்

பாறைகளில் மோதி மோதி
அதைச் சிதைப்பதும்
சின்னக் கற்களையெல்லாம்
நுண் மணலாக்கிப் பரப்பி வைப்பதும்
அலைகளின் அற்புத விளையாட்டுத்தான்

அலைகளைப் பார்த்து
வியக்கும் பலரும்
கரைகளைக் கவனிப்பதில்லை

எத்தனை பெரிய அலைகளைக் காட்டி
மிரட்டினாலும்
அடுத்த முறையும்
கையில் வலையுடன்
கடலுக்குப் போவதை
நிறுத்துவதேயில்லை பாட்டாளி.

## துய்யொளி விழிகள்

போர்வையாம் பொட்டலத்தில்
உன்னையே கட்டிக்கொண்டு
சோர்வையே சுமக்கும் மனிதா
புலரியைக் காண்போம் வா வா
மூளையின் முடிச்சுகட்குள்
முனைப்பினை கொண்டு சேர்க்கும்
காப்பியின் கோப்பை ஏந்தி
காலைக்கு வணக்கம் சொல்வோம்
மஞ்சளாய்த் தோன்றி - கொஞ்சம்
தங்கமாய் மாறி
கொஞ்சும் ஆரஞ்சு வண்ணம்
கொள்ளும் ஆகாயம்
பார்த்தால் போதும்
அடைந்ததோர் காயம் போகும்
டிரில் மாஸ்டர் எவருமின்றி
வரிசையாய்த் தாமே நின்று
வானத்தைச் சுற்றிப் பார்க்கும்
புட்களின் பாடம் கற்போம்
விரக்தியில் தோய்த்தெடுத்த
நொடிகளை விலக்கிவிட்டு
துலக்கிய விளக்கினைப் போல்
துய்யொளி விழிகள் கொள்வோம்
கிழித்திடும் தாளாய்
நாளைக் கழித்தது போதும்
காலம் நம்மை பழித்தது போதும்
இனியேனும் விழித்துக் கொள்வோம்
இன்பமோர் கோடி சேர்ப்போம்.

## புது உலகம் மலரும்

வாழ்ந்த மண்ணில் ஈரம் இல்ல
வாழ்க்கை கொடுக்க யாரும் இல்ல
சோர்ந்த போது கண்ணீர் துடைக்க
சொந்த பந்தம் வருவதில்ல
குத்தம் சொல்லிப் பேசும்
சுத்தம் இல்லாத் தேசம்
பாடை கட்டும் போதும்
பகடி சொல்லிப் பேசும்
எத்தனை நாள் அழுவோம்
எப்படியும் எழுவோம்

கட்டை விரலில் உலகம் வரும்
கட்டுக் கட்டாய்ப் பணமும் வரும்
சட்டைப் பையில் எல்லாம் அடங்க
சந்தோஷப் பாட்டு காற்றில் வரும்
சின்னப் புள்ள நானும்
மன்ன வனாய் மாற
உன்னைப் பற்றி வருவேன் - நீ
உதறினாலும் தொடர்வேன்

அழுக்கு உலகம் மாறணுமே
அழுகும் துயரம் தீரணுமே
ஆசை கொண்டு மோசம் செய்வோர்
ஆட்டம் எல்லாம் அடங்கணுமே
புத்தம் புது உலகம்
ஒண்ணு இங்கு மலரும்
தத்துவங்கள் அல்ல
தைரியங்கள் உதவும்.

# ஃபிடலே!

ஃபிடலே!
பொங்கிய செங்கடலே!
தீவின் தீர்வே!
உனக்கு முன்னர் கியூபா
உலகின் சர்க்கரைக் கிண்ணம்!
இப்போதோ அதிரடி புரட்சியின்
அடையாளச் சின்னம்!

ஃபிடலே!
புரட்சி நெருப்பின் தழலே!
ஏகாதிபத்தியத்தின் தூக்கத்தைத்
திருடிய சத்தியமே!
638 முறை
ஆதிக்க வர்க்கம் உன்னை அழிக்க
நினைத்தது!
மறுபடி மறுபடி எழுந்தாய்!
மாற்றத்தின் விதையாய் விழுந்தாய்!

அமெரிக்காவை எதிர்த்தாய்!
அமெரிக்கர்களுக்கு துயரம்
வந்த போதோ
தோள் கொடுத்தாய்!
அநீதிக்கு எதிராக உருட்டும்
விழிகளிலும்
ஆதரவாக பேசும் உதடுகளிலும்
இருப்பது சிவப்பு தான் என
அகிலத்திற்கே அறிவித்தாய் - தீ
ஆயிரக்கான மனிதர்களின்
அறிவுத்தாய்!

ஃபிடலே!
காலம் எழுதிய கவி மடலே!
உன் தேசத்தில் கல்வி இலவசம்
மருத்துவம் இலவசம்
விளையும் நிலமெல்லாம்
விவசாயிகள் வசம்!
உன் சின்னஞ்சிறு தீவோ
இன்னும் ஒரு சொர்க்கம்!

ஃபிடலே!
வியர்வை மனிதர்களின் விருப்பப்
பாடலே!
உன் ஒரு கையில் பிஸ்டல்
மறு கையில் புத்தகம்!
பத்து விரல்களையும் யுத்த
விரல்களாக்கினாய்!
உன் தாடியின் முடியாய் மாறிட
வேண்டி
ஏங்கி கிடக்கும் இளைஞர்கள் கோடி!

காம்ரேட் காஸ்ட்ரோ!
கசியும் நீர் துடைத்து
கையசைக்கிறோம்!
போய் வாருங்கள்!
இப்போதோ உன் வழி நடக்க
பல கோடி கால்கள்!
உன் லட்சியம் முழக்க
லட்சம் நாவுகள்!

## ஃபிடலே!

எப்படியும் யாம் ஜெயிப்போம்
தப்படி வைத்தவனே தெரிந்து கொள்

கண்ணிரண்டு உனக்கு
எமக்கு மூன்றாம் கண் இருக்கு

உடைக்கிறாய் நீ படைக்கிறோம் நாங்கள்
ஆற்றல் அதிகம் எமக்கு

சிலைகளின் தலைகளில் எச்சமிட்டாய்
நீ காகம்

பொழிந்து மகிழ்ந்து
நகர்கிறோம் நாங்கள் - மேகம்

அணுகுண்டு துப்பாக்கி பீரங்கி
அனைத்தையும் எம் சொல்லும் வெல்லும்

காட்டு பூச்சிகள் படையெடுப்பில்
கானக அரசும் நடுநடுங்கும்
பாட்டு பூச்சிகள் படையெடுத்தோம்
பார் இனி பூமியல் பூகம்பம்

நூலாம் படையே நூலாம் படையே
நூல்களின் படை யாம் மோதாதே

நீ வலை விரித்தால்
வெறும் மீன்தான் விழும்
யாம் கலை விரித்தால்
விண்மீனே வந்து விழும்

ஆடி கொண்டவன் சிலை
குறுந்தாடி கொண்டவன் சிலை
தடி கொண்டவன் சிலை
தேடி சிதைத்து பழி தேடி கொண்டவனே
எனக்கு தெரியும்
உன் தலைக்குள் இருப்பது
குப்பை கூடை

அந்த மூவர் எங்கள் மூலவர்
உளிகளில் செதக்கிய சிலையன்று
உணர்ச்சி துளிகளால் செதுக்கிய சிலை
இனி மைல் கல் உள்ள இடமெல்லாம்
சிலைகள்
தல புராணம் கண்ட தமிழகமே
இனி சிலை புராணம்

சிறு அலை விழுந்தால்
பெரும் அலை எழும்பும்
தண்டு வெட்டி நட்டால்
வாழை கன்று பல முளைக்கும்
ஒரு சிலை உடைத்தால்
பல நூறு காணும் வரலாறு
ஆறாம் விரலாய் உளி கொண்ட சிற்பி
ஒரு புதிய பாடம் கற்பி

உடைந்த துண்டுகள் பீடமாகட்டும்
உருவாகும் சிலைகள் பாடமாகட்டும்
வழக்கமாய் வரும் வானவில் போதும்
இனி புதுவில் பார்த்து பொழியட்டும் மேகம்
உழைப்பவன் நிறமாம் சுறுப்பு
வர்க்க போருக்கு அழைக்கும் சிவப்பு
திமிரும் நீலம் புது நெருப்பு
இவ்வண்ணம் கொண்டு வரட்டும் வானவில்
இளைத்தோர்க்கெல்லாம் அதுவே ஞானவில்

தமிழா தயக்கமா! இணைந்து கொள்!!

## எல்லாமுமா?

எதப்பா கவிதை?
கூண்டு மணியா?
கூரான பேனாவா?
புத்தகத்தின் பக்கமா?
வாசல் கோலமா?

எதப்பா கவிதை?
நட்சத்திரக் கூட்டமா?
கலர்க் குடையா?
மலர்ச் செடியா?
மைல் கல்லா?
விரியும் பாதையா?

எதப்பா கவிதை?
பெரு மழையா?
பனித் துளியா?
ஞானப் புதையலா?
வானவில்லா?

எதப்பா கவிதை?
ஆழக்கடலா?
அழகுத் தெப்பமா?
உண்மையின் குரலா?
ஊரின் துடிப்பா?
புயல் காற்றா?
வெடிக்கும் மின்னலா?

எதப்பா கவிதை?
பற்றும் நெருப்பா?
பனிக்கட்டியா?
இதழின் புன்னகையா?
இருமல் மருந்தா?

எதப்பா கவிதை?
அன்னை மடியா?
ஆயுத எழுத்தா?
வெற்றிலைச் செல்லமா?
மூலிகை கூடையா?

எதப்பா கவிதை?
காலக்கண்ணாடியா?
மயிலிறகா?
முளைத்த சிறகா?
எல்லாமுமா?

# களம்

கூர் தீட்டிய
வார்த்தைகளை
குறிவைத்து எறிகிறாய்.
அடிக்கடி
அம்பு விடுகிறாய்.
கசியும் குருதி பார்த்து
ரகசியமாய்
மகிழ்ந்து போகிறாய்.

கால் வாரிவிட
ஆள் தேடி அலைகிறாய்.
கையில் கேடயம்
எடுக்க வைத்து
யுத்தத்தின் போக்கைத்
திசை திருப்புகிறாய்.
எது எதுவோ செய்து
கவனம் கலைக்கிறாய்.

தெரிந்து கொள்.
உன் எதிர்ப்பை
தூசென உதறி
வெற்றியின் திசையில்
விரைந்து கொண்டிருக்கிறேன்.
நான்.